ஜீவ ஹிம்ச நிவாரண சங்கத்தாருடைய கொள்கை.

அருளுடைமை.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(திருக்குறள்.)

162038

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்ச நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தியவர்களும் சக்ரவர்த்தினியாரும் பரிபாலகர்களாக விருப்பதன்றி, அவர்களின் ஜேஷ்ட புதல்வரான மஹிமையுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பிரபுஅவர்கள் அக்ராசனாதிபதியாயிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்ச நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயம்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப் போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவையென்றும், அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டென்றும், ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டுமென்றும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்க வேண்டுமென்றும், இன்னும் அநேக நீதிகளை ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சரப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமாயதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்ய வேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்யப்படுகிறது.

4. இப்புது வருஷத்தின் ஆரம்பத்தில் நாம் சுபவசனமாகச் சொல்வதாவது, இப்பத்திரிகையைப் படிப்பவர்களுக்கு ஜந்துக்களிடத்தில் ஜீவகாருண்யமேயன்றி, மற்ற எல்லாவித நற்குணங்களும் நற்செய்கைகளும், அவற்றாலாகும் நற்பயன்களும் மேன்மேலுமுண்டாகும்படிக் கடவுள் அவர்களைக் கடாக்ஷிப்பாராக! நமது நண்பர்கள் இந்தச் சஞ்சிகையைத் தங்கள் தங்கள் பந்து மித்திரர்களுக்குக் காட்டி அவர்களுடைய ஆதரவும் சார்பும் நமக்குக் கிடைக்கும்படியான முயற்சி செய்வாராக!

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XIII.] **FEBRUARY, 1913-௵ பெப்ருவரி௴.** [இலக்கம் 1.

இராஜ்யத்தில் ஜந்துக்களுக்குள்ள சம்பந்தம்.

சில வருஷங்களாக ஆங்கிலேய இராஜ்யம் பல வழிகளில் பழமையான வொழுக்கங்களை நீக்கி நவீன வொழுக்கங்களை யனுசரித்து வருகிறதென்பதை யாவரும் ஒத்துக்கொள்வார்கள். இந்த இராஜ்யத்தில் வாயில்லாப் பிராணிகளுக்குச் சரியான நீதி செலுத்தப்படுகிறதில்லை யென்பதை யுணர்ந்து அவைகளின் விஷயத்தில் இன்னம் விரிவாக நியாயஞ் செலுத்துவதினிமித்தஞ் சிரத்தையெடுத்துக்கொள்வது அப்புதுவொழுக்கங்களில் சிரேஷ்டமானதென்று தோன்றுகிறது. தற்காலத்தி லுலகிலுள்ள வல்லரசுகளில் முதலாவதாக இவ்வாங்கிலேய விராஜ்ய மிருப்பதற்கு முக்கியகாரணம் அதன் வியாபாரமும் செல்வமுமே. அவ்வித வியாபாரமுஞ் செல்வமும், ஜனங்களி னைக்கியமும் ஜந்துக்களினுழைப்புமில்லாமல் விர்த்தியடையா. ஆகையால் அந்த இராஜ்ய முழுவதும் ஜந்துக்களினிடத்தி லிரக்கமுண்டாகி, அவைகளின் பாதுகாப்பிற்காகச் சட்டங்க ளேற்படுத்துவது இன்றியமையாததாயிற்று.

அம்மாதிரியான சட்டங்கள் இங்கிலாந்தி லநேக மேற்பட்டிருக்க இந்தியாவில் ஜந்துக்கள் பலவிதமான ஹிம்சைகளுக் குட்படுத்தப்படுகின்றனவென்று மவைகளின் சம்ரட்சணையின்பொருட்டுப் போதுமானவளவு சட்டங்கள் நிரூபிக்கப்படவில்லையென்றுந் தெரிகிறது. நாகரீகம் நிறைந்த வொரு ஜாதியாரால் ஆளப்பட்டும், வாயில்லாப் பிராணிகளிடத்தில் பட்சமாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்திப் போதிக்கிற அதஸ்தர்களால் குடியிருக்கப்பெற்றுமுள்ள தேசத்தில், நினைக்கற்கரிய கொடுஞ்செயல்கள் நடந்தேறிவருகிறதற் கிடமுண்டாகும்படி ராஜாங்கத்தாரும் பொதுஜனங்களும் ஜந்துக்களின் விஷயத்திலுபேட்சையாயிருப்பது வியப்பாயிருக்கிறது. இந்திய விஷயங்களில் சிறிது கவனமுள்ளவர்கள் இங்கு பிராணிகளின் சம்ரட்சணை யக்குறித்த சட்டப்பாடு குறைவுள்ளதாயிருப்பதை யறிவார்கள்.

இத்தேசத்தின் ஜீவ ஹிம்சை நிவாரண சட்டங்களில் முக்கியமானது 1890-ம் வருஷத்து 11-வது ஆக்டு. அது இந்தியா முழுவதிலுஞ் சகஜமாய்ச் செலுத்தப்படக்கூடிய தன்மையதல்ல. எந்தெந்த ஜில்லாக்களிலதை யநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டிய தவசியமென்று சுற்றுப்புறங்களிலுள்ள பொதுஜனங்க ளபிப்பிராயப்படுகிறார்களோ, அந்தந்த ஜில்லா கெஜட்டுகளில் பிரசுரஞ்செய்த பின்னரே அந்த ஆக்டை அவ்விடங்களில் கையாளலாம். இந்த ஆக்டின்படி யெவ்விதமான குரூரச் செயல்களையுந் தண்டனைக்குட்படுத்த முடியுமாயினுமதைச் செலுத்துவதில் பல நிர்ப்பந்தங்களிருப்பதினா லதன் பிரயோஜன முற்றிலுமடைய முடியவில்லை. அதாவது, வீதிகளிலும் மற்றும் பொது ஜனங்கள் யாதொரு ஆட்சேபமுமின்றிச்செல்லக்கூடிய கட்டடங்களிலும் பகிரங்கமாய்ச் செய்யப்படுகிற ஹிம்சைகளைத் தண்டனைக்குட்படுத்த இச்சட்டமதிகாரங்கொடுக்கிறது. ஆனால், ஆவரணங்களிலிருக்கு மெண்ணெய்ச் செக்குகளில் பகல்காலத்திலுங்கூட நடக்குங் கொடிய ஹிம்சைகளையும், வண்டிகளி லதிகமான சுமையேற்றுதல், அதிகதூரம் வண்டிகளை

யோட்டிச் செல்லுதல், மாடுகளையுங் குதிரைகளையும் நோயுள்ள விடங்களிலும் காற்றடைப்பான தொழுவங்களிலுங் கட்டிவைத்தல், அவைகளுக்குக் குறைவான தீனி போடுதல், இடையர் கன்றுகளுக்குப் பால் விடாமலும் தகுந்தபடி பரிபாலியாமலும் தோலுமெலும்புமாய்க் கழியவிடுதல் முதலிய கொடுஞ் செய்கைகளையுந் தடுப்பதற்கு இந்த சட்டம் சக்தியற்றதாயிருக்கிறது.

ஆகவே ஒருவன் தன் வீட்டுக்குள் பிராணிகளுக்கு எவ்வித கொடுமை விளைப்பினுங் கேள்வியில்லை. சென்னை இராஜதானியிலுள்ள எண்ணெய்ச் செக்குகளில் நாளொன்றுக்குப் பதினெட்டு மணிநேரம் எருதுகள் வேலை செய்கின்றனவாம்.

வங்காளத்தில் மகா பாதகமான தொழிலொன்று நடந்துவருகிறதாம். அதாவது ஆடுகளை வுயிருடன் தோலுரிப்பது, இவ்விதமா யுரிக்கப்படுந் தோலானது இறந்த ஆட்டின் தோலைக்காட்டிலும் நீண்டிருப்பதனால் அதிக விலைக்கு விற்கக்கூடுமாம். இக்கொடுந்தொழிலைக் கட்டடங்களுக்குள் புரிகிறார்களாகையா லவர்கள் தண்டனையினின்றுந் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். ஒருக்கால் யாராவது அகப்பட்டுக்கொண்டு தண்டனைக்குக் கொண்டுவரப்பட்டாலுமவர்களுக்குக்கிடைக்கும் தண்டனை சொற்ப அபராதத்துடன் முடிந்துவிடுகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாகக் கல்கத்தா ஜீ. ஹி. நி. சங்கத்தின் 1910-ம் வருஷத்து ரிப்போர்ட்டில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது: "சிலநாளைக்கு முன் கல்கத்தா போலீஸ் கோர்ட்டில் ஒரு வெள்ளாட்டை வுயிருடன் தோலுரித்ததற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட வொருவன் 20 ரூபாய் அபராதத்துடன் விடுபட்டான். 1890-ம் வருஷத்து 11-வது ஆக்ட்டில் எந்தப் பிராணியையாவது அனாவசியமாய்க் குரூரமாக வதைத்துக் கொல்லுகிறவர்களை 200 ரூபாய் அபராதமாவது ஆறுமாதக் காவலாவது, அல்லது இரண்டையுமாவது விதித்துத் தண்டிக்கலாமென்று கூறியிருக்கிறது. இக்கொடுந்தொழி லதிகமாக நடக்கிறதென்று யாவருக்குந் தெரிந்தபோதிலுங் குற்றவாளிகளைப் பொறுக்கிக் கண்டுபிடித்து நியாயஸ்தலங்களுக்குக் கொண்டுவருவது மிகவும் கஷ்டமான காரியமாயிருப்பதினால் அவ்வாறு அரிதாகக் கண்டுபிடிக்கப்படுகிற குற்றவாளிகளை அற்ப சிட்சையுடன் விடுதலை செய்வது மிகவும் விசனிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது."

மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் மற்றொரு குறைபாடென்னவென்றால் முடமானவையு மெலிந்தவையுமான குதிரைகளையும் எருதுகளையும் வண்டியில் பூட்டின குற்றவாளிகளை மாஜிஸ்திரேட்டுகள் விசாரிக்கிறவரையில் அந்த ஜந்துக்களை மாஜிஸ்திரேட்டுகளின் வசத்தில் நிறுத்திவைக்கக் கூடாதாம். இதனாலென்ன விளைகிறதென்றால் விசாரணை சமயங்களி லவ்வண்டிக்காரர்கள் வேறு நல்ல மிருகங்களைக் கொண்டுவந்து காண்பித்து அதிகாரிகளை யேமாற்றித் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். அதுவுமன்றி இவ்வித குற்றவாளிகளைப் போலீஸார் கையும் பிடியுமாகப் பிடிக்கக்கூடாதாம். அவர்களுக்கு சம்மன் அனுப்பித்தான் விசாரணைக்கழைக்கவேண்டுமாம். அப்படிக்கின்றி, யாராவது மிருகங்களை ஹிம்சிப்பதைக் கண்டவுடன் அல்லது கேள்விப்பட்டவுடன் போலீஸ்காரர் அம்மிருகங்களை யோட்டிக்கொண்டுபோய்ப் பத்திரஞ்செய்து விசாரணை சமயத்தில் மாஜிஸ்திரேட்டுகளின் பரிசோதனைக்காகக் கொண்டுவருவதற்கும், யாராகிலும் வேலைசெய்யத் திராணியற்ற மிருகங்களை வைத்துக்கொண்டு அவைகளை ஹிம்சித்து வேலைவாங்குகிறதாகத் தெரியவரும் பட்சத்தில் அவர்களுடைய சுவாதீனத்தினிலிருந்து அம்மிருகங்களை விடுவிக்கவும், அதிகாரங்கொடுத்தால் உசிதமாயிருக்கும்.

சாதாரணமாய் இந்தியர்கள் குரூரமான செய்கைகளைச் செய்யு மியல்பினரல்லவென்பது பொதுவான வபிப்பிராயம். ஆயினு மநேகர் சொல்லுதற்கரிய பலவிதமான கெட்ட செய்கைகளைச் செய்கிறார்கள். ஒரு தடவை கல்கத்தாவில் சில குதிரைச்சேவகர்கள் சேர்ந்து ஒரு பெருச்சாளியைப் பிடித்து அதைக் கெரொசின் எண்ணெயில் தோய்த்துக் கொளுத்திவிட்டார்களாம். இக்குற்றத்திற்காகப் பத்து ரூபா யபராதம் விதிக்கப்பட்டார்கள். பம்பாய் நகரத்தில் ஒரு குதிரைவண்டிக்காரன் சவாரி போகையில் குதிரையை யடிக்க அது வண்டியைக் கவிழ்த்துவிட்டதாம். அதற்காக அவன் அக்குதிரையின் நாக்கைப் பிடித்திழுத்துப் பலமாக வொரு ஆணியில் 2 மணிநேரம் கட்டிவைத்தானாம். இதுவு மதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு அவனுக் கொருமாதகாலம் கடுங்காவல் விதித்தார்கள். இன்னும் இந்திய தபால்வண்டிக் குதிரைகள் நிலக்கரி கனிகளில் வேலைசெய்கிற குதிரைகள் இந்திய ராணுவங்களில் கிழத்தனத்தினாலும் திராணி குறைந்துவிடுவதினாலும் உபயோகமற்றவைகளாகி மிகக் குறைந்த விலைக்கு ஏலத்தில் விற்கப்படும் குதிரைகள் ஆகிய இவைகள் படுகிற கஷ்டம் அதிகம். குடகு நாட்டிலுள்ள காப்பித்தோட்டங்களிலிருந்து காப்பிச்சுமைகளை யேற்றி யனுப்புகிற வண்டிகளில் பூட்டப்படுகிற மைசூர் எருதுகளின் நிலைமையும் பரிதபிக்கத்தக்கதே. இவ்விஷயத்தில் ஒவ்வொரு முனிசிபல் கமிட்டியாருஞ் சிரத்தை யெடுத்துக்கொண்டு இன்ன பரிமாணமுள்ள குதிரையோ எருதோ, இவ்வளவு பாரத்திற்குமேல் இழுக்கும்படி செய்யக்கூடாதென்று அந்தந்த ஜந்துக்களுக்குத் தகுந்தபடி நிபந்தனைகளை யேற்படுத்தி, மீறி நடப்பவர்களைத் தண்டனைக் குட்படுத்த வேண்டும்.

மற்றொருவிதமான கொடுமையு மித்தேசத்தில் நடந்துவருகிறது. அநேக வுற்சவங்களிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் சில பிச்சைக்காரர் ஆறுகாலுள்ள எருதுகளையும் இரண்டு முசுப்புள்ள வெருதுகளையுங் கொண்டுவைத்துக்கொண்டு, அவை அபூர்வமான சிருஷ்டியென றெல்லாருக்குங் காண்பித்துப் பிச்சை வாங்குகிறார்கள். விசாரிக்குமிடத்திலவை அபூர்வ சிருஷ்டிகளல்லவென்றும், அந்த பிச்சைக்காரர்களுடைய கொடுமையான கைகளின் வேலைத்திறமையென்றும் வெளியாயிற்று. இறந்துபோன கன்றுக்குட்டிகளின் கால்களையும் முசுப்புகளையு மறுத்தெடுத்து உயிருள்ள மாடுகளின் தேகத்தில் தைத்து அக்காயங்களை யாற்றுகிறார்களாம். அதனாலம்மிருகங்களுக்கு எவ்வளவு துன்பமுண்டாகும். அவர்க ளிக்காரியத்தை மலைக்குகை முதலிய மறைவிடங்களில் செய்வதனாலவர்களைக் கண்டுபிடிக்க முடிகிறதில்லை. ஆகையால் அப்படிப்பட்ட மிருகங்களையே யாரும் கொண்டுவரக் கூடாதென்று விதி யேற்படுமானால் இப்பாவத்தொழிலைத் தவிர்க்கலாம்.

மதவிஷயமாய் ஆடுமாடுகளைப் பலிகொடுக்கிற வழக்கமும் விரும்பத்தக்கதல்ல.

ஆனால் ஜீவஹிம்சை நிவாரண சட்டங்கள் மதசம்மதமாய்ப் பிராணிகளைக் கொல்வது குற்றமாகாதென்று விவரமாய்க் கூறுகிறது. நவராத்திரியென்று சொல்லப்படுகிற துர்க்கை பூஜைகாலத்தில் கல்கத்தா நகரத்துக் காளி கோவிலுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தெருக்களில் ஆயிரக்கணக்கான ஆடுகளின் இரத்தம் பிரவாகமாக வோடுமாம். அந்த ரத்தத்தின் துர்க்கந்தம் வெகுதூரம் வீசுமாம். இத்தேசத்தை யாங்கிலேயர் அரசாளவாரம்பித்த காலத்தில் காளிதேவிக்கு நரபலிகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதையும், கைம்பெண்கள் உடன்கட்டையேறுகிற வழக்கத்தையும் இராஜாங்கத்தார் நிறுத்திவிடவில்லையா? அக்காலத்து இந்தியரின் மனோநிலைக்கு விரோதமாக விருந்திருந்தாலும் அந்த முயற்சியில் இராஜாங்கத்தாருக் கதிகமாய்த் தடைகளுண்டானதாகத் தெரியவில்லை. அதைப்போலவே இப்பொழுது வாயில்லாப் பிராணிகளினுயிரும் மனிதருடைய வுயிருக்குத் தாழ்வானதல்லவென்கிற வெண்ணமெங்கும் வியாபித்திருக்கிறதினால் அப்பலிகளை நிறுத்த யத்தனிப்பது தகுதியாகவிருக்கும். அநேக இந்தியர்களே இக்கொடுமையை நிறுத்தும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய ஜீவ ஹிம்சை நிவாரண சட்டங்களை யின்னும் விரிவாகக் கையாளுவதற்குப் பல இடையூறுகளிருப்பதாக ஆங்கில வுத்தியோகஸ்தர் சொல்லிவிடுகிறார்கள். அவ்விடையூறுகளின் தன்மையையும் அவைகளை நிவர்த்திப்பதற்குள்ள வுபாயங்களையும் பற்றி யேன் விசாரிக்கத் தலைப்படக்கூடாது? இந்தக் காரிய மநேக ஆங்கிலேயர்களால் விரும்பப்பட்டதாயும் நாகரீகமடைந்த இந்தியர்களி னபிப்பிராயத்துக் கிணங்கினதாயுமிருப்பதினால் அவ்வளவா யிடையூறுகளுள்ளதாயிருக்குமென் றெண்ணுவதற் கிடமில்லை. எப்படியிருந்தபோதிலு மிந்த விஷயத்தைப்பற்றி எல்லா விவரங்களையுந் தீர விசாரிப்பதற்காக சில அதிகாரிகளை நியமித்து பிரிடிஷ் அரசாட்சி ஸ்தலங்களில் முக்கியமானதா யிருக்கிற தேசத்து ஊமை ஜந்துக்களின் நிலைமையைச் சீர்திருத்த யத்தனிப்பது மிகவும் அவசியமானது.

கனம்பொருந்திய சார்ல்டன் துரைசானி.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்து ஜந்து விநோதக் காட்சி–1912.

சாமான்னியஜனங்களுக்குஜந்துக்களினிடத்தில் காருண்யமுண்டாகும்படி யவர்களை யுற்சாகப்படுத்தும்பொருட்டு, சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தார் வருஷாவருஷம் நடத்திவருகிற ஜந்து விநோதக் காட்சி கடந்த வருஷத்தில் டிசெம்பர் மாதம் 14-ம் தேதி சனிக்கிழமையன்று மாட்சிமைதங்கிய கவர்னரவர்களாகிய லார்டு பெண்ட்லண்டு பிரபுவினுடையவும் அவருடைய தேவியாருடையவும் பரிபாலனத்தின்கீழ் நடந்தேறிற்று. கவர்ன்மெண்ட் ஹவுசில் விருந்தினராக வந்திருந்த கர்னல் ஆர். எம். பூர் துரையவர்களும் அவருடைய மனைவியாரும் அவர்களுடன் அக்காட்சிக்கு விஜயஞ்செய்தார்கள். அவர்களெல்லாரையும் சங்கத்தலைவராகிய தி ஆனரபில் ஸர் ஆர்னல்டு ஒயிட் துரையவர்களும், காரியதரிசியாகிய மிஸ்டர் எம். ஏ. திருநாராயணசாரியாரும் உபசாரத்துடன் வரவேற்றுக் காட்சியின் பல பிரிவுகளுக்கவர்களை யழைத்துச் சென்றார்கள்.

முதலில் பரிசோதிக்கப்பட்ட வகுப்பு வாடகை வண்டியிழுக்கும் எருதுகள். அவைகளில் பல மிகவும் நேர்த்தியானவைகளாயிருந்தன. அதன்பிறகு ஜட்கா வண்டிக் குதிரைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டன. சுமார் 25 குதிரைகள் நன்றாய்ப் போஷிக்கப்பட்டனவாயிருந்தன. ஆனால் அங்கே வெகுமதிக ளளிக்கப்பட்ட குதிரைகளுக்கும் சாதாரணமாய்த்தெருக்களில்காணப்படுகிறஜட்காவண்டிக் குதிரைகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. மூன்றாவது, வண்ணாக் கழுதைகளின் வகுப்பு. இவைகளிலநேகம் மிகவும் ஈனமான ஸ்திதியிலிருந்தன. சென்னையிலுள்ள வண்ணார் தங்களுடைய கழுதைகளினிடத்தில் வேலையைமட்டும் பூர்த்தியாக வாங்கி அவைகளின் போஷணையைப் பற்றிச் சிறிதுங் கவலை யெடுத்துக்கொள்வதில்லை. ஆகையால் சங்கத்தார் இந்த வண்ணாக் கழுதைகளை நன்றாய் வளர்க்கும்படி செய்வதில் கொஞ்சம் பிரயத்தனஞ்செய்தால் நலமாயிருக்கும்.

நாய்களின் வகுப்பு மூன்று தரமாகப் பிரிக்கப்பட்டன. அவைகளில் டெரியர் (Terrier) என்கிற ஜாதி நாய்கள்தான் விசேஷமாய்க் கொண்டுவரப்பட்டிருந்தன. இராணுவ சேவகர்கள் கொண்டுவந்தவை தவிர மற்றவைகளி லொன்றேனும் நல்ல தோற்றமுள்ளதாயில்லை. நாய்களுக்காகக் கொடுக்கப்பட்ட நான்கு வெகுமதிகளும் இராணுவ சேவகர்களுக்கே கிடைத்தன.

14 பிடிகளுக்கு மேற்பட்ட வாடகை வண்டிக் குதிரைகளி லுயர்ந்ததற்கென்று நியமிக்கப்பட்ட வெகுமதி பார்க் டவுனிலிருக்கும் மிஸ்டர் B. Vaz என்பவருக் களிக்கப்பட்டது. வாடகை வண்டிகளைப்பற்றிப் புதிய சட்டங்க ளேற்பட்டும் இக்காட்சியில் இவ்வகுப்புக் குதிரைகள் அதிக சொல்பமாகத்தான் காணப்பட்டன.

தன் எஜமானனைப் பின்பற்றித் திரியும் ஜந்துக்களில் பழக்கம்போல வெள்ளாடுகளே வெகுமதிகளைப் பெற்றன.

நன்றாய்ப் போஷிக்கப்பட்ட பசுக்களில் பல நேர்த்தியான பசுக்கள் காணப்பட்டன. இன்னும் ஆறுமாதத்துக் குட்பட்ட கன்றுக்குட்டிகள், வீட்டில் வளர்க்கப்படும் கோழி முதலிய பட்சிஜாதிகளு மிக்காட்சிக்குக் கொண்டுவரப்பட்டன.

மிருகங்களுக்குப் பிரயாசையில்லாமல் லாடங்கட்டுகிற சாமர்த்தியத்திற்காக நியமிக்கப்பட்ட வெகுமதியை ஜீ. ஹி. நி. சங்கத்தாருக்கும், எருதுகளுக்குக் கஷ்டமில்லாமலிருக்கும்படி நுகம்பூட்டுகிற வழியைக் கண்டுபிடித்ததற்காக சென்னை வெடரினரி காலேஜைச்சேர்ந்த மிஸ்டர் வி. கிருஷ்ணமூர்த்தி யவர்களுக் கொரு வெகுமதியு மளித்தார்கள்.

இந்தக் காட்சிக்கு மஹிமைதங்கிய கவர்னரவர்கள், ஸர் ஆர்னல்டு ஒயிட் துரையவர்கள், மைசூர் மஹாராஜா அவர்கள், கொச்சி மஹாராஜா அவர்கள், பல ஜமீன்தார்கள், மற்றும் ஐரோப்பிய கனவான்களும், இந்திய கனவான்களுமாகிய பலர் பொருளுதவி செய்தார்கள். வெகுமதிகளாக அளித்த பணத்தைப் போட்டுக் கொடுப்பதற்காகப் பட்டுப் பைகளையும் ஜந்துக்களை ஆராய்ச்சிசெய்த ஜட்ஜிகளுக்கு பட்டுப் புஷ்பங்களையும் வழக்கம்போலவே சென்னை மவுண்டுரோட்டிலுள்ள மோஸஸ் கம்பெனியார் அளித்தார்கள்.

வெகுமதிகளெல்லாம் கொடுத்து முடிந்த பின்னர் மஹிமைதங்கிய கவர்னரவர்களுக்கும் அவருடைய மனைவியாருக்கும் வந்தனங் கூறுதலோடு காட்சி முடிவுபெற்றது.

விஜயநகரம் மஹாராஜ குமாரிகா அவர்கள்.

சிலநாளைக்குமுன் காலஞ்செய்த விஜயநகரம் மஹாராஜ குமாரிகா அவர்களுக்காக இச்சென்னை ராஜதானியி லநேகர் வியசனிப்பார்கள். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 64. அவர் விஜயநகரம் மஹாராஜாவாகவிருந்த ஆனந்தகஜபதிராஜா அவர்களின் சகோதரி. வட இந்தியாவிலுள்ள மடோகாட் ஸ்டேட் ராணாவை மணம்புரிந்து அவ்வூர் மஹாராணியாக விருந்தார்கள். சுமார் முப்பது வருஷத்துக்குமுன் அவருடைய புருஷன் காலமான நாள்முதல் விஜயநகரத்தில் தம்முடைய தாயாருடனும் சகோதராருடனும் வசித்துவந்தார்கள். அவர் தெய்வபக்தியுள்ளவர்களும் தர்மசிந்தையுள்ளவர்களுமாயிருந்தார்கள். இச்சென்னையில் பரோபகாரார்த்தம் செய்யப்பட்டிருக்கும் பல ஏற்பாடுகளுக்கு அவர் திரவியசகாயஞ் செய்துள்ளார். சென்னைப் பஞ்சரப்போல் ஆசிரயம் முக்கியமாய் மஹாராஜ குமாரிகா அவர்களின் உதாரகுணத்தினால்தான் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஆசிரயத்திற்காக அவர் உதவின தொகை ஒரு லக்ஷம் ரூபாய். விஜயநகரத்தில் லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்செலவழித்துப்பெண்களுக்காகவைத்தியசாலையொன்றும் காசியில் கேதார்காட்டில் யாத்திரிகர்களுக்காக வொரு மண்டபமும் கட்டுவித்தார்கள். விஜயநகரத்தின் ஜல சௌக்கியத்தின்பொருட்டு இரண்டரை லட்சம் ரூபாய் செலவழித்தார்கள்.

அவருடைய தர்மகைங்கரியங்கள் இந்தத் தேசத்தோடு நிற்கவில்லை. சில வருஷங்களுக்குமுன் எடின்பரோ யூனிவர்ஸிடிக்கு கல்வி கற்கப்போகிற இந்திய மாணாக்கர்களின் சௌகரியத்தின்பொருட்டு சில ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று இங்கிலாந்திலிருக்கும் சில துரைமக்கள் முன்வந்தபோது அந்தக் காரியத்திற்காக மஹாராஜ குமாரிகா அவர்கள் அரைலட்சம் ரூபா யளித்தார்கள். இன்னும் அநேகம் பாலிகா பாடசாலைகள் வைத்தியசாலைகள் முதலிய பல விஷயங்களுக்கு அவர் பொருளுதவி செய்திருக்கிறார்கள்.

அவருடைய சகோதரர் காலஞ்செய்த பிறகு இப்போதைய மஹாராஜா மைனராயிருந்தகாலத்தில் எஸ்டேட் மானேஜராயிருந்த மிஸ்டர் எச். டப்ளியூ. கில்மன் துரையவர்களுக்கு எஸ்டேட் வேலையில் குமாரிகா அவர்கள் அதிக சகாயமாயிருந்தார்கள். இப்பொழுது ஜமீன்தாரி வேலைகளைப் பார்ப்பதற்காக வேற்பட்டிருக்கிற கௌன்ஸிலில் தாமும் ஒரு அங்கத்தினராக விருந்துவந்தார்கள்.

இவ்வளவு சாமர்த்தியமும் நல்லறிவும் மனோதைரியமும் ஔதாரியமு மமைந்த அந்தப் பெருமாட்டியின் மரணத்தால் விஜயநகரம் ஜமீன்தாரிக்கேயன்றி இந்தியா முழுமைக்குமே ஓர் பெருத்த நஷ்டமுண்டாய் விட்டது.

கிராமங்களைச் சுத்திசெய்வதற் குபயோகமான பிராணிகள்.

அசுத்தமாயாவது அழிக்கத்தக்கதாயாவது இருக்கிற எப்பொருளையுந் தன்னிடத்திற் சேரவொட்டாமற் செய்வது பிரகிருதியின் சுபாவம். கெட்டழுகி விஷத்தை விளைவிக்கக்கூடிய பொருள்கள் எங்கெங்கிருக்கின்றனவோ அவ்வவ்விடங்களி லவைகளை யுடனுக்குடனே புறக்கழித்துச் சுத்தஞ்செய்கிற பிராணிகள் சித்தமா யேற்பட்டுள்ள விஷயமே அதற்கொரு திருஷ்டாந்தமாகும்.

பயங்கரமான யுத்தங்கள் நடந்த பின்னர் அப்போர்க்களங்களில் மாண்டுகிடக்கிற பிணங்க ளவ்வாறே விழுந்துகிடந்தால் அக்கம் பக்கங்களில் வசிப்பவர்களுக்கு என்ன கதி நேரிடும். மிகவுங் கொடிய வியாதிக ளுண்டாகிச் சொல்லிமுடியாத விபத்துகள் நேரிடுமல்லவா? அவ்விதமாய்க் கிடக்கிற பிணங்கள் அழுகி ஆகாயமுழுவதும் துர்நாற்றம் பரவிக் கெட்ட நோய்கள் தோன்றாமலிருக்கும்படி அவைகளை யவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காகத்தான் நரி, கழுகு, நாராயண பட்சி முதலிய ஜந்துக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜந்துக்கள் இல்லாவி

டில் இவ்வுலகத்தில் உண்டாகக்கூடிய அபாயங்கள் இன்னவிதமானவையா யிருக்குமென்று நினைக்கவு மசாத்தியமாயிருக்கிறது.

இவ்வாறு ஊனைச் சுத்தஞ்செய்கிற ஜந்துக்களில் சிறந்தது வல்லூறு. இந்தப் பட்சி அகோரமான பசியும் கூர்மையான பார்வையும் பொருந்தியது. அதனால்தான் அது எவ்வளவு தூரத்திலிருந்தபோதிலும் மிகவுஞ் சிறியதாயிருக்கிற பொருளையும் பார்க்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

தெற்குச் சமுத்திரத்தின் வடதீரத்திலுள்ள மஹேந்திரமென்கிற மலையி னுச்சியிலிருந்து சம்பாதி யென்கிற பருந்து இலங்கையில் சிறைப்பட்டிருந்த சீதையைக் கண்ணுற்று வானரங்களுக் கறிவித்ததாக இராமாயணத்திற் சொல்லப்படவில்லையா!

பருந்துகளுக்குப் பசி யதிகமாயிருப்பது அவைகளின் தொழிலுக் கனுகூலமாயிருக்கிறது. ஏனென்றால் அவை யெவ்வளவு தின்றாலும் சீக்கிரத்தி லந்த ஆகாரம் ஜீரணித்துப் போவதினால் மறுபடியும் பிணங்களைத் தேடிக்கொண்டு அவை செல்லும். போர்க்களங்களில் கிடக்கும் மானிடப் பிணங்கள் மாத்திரமல்லாமல் காடுகளில் செத்துக்கிடக்கிற எந்த மிருகத்தின் பிணமாயினு மழுகிக்கொண்டிருந்தாலும் அதன் நாற்றத்தை யறிந்து அது இருக்கிற விடத்தைத் தேடிச் சென்று அதைப் பட்சித்து அவ்விடத்தைச் சுத்தப்படுத்தும்.

நரி, ஓனாய் முதலிய ஜந்துக்களும் பிணங்களைத் தின்று அப்பட்சிகளுக்குச் சகாயஞ் செய்கின்றன. நரி முதலிய ஜந்துக்கள் பிணத்தைக் கிழித்துத் தின்றுகொண்டிருக்கும்பொழுது பருந்து, கழுகு முதலிய பறவைகள் ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டேயிருந்து அம்மிருகங்கள் ஏமாந்திருக்குஞ் சமயங்களில் திடீரென்று கீழேயிறங்கி அம்மாமிசத் துண்டுகளிற் சிலவற்றைக் கவ்விக்கொண்டு பறந்துவிடுகிறதுண்டு. அதைப் பார்க்க அதிக வேடிக்கையாயிருக்கும். இவ்வாறு அவை கூட்டங்கூட்டமாய் வந்து இறைச்சித்துண்டுகளை யெடுத்துக்கொண்டு போக நரிகள் ஆகாயத்தை யேமாந்து பார்ப்பதும் விநோதமாயிருக்கும். அப்பறவைகள் தமக்கு வேண்டியமட்டுந் தின்றுவிட்டுப் போகட்டும் பிறகு நாம் வந்து உண்ணலாமென்று அந்நரிகள் அப்பிணங்களைவிட்டுப் போய்விடும். அவை திரும்புகிறதற்குள் பருந்துகள் மாமிசத்தில் சிறிதும் மிஞ்சாமல் முழுமையுந் தின்றுவிட்டு எலும்புகளைப் போட்டுவிட்டுப் போகும். நரிகள் அவ்வெலும்புகளையும் விடாமல் கடித்து அவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கு மிறைச்சியை நக்கும். இவ்விதமாக இந்த ஜந்துக்களும் பறவைகளும் நாடுகளிலும் காடுகளிலுமிருக்கிற கெடுபொருள்களைத் தின்று அசுத்தத்தையெல்லாம் போக்கி நந்தேசமுழுவதும் சௌக்கியமாயிருக்கும்படி செய்கின்றன.

இத்தொழிலுக்காக மேற்கூறப்பட்ட மிருகங்களையன்றி யின்னும் பலவிதமான ஜீவராசிகளைக் கடவுள் படைத்திருக்கிறார். நம்முடைய வீடுகளில் எதாயினும் புழுக்களிறந்துகிடந்தால் அவைகளை யெறும்புகள் அவைகளின் வளைகளுக்கு இழுத்துக்கொண்டு செல்வதைச் சகஜமாய் யாவரும் பார்த்திருக்கலாம்.

ஐரோப்பா முதலிய தேசங்களி லொருவகை ஈக்களிருக்கின்றன. அவை எங்கேயாவது எலி பெருச்சாளி முதலியவை செத்திருந்தால் அந்தப் பிணங்களை யிழுத்துக்கொண்டுபோய் ஒரு பள்ளம்வெட்டி யதிற் போட்டு மறுபடியும் பள்ளத்தை மண்ணால் மூடிவைக்கின்றன அதன்மேல் பெட்டை ஈக்கள் முட்டையிடுகின்றன. அந்த முட்டைகளினின்று முண்டாகிற புழுக்கள் அப்பிணத்தைத் தின்று அவ்விடத்தைச் சுத்திசெய்துவிடுகின்றன. இவ்வாறே சுத்தஞ்செய்கிற பிராணிகள் இவ்வுலகமுழுவதும் கோடிக்கணக்காய்க் கருணைக்கடலாகிய சர்வேஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

நிலத்தைச் சுத்தஞ்செய்யுமாறே நீரையுஞ் சுத்தஞ்செய்யும்பொருட்டு எண்ணிறந்த பிராணிகள் படைக்கப்பட்டிருக்கின்றன. ஏரி, குளம், கிணறு, ஆறு முதலிய பலவிதமான நீர்நிலைகளி லெவ்வளவு அழுக்கு சேர்கின்றது. அவைகளில் எத்தனை பிராணிகளிருக்கின்றன. இத்தேசத்தில் எத்தனை ஜனங்கள் அவைகளிலிறங்கி நீராடியும் அழுக்குவஸ்திரங்களைத் தோய்த்தும் அவைகளை யசுத்தப்படுத்துகிறார்கள். அவையெல்லாம் நீரி லவ்விதமாகவே யிருக்கும்பட்சத்தில் அந்நீர் வெகுசீக்கிரத்தில் நாற்றமெடுத்துப்

போகுமல்லவா? அவ்வாறின்றி நீரில் விழுகிற அழுக்கை யுடனே யுட்கொண்டு பரிசுத்தமாக்கும்பொருட்டு ஆயிரக்கணக்காய் மச்சங்கள் காத்துக்கொண்டிருக்கவில்லையா? மீன்களில்லாத குளத்துத் தண்ணீரைக் கையால் தொடுவதற்கு முபயோகமில்லை. நீர்வாழ் ஜந்துக்களுக்கு அந்நீரிலிருக்கிற அசுத்தத்தையே யாகாரமாக வேற்படுத்தி நீரானது எப்போதுங்கெடாமலிருக்கும்படியாக நயை செய்திருக்கிற கடவுளின் தயாளத்துவம் இன்னவிதமானதென்று யாரா லெடுத்துக்கூற சாத்தியமானது? அப்படிப்பட்ட ஜகதீசனுடைய சிருஷ்டியாயிருக்கிற ஜந்துக்களை நாம் தயையில்லாமல் குரூரமாய் நடத்துவதைக் காட்டிலு மறியாமை வேறொன்றுளதோ?

மனிதனுக்குப் பறவைகளாலாகும் பயன்.

பறவைக்குஞ்சுகள் அதிக விரைவான வளர்ச்சியை யுடைத்தாயிருப்பதால் தாய்ப்பறவைக ளதனால் பலஹீனப்படாமலிருக்கும்பொருட்டு மிகுதியாய்த் தீனி யுட்கொள்ளவேண்டிய தவசியம். மற்றப்பிராணிகளைவிடப் பறவைகளுக்கு ஜீரணசக்தி யதிகமென்பது அவை யொருநாளில் சாப்பிடுகிற உணவினளவைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். மாரிகாலத்தில் தாய்ப்பறவைகள் அவைகளின் தீனிக்காகவும் அவைகளினுடைய குஞ்சுகளின் தீனிக்காகவும் வயல்களிலும் தோட்டங்களிலும் சம்ஹாரஞ் செய்கிற கிருமிகளின் தொகுதி கணக்கற்றது. இவ்வாறு அவை நாசஞ்செய்கிறதினால் அக்கிருமிகள் பெரியவையாக வளர்ந்து பயிர்பச்சைகளுக்கு சேதமுண்டாக்க முடியாது.

சில வருஷங்களுக்குமுன் ஹங்கேரி நாட்டு வேளாளர் ஊர்க்குருவிகள் தானியங்களைத் தின்றுவிடுகின்றனவென்று அவைகளைத் துலைக்கும்பொருட்டு வொருசட்ட மேற்படுத்திக்கொண்டார்கள். அவையெல்லாம் அடியோடு துலைந்து இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தபிறகு அதே வேளாளர் மறுபடியும் குருவிகளைத் தருவிக்கவேண்டுமென்று முறையிட்டார்களாம். அவ்வாறே மறுபடியும் குருவிகளைத் தருவிப்பதற்கு ஹங்கேரி ராஜாங்கத்தார் இரண்டு லட்சம் டாலர்களைச் செலவழிக்க நேரிட்டதாம். அதன்பிறகுதான் அந்நாட்டில் பயிர்கள் முன்போல் செழிப்பாய் வளர்ந்துவந்தனவாம்

1861–ம் வருஷத்தில் அதேமாதிரி பிரான்சுதேசத்தில் சில குடியானவர்கள் திராட்சைத்தோட்டங்களிலிருந்த ஒருவிதப் பறவைகளை நிர்மூலமாக்கினார்கள். அடுத்த வருஷத்தில் அக்கொடிகள் அழுகிப்போய்விட்டன. அதற்குக்காரணம் அக்கொடிகளில் சிலவகைக் கிருமிக ளிருந்ததாயும் அவைகளைத் தின்றுகொண்டிருந்த பறவைக ளில்லாமற்போகவே கொடிகளே நாசமடைந்துவிட்டனவென்றுங் கண்டறிந்து மறுபடியும் அப்பறவைகளைக் கொண்டுவந்து தோட்டங்களில் விட்டார்கள்.

இதைப்போன்ற திருஷ்டாந்தங்க ளின்னுமநேக மிருக்கின்றன. அவைகளால் நாம் அறிகிற விஷய மென்னவென்றால் பறவைகளை வேரோடு அழிக்க முயன்ற விடங்களிலெல்லாம் மனிதருக்கு அதிகமான நஷ்டமுண்டாயிருக்கிறதென்பதே. பறவைகள் அவைகளுக்குள்ள பறக்கிற சக்தியினாலும் நுட்பமான வுணர்ச்சியினாலும் ஜீவவர்க்கங்களிலும் தாவரவர்க்கங்களிலும் சம்பவிக்கிற சேதங்களை நிவிர்த்திப்பதற்குத் தகுந்தவைகளாயிருக்கின்றன. "நாம் பறவைகளையிழந்துவிட்டால் காடுகளையு மிழந்துவிடும்படியாகும்" என்று மிஸ்டர் பிராங்க் எம். சாப்மன் (Mr. Frank M. Chapman) துரையவர்கள் கூறியிருக்கிறார். காட்டிலுள்ள மரங்கள் பறவைகளுக் காதாரமாயிருக்க அவர் அவ்வாறு ஏன் சொல்லவேண்டும்? அதற்குக் காரணம் பின் சொல்லப்போகிற விஷயத்தினால் தெரியவரும். உயிருள்ள பிராணிகளின் ஜீவியத்திற்கு சுவாசம் அவசியமாயிருப்பதுபோலவே மரம் செடி புற்பூண்டுகளுக்கும் சுவாசம் அவசியம். அவை அவைகளுக்கு வேண்டிய காற்றை இலைகளின் மூலமாய் உட்கொள்ளும். இலைகள் துளிரும்போது சிறு கிருமிகளாலும் துளிர்த்தபிறகு கம்பளிப்பூச்சி முதலிய புழுக்களாலும் தின்னப்படுகின்றன. அதனால் மரங்களுக்குப் போதுமான காற்று உட்செல்லாமல் அவை சீக்கிரத்தில் பட்டுப்போகின்றன. பறவைகள் மரங்களில் வசித்து அதற்குப் பதிலாக அம்மரங்களிலுள்ள கிருமிகளை

நாசஞ்செய்கின்றன. ஆகையால் மரங்களினால் பறவைகளுக்கும் பறவைகளினால் மரங்களுக்கும் பரஸ்பரம் உபயோகமுண்டு.

மானிடர் காடுகளிலிருக்கிற புலி முதலிய துஷ்ட மிருகங்களைக் கீழ்ப்படுத்தலாம். ஆனால் அவைகளைக்காட்டிலும் பயங்கரமான தொழிலைச் செய்கிற கிருமிகளை வெல்லுகிறதற்கு முடியாது. ஒருவேளை சிலர் தங்களுடைய தோட்டங்களிலொரு பக்கத்தில் பூச்சிகளணுகாமலிருப்பதற்குபாயஞ் செய்துகொள்ளலாம். அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களிலுள்ள பெரிய காடுகளில் அவ்விதமான வேற்பாடுகள் செய்ய யாரால்முடியும். ஆகையால், அப்படிப்பட்ட விடங்களில் மனிதருக்கு யாதொரு செலவில்லாமலும் அவைகளுக்கு மொருவித கஷ்டமில்லாமலும் அதிக வுபயோககரமான காரியங்களைச் செய்துவருகிற பட்சிக்கூட்டங்களைப் பாதுகாப்பது மானிட தர்மமல்லவா? ஆயினும் அவ்வளவு விலையுயர்ந்த மரங்களைக் கொடுக்கக்கூடிய காடுகளில்தான் நாகரீக தேசங்களிலுள்ள ஸ்திரீகளின் தலைபணிகளுக்காகக் கணக்கற்ற பறவைகள் வருஷந்தோறும் கொலைசெய்யப்படுகின்றன.

கால்நடைகளுக்கும் பறவைகளால் பிரயோஜனமுண்டு. அவைகளுக் குண்டாகிற அநேக நோய்களுக்கு உண்ணிமுதலிய கிருமிகள்தான் காரணமென்று சொல்லுகிறார்கள். அக்கிருமிகள் ஜந்துக்களின் தேகத்திலொட்டிக்கொண்டு அவைகளினிரத்தத்தையுறிஞ்சிவிடுகின்றன. அதனாலப்பிராணிகள் நாளாவட்டத்தில் மெலிவடைவதுடன் நோயுமடைகின்றன. அதுவேயன்றி அக்கிருமிகள் வியாதியை மற்றப் பிராணிகளுக்கும் பரவச்செய்கின்றன. பறவைகள் மிருகங்களின் முதுகிலுட்கார்ந்துகொண்டு அக்கிருமிகளைத் தின்னுவதினால் அவை யதிகரிக்காமலிருக்கும்.

பட்சிகளுக்கும் இதரப் பிராணிகளுக்குமிருக்கிற பெரிய வித்தியாசம் அவை பாடுவதும் ஆகாயத்தில் பறப்பதும். அவை உயரப் பறக்கும்பொழுது அவை மேலே போகப்போக சிறியதாகக் காணப்பட்டுப் பிறகு கண்ணுக் ககப்படாமல் போய்விடுவதும், சில வேளைகளில் அவை பாடினால் அவைகளின் குரல்மட்டும் கேட்பதும் எவ்வளவு ஆனந்தத்தைத் தருகின்றன!

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **ஜீ. ஹி. நி. சங்கம்.** — கனம்பொருந்திய புதிய கவர்னர் துரையவர்களாகிய லார்டு பெண்ட்லண்டு துரையவர்கள் இச்சங்கத்திற்குப் போஷகராயிருப்பதற்கு அதிக தயாளத்துடன் ஒத்துக்கொண்டார்.

---

2. சென்ற நவம்பர் மாதம் 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று சாயந்தரம் 5-மணிக்கு மேற்படி சங்கத்தின் உபகாரார்த்தமாக விக்டோரியா தியேட்ரிகல் கம்பெனியார் மஹிமைபொருந்திய பிரின்ஸ் ஆப் ஆர்காட் கே. ஸி. ஐ. இ. (H. H. The Prince of Arcot, K.C.I.E.) அவர்களின் பரிபாலனத்தில் ஒரு ஆட்டம் ஆடினார்கள்.

---

3. **இங்கிலீஷ்காரர் நாய்களை வளர்ப்பது.**— இந்தியாவில் நாய்களின் காட்சிகளில் வேலைக்காரர்களிடம் நாய்களை ஒப்புவித்துவிட்டுப் போகலாம். ஆனால் இங்கிலாந்திலோ நல்ல நாய்களா யிருக்கும்பட்சத்தில் சொந்தக்காரர்களே அவைகளை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமாம். அப்படி யில்லாமற் போனால் வேறு நாய்களின் சொந்தக்காரர் பொறாமையினால் அவைகளுக்கு விஷங் கொடுத்து விடுவார்களாம். இங்கிலாந்தில் நல்ல ஜாதி நாய்கள் ஐம்பது பவுன் முதற்கொண்டு ஆயிரம் பவுன் வரையிலும் விலைபெறும்படியானவையா யிருக்கின்றன.

பல அரசர்கள் தங்களுடைய இராஜாங்க விவகாரங்களைப் பார்த்தபிறகு சிரம பரிஹாரார்த்தம் நாய்களோடு விளையாடுவதுண்டு. காலஞ்சென்ற மஹிமைபொருந்திய அன்னை விக்டோரியா மகாராணியாரும் பாலியத்தில் ஒரு நாயை வளர்த்துவந்தார்கள். அவருக்கு முடிசூட்டின தினம் பட்டாபிஷேக காரியங்களெல்லாம் முடிந்தவுடன் தம்முடைய இராஜாங்க உடுப்புகளைக் கழற்றித் தம் நாயைக் குளிப்பாட்டச் சென்றார்களாம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1913.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XIII.] MAY, 1913-௵ மே௴. [இலக்கம் 2.

சென்னை ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தின் 32-வது வருஷாந்த மஹாசபை.

சென்ற மார்ச்சு மாதம் 19-ம் தேதியன்று விக்டோரியா பப்ளிக் ஹாலில் மாட்சிமைதங்கிய கவர்னரவர்களாகிய லார்ட் பெண்ட்லண்ட் பிரபுவவர்களின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிற்று. அச்சபைக்கு அநேக ஐரோப்பிய கனவான்களும் இந்திய கனவான்களும் வந்திருந்தனர். சங்கத்தின் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டை அச்சபையார் அங்கீகரிக்கும்படி ஆனரபில் ஸர் ஹாரல்ட் ஸ்டூவர்ட் (The Hon. Sir Harold Stuart) துரையவர்கள் பிரேரித்தபோது சங்கத்தின் நோக்கம் முதலியவைகளைப்பற்றிப் பேசினார். அதில் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. பிராணிகளை ஹிம்சிப்பது குற்றமென்று ஏற்பட்டுவிட்ட பிறகு அக்குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பது போலீஸ் இலாகாதாருடைய வேலையேயொழிய அதற்காகத் தனிச்சபைகளை ஸ்தாபித்துப் பணம் வசூலிப்பது அநாவசியமான காரியமென்று சிலர் கூறுகிறார்களாம். அவ்வெண்ணம் சரியல்லவென்று அதை மறுப்பதற்கு ஸ்டூவர்ட் துரையவர்கள் சில காரணங்களை யெடுத்துக்காட்டினார். முக்கியமா யிச்சங்கத்தின் நோக்கம் வாயில்லாப் பிராணிகளின் கஷ்டங்களைப்பற்றிச் சாதாரண ஜனங்களுக்குப் படிப்பினாலும், கட்டளையினாலும், திருஷ்டாந்தங்களினாலும் போதிக்கவேண்டுமென்பது. இதற்கெல்லாம் ராஜாங்க அதிகாரம் உதவாது. இரக்கமின்மையினால் குற்றங்கள் செய்யப்படுவதுபோலவே நினைப்பின்மையாலு மநேக குற்றங்கள் செய்யப்படுகின்றன. பிராணிகள் ஹிம்சிக்கப்படும்போது அவைகளினுணர்ச்சி இன்னவிதமாயிருக்குமென்பதை யுணரமுடியாத தாமஸமான நினைப்பினால் அதிகமாய்க் குரூரம் நடந்துவருகிறதேயொழிய இது ஹிம்சையென்று தேர்ந்து விளைக்கப்படும் கொடுமைகள் சிறுபான்மையே. ஆகையால் வாயில்லாப் பிராணிகளின் உணர்ச்சியும் மானிடரின் உணர்ச்சியைப்போன்றதேயென்று சாமான்ய ஜனங்களுக்குப் போதிக்கத் தனிச்சபைகள்தான் தகுதியானவை.

அதன்நிமித்தம் பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்தல், ஜீவகாருண்ய விஷயமாய் மாணாக்கர்கள் எழுதியனுப்பும் வியாசங்களுக்காக வெகுமதியளித்தல் முதலிய வழிகளில் சங்கத்தி னங்கத்தினர் உழைத்துவருவதை யெடுத்துக்காட்டிக் கடைசியாக, இச்சங்கத்தி னங்கத்தினர்களாயிருந்த மிஸ்டர் கன்ஷாம்சிங், மிஸ்டர் மோதிராம், மிஸ்டர் எட்வர்ட் ஆர், இவர்களின் மரணத்தினால் சங்கத்திற்குண்டாயிருக்கும் நஷ்டத்திற்காக விசனங்கூறி முடித்தார்.

அடுத்தபடி ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர் அவர்கள், ஸர் ஹாரல்ட் ஸ்டூவர்ட் துரையவர்கள், ஜீ. ஹி. நி. சங்கங்களின் அவசியத்தைப்பற்றிக் கூறியவற்றிற்குச் சார்பாகச் சில விஷயங்களைச் சொன்னார். அதாவது, ஜந்துக்களினிடத்தில் காண்பிக்கவேண்டிய தயை, அன்பு இவைகளின் அளவைச் சட்டத்தால் நிர்ணயிப்பது கஷ்டம். அக்குணங்கள் பொது ஜனங்களிடத்தில் அவரவர்களின் மனச்சாட்சியின் வளர்ச்

சிக்குத் தகுந்தவாறு அமைந்திருக்கும். இந்திய சட்டங்கள் பிராணிகளை மனிதருடைய கண்ணுக்கெதிரில் ஹிம்சிப்பதைத் தடுக்கின்றன. அதனால் சட்டத்தின் நோக்கமானது மனிதருடைய உணர்ச்சிக்கு ஒருவித மரியாதையைக் காட்டுகிற தன்மையதாய்த் தோன்றுகிறதேதவிர பிராணிகளி னுணர்ச்சியைக் கவனிப்பதாக விளங்கவேயில்லை. ஆகையால் பொது ஜனங்களின் மனோநிலைமையை விஸ்தாரப்படுத்தி "அஹிம்சா பரமோதர்ம:" என்னும் நீதிவாக்கியத்தை வாசாகைங்கரியத்தோடு விடாமல் அனுபவத்துக்கும் கொண்டுவரும்படி. எல்லாரையுந் தூண்டும்படிக்குச் செய்யவேண்டிய காரியங்களில் இச்சங்கம்போன்ற சபைகள்தான் தலையிட்டுக்கொள்ளவேண்டும். இதற்காக இச்சென்னை ஜீ. ஹி. நி. சங்கம் மேற்கொண்டு செய்துவருகிற பல காரியங்களில் முக்கியமானது பஞ்சரபோல் என்னும் ஆசிரயம். அநேகர் குதிரைகளையும் மாடுகளையும் அவை நன்று யுழைக்கும்பரியந்தம் வளர்த்து எக்காரணத்தினாலாவது வேலைக்குதவாமற்போகுஞ் சமயத்தில் அவைகளைக் காப்பாற்றாமல் வாடகை வண்டிக்காரர் முதலியவர்களுக்கு விற்றுவிடுகிறார்கள். அந்த ஜந்துக்கள் அப்புது எஜமானர்களிடத்தில் படுங்கஷ்டம் தெய்வத்திற்கே பிரீதி. அப்படிப்பட்ட ஜந்துக்களை இவ்வாசிரயத்திற் கனுப்பி அவைகளின் உணவுக்காக ஏதோ சொல்பதொகையுஞ் செலுத்தி அவைகளை மரணபரியந்தங் கஷ்டப்படுத்தாமல் காப்பாற்றுவது உசிதமாயிருக்கும். கடைசியில், இவ்வாசிரயத்திற்காக அதிக பொருளுதவி செய்துவருகிற சென்னைக் குஜராத்தி ஜாதியாருக்கு அநேக வந்தனமளித்தார்.

மூன்றாவதாக, இவ்விருவரையுமொட்டி ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் தியாப்ஜியவர்கள் "சூரியோதயமுதல் நித்திரைக்குச் செல்லும்பரியந்தம் எந்தப் பிராணிக்கும் ஹிம்சையை யுண்டாக்குகிற காரியமொன்றையுஞ் செய்யாதே" என்ற இஸ்லாமின் வாக்கியத்தை யெடுத்துச்சொல்லி நம்மைப்போலவே வாயில்லாப் பிராணிகளையும் பாவிக்கவேண்டுமென்று கூறினார்.

பிறகு ரிபோர்ட்டைச் சபையார் அங்கீகரித்து இவ்வருஷத்திற்குக் காரியநிர்வாக சபையாரையும் பஞ்சரபோல் கமிட்டியி னங்கத்தினர்களையும் நியமித்தபிறகு, லேடி பெண்ட்லண்ட் அவர்கள் இச்சங்கத்துக்கு வியாசங்களை யெழுதியனுப்பின மாணாக்கர்களுக்குக் கீர்த்திமுத்திரைப் பதக்கங்களை யளித்தார்கள்.

பின்னர், அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த கவர்னரவர்கள் இச்சங்கத்தின் நன்மைகளைக் கொண்டாடி அந்தினத்துக் காரியங்களில் தனக்குண்டான சந்தோஷத்தை வெளிப்படுத்தி ஜனங்களுக்கு இப்படிப்பட்ட சங்கங்களின் காரியங்களி லிருக்கவேண்டிய ஊக்கத்தைக் காட்டி அரியதோர் பிரசங்கத்தைச் செய்தார்.

அக்கிராசனாதிபதிக்கும் அங்குவந்திருந்தவர்க ளெல்லாருக்கும் வந்தனமளித்தலுடன் சபை முடிந்தது.

வெகுமதிபெற்ற தமிழ் வியாசம், 1912—I.

மனிதனுடைய யோக்கியதை யேற்படுவதில், ஜீவஜந்துக்களைத் தயவுடன் ஆதரிப்பதின் முக்கியம்.

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தம்மைப்போலொத்த உத்தம ஜீவராசியில் சேர்ந்த மனிதர்களோடும் மற்றுமுள்ள யானை குதிரை முதலிய மிருகாதி உயிர்ப்பிராணிகளோடும் அசேதனமாயுள்ள வஸ்துக்களோடும் பற்றுதல் பலவிதத்தில் உண்டென்று யாவரும் அறிந்ததே. மிருகாதிகளிடத்தில் மனிதனுக்குள்ள பற்றுதல் யாது? அவற்றில் கெடுதல் யாது? நன்மைபயக்கக்கூடியது யாது? எங்ஙனம் மனிதன் அவைகளோடு ஒழுகவேண்டும்? எப்படி எப்படி நடந்துகொண்டால் என்னென்ன நற்குணங்கள் மனிதன் அடையக்கூடும், என்பவைகளைப்பற்றிச் சற்று கவனிப்போம்.

மனிதனும் மிருகங்களும் மற்றும் இப்புவனத்தை யலங்கரிக்கும் சர்வப்பிராணிகளும் ஒரே கடவுளின் சிருஷ்டியே. சகலவித ஜீவராசியிலும் மனிதனே ஆறறிவு பெற்றவன். இவனே சகலமும் தன்னிஷ்டத்திற்கிசைய யியற்றிக்கொள்பவன். மற்ற ஜீவராசிகளுக்கு இப்பூவுலகில் இவனே போஷகன். ஆகவே மனிதன் உயிர்ப்பிராணிகளை

இளைய சகோதரராகப் பாவிக்காது அவைகளை யாகம் பூஜையென்ற வியாஜங்கொண்டு, நெஞ்சில் கொஞ்சமேனும் ஈரமின்றிக் கொடூரமாய்க் கொன்று அனைத்தும் படைத்த அப்பனுக்கு அர்ப்பணமென்று சொல்லி தன் தொந்தி துவளக்கூடாதென்று எண்ணிவருவானாயின் மனிதனுக்கு நஷ்டமேதவிர லாபமில்லை.

ஒரு மனிதனோ அல்லது பிராணியோ வருந்துங்கால் அந்த ஜீவனை நம்மால் காக்கக்கூடிய சக்தியிருந்தும் நாம் அவ்வாறு செய்யாமலிருந்தல் ஒருவித கொடுமை; மிகவும் பாபகரமான காரியம். நியூபவுண்ட்லாண்ட் (Newfoundland) தேசத்து நாய் ஒரு மனிதன் ஆற்றில் விழுந்து தத்தளிக்கும் தருணத்தில் பொத்தென்று ஜலத்தில் குதித்து அவனைக் கருணையாய்க் கரைக்குக் கொண்டுவரும். ஒரு நாயே அவ்விதம் செய்யுங்கால் ஆறறிவு பொருந்திய நாம் அவ்விதம் நம்மாலியன்றதைச் செய்யாமற்போனால் பிறருடைய வருத்தத்தைக் கண்டு கனியா நெஞ்சுடையவர்களாகிறோம். ஆனால் பிறர் வருத்தத்தை நம்மால் நீக்கமுடியாமலிருந்து அந்தவிஷயத்தில் நாம் சும்மாயிருந்தால் ஒருவாறு பாதகமில்லை. ஒரு மனிதன் வியாதியால் வருந்துங்கால் அவன் உபத்திரவத்தை நம்மால் நீக்க முடியாது; அதனால் பிசகில்லை. ஆனால் அவனிடமே உட்கார்ந்திருந்து அவனுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்துவரவேண்டிய தவசியம். அவ்விதம் செய்யின் நாம் அவன்படும் கஷ்டத்தில் ஒரு பாதியைப் பங்கிட்டுக்கொள்ளுகிறோம். அவ்விதம் நம் சுகத்தை மறந்து பிறரிச்சைக்கிசைந்து ஆடுவதால் இவ்வுலகில் எல்லோரும் நம் சகோதரர்கள் என்ற எண்ணம் உதிக்கிறது. "இளமையிற்கல்" என்ற பிரகாரம் நற்குணங்களை பாலியத்திலேயே கற்கவேண்டும். மனிதனுக்குத் தொட்டில் முதற்கொண்டு சுடுகாடுவரையில் ஒரே பழக்கந்தான். ப்ளாரன்ஸ் நயிட்டிங்கேல் (Florence Nightingale) வாலிபத்தில் ஒரு காலில் ஊமைக்காயம் பட்டு வருந்திய நாய்க்கு மருந்துபோட்டுக் காக்கச்செய்த இரக்கம், பரோபகாரம் முதலிய உத்தம குணங்கள்தான் பிறகு மேலிட்டு கிருமியா (Cremia) யுத்தத்திற்குச் சென்று அநேக உயிர்களுக்குச் சிகிச்சை செய்ய உதவின. எல்லாவற்றிற்கும் பாலிய மனப்போக்குத்தான் காரணம். "விளையும் பயிர் முளையிலேயே தெரியாதா?"

வாய்விட்டுச் சிரித்து வயிறு பெருக்கவேண்டும். ஏனென்றால் விசாரமென்பது மிருகாதிகளுக்கு ஆயுளைக் குறைக்கும் விஷம், மனவுல்லாஸமே ஜீவனாடி. ஆடிக்கொண்டிருக்க ஆதாரம். மனிதன் மிருகங்களை அன்புடனும் ஆவலுடனும் ஆதரிப்பதால் அடையும் பலன்கள் அநேகம். ஆடுமாடு முதலிய பிராணிகளுக்குச் சரிவர உணவளித்துப் பாதுகாத்துவந்தால் அவைகள் குழகுழவென்று வளர்ந்து செவ்வனே வேலைகளைச் செய்துவரும். அவைகளைப் பார்க்க மனிதனுக்கும் மனக்களிப்பும் மனவுல்லாஸமும் அதிகரித்து அநேக ஆண்டுகள் ஜீவித்திருக்கிறான். அவ்வாறன்றி அவைகளை வண்டியில் கட்டி ஒரு அங்குலந்தாற்றுக்கோலால் குத்தி வாலை முறுக்கிக் காலால் உதைத்து உபத்திரவித்தால் அவைகளின் குசால் குன்றும். அவைகளைப் பார்த்துவரும் மனிதனுக்கும் அருவருப்பும் உண்டாகும். அவைகள் மனோவியாதிப்பட்டு ஏங்கிக்கிடப்பதால் அவைகளைத் தின்கிறவர்களுக்கும் அவ்வியாதி பரவி ஆயுள் குறையும். ஆகவே மனிதனுக்கு ஆயுள் சுகதுக்கம் முதலியவைகள் தன்னைச் சூழ்ந்திருக்கும் மிருகாதிகளின் தோற்றம், ஸ்வபாவம் முதலியவைகளினின்றே அதிகரிக்கின்றன.

சிலர், கொஞ்சிக் கூத்தாடும் கிளிகளையும், குழகுழவென்றிருக்கும் மான்களையும், அன்பாய் வளர்க்கிறார்கள். அவைகள் படும் ஆனந்தத்தைப் பார்த்துவரும் மனிதனுக்கும் அளவில்லா ஆனந்த முண்டாகிறது. ஆனந்த சாகரத்தில் முழுகிக்கிடப்பதால் ஆயுளும் அதிகரிக்கிறது. தவிர, ஏதாவது மனக்கவலையேற்படுங்கால் அவன் அவைகளைப்பார்த்து ஆனந்தம் மிகுந்து ஆறுதலடைகிறான். ஆகவே ஆறு நூறானாலும் சரி நூறு ஆறானாலும் சரி என்று எப்பொழுதும் மனதில் ஆறுதலும் சந்தோஷமும் வேண்டிய தவசியமென்ற எண்ணம் அவனுக்கு அதிகரிக்கிறது. இக்குணமுடையவர்கள் எக்காரியத்தையும் நிறைவேற்றுவார்கள் என்பதற்குச் சந்தேகம் யாது?

தினந்தோறும் பாஸ்கரனைப் பின்வைத்து முன்னெழுந்து (Alarm timepiece) அலா

ரம் டயம்பீஸ்போல் அருணோதயத்தில் மனிதர்களை நித்திரையினின்று எழுப்பிவிடும் கோழிகளை மனிதர்கள் ஏன் அநியாயமாய் அவஸ்தைப்படுத்துகிறார்கள். மண்சிலைகளுக்குக் கண்திறக்கிறதாகச் சொல்லிக்கொண்டு, குயவர்கள், கோழியின் ஒரு காலை வெட்டி இரத்தமொழுகும் அக்காலால் கண்திறக்கிறார்கள். பிறகு நொண்டிக்கோழியை வளர்க்குமவர்கள், அதுபடும் கஷ்டத்தை அடிக்கடி பார்த்துச் சகிப்பதால் பிறருடைய ஹிம்சையைச் சகிக்கிறார்கள். அதுவே கொடிய குணங்கள் உண்டாக ஓர் ஆதாரம் ஆகிறது. நாளடைவில் துர்க்குணங்கள் படிந்து தன்னினத்தாருக்கே ஹிம்சை செய்யக் கூடியவர்களாகிறார்கள்.

ஜந்துக்களில் தம்பதிகளுக்குள் அந்யோந்ய வாஞ்சை அதிகமாய் வைத்துள்ளது மணிப்புறா. இப்புறா எப்பொழுதும் ஆணும் பெண்ணுமாகவே வசிக்கும். ஆண் செத்துப் பெண் வாழா! பெண் செத்து ஆண் வாழா! ஆணோ பெண்ணோ இறக்குமாயின் மற்றொன்று சோகம் மிகுந்து. சிறிய கூழாங்கற்களை விழுங்கி ஆகாயத்தில் அம்புபோல் பறந்து, தன் பக்ஷங்களை ஒடுக்கிக்கொண்டு பொத்தென்று கட்டைபோல் பூமியில் விழுந்து, உடல் சிதறி உயிர்விடும். இதினின்று மனிதன் இப்பக்ஷியைப்போல் சாகவேண்டுமென்று சொல்லவில்லை. ஆயினும் தம்பதிகளுக்குள் அந்யோந்ய வாஞ்சை இருத்தல் அவசியமென்றும், விபசாரமென்பது கூடவே கூடாதென்றும் நன்கு புலப்படவில்லையோ? இத்தகைய புறாக்களை மனிதன் அநியாயமாய்க் கொல்வது சரியோ?

காகங்கள் குறவர்கையில் சிக்கிக்கொண்டு சிறகுகள் பிய்க்கப்பட்டு உபத்திரவப்படுகின்றன. எச்சில் இலைகளில் ஒட்டியிருக்கும் இரண்டொரு பருக்கைகளைப் புசிக்கவரும் காகங்களை இவர்கள் எலிப்பொறிகளைக்கொண்டு பிடிக்கிறார்கள். மற்ற காகங்கள் தம் நண்பனை விட்டுவிட வேண்டுமென்று அலறுங்கால் அதன் கழுத்தைத் திருகுகிறார்கள். காகங்களுக்குச் சரிவர உணவளித்து வந்தால், மனிதனுக்கு வேலைக்காரனாகும். சாக்கடைகளில் கிடக்கும் அசுத்தங்களைத் தின்று வீட்டைச் சுத்தம் செய்யும். மாட்டிற்கு உண்ணியெடுக்கும். நண்பர்களுக்குக் கடிதம் தூக்கிச் செல்லும். இவைகளைக் காக்கவேண்டியது அவசியமென்றெண்ணியே அந்தணர்கள் தினந்தோறும் போஜனஞ் செய்யும் முன் காகங்களுக்குப் பலிபோடுவது வழக்கம். எங்கு சென்றாலும் காகங்கள் கூட்டமாய்த்தான் போவது வழக்கம். ஒன்றாய் வரவேவராது. ஆகவே ''சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை'' என்ற வாக்கியத்தின் உண்மையை உணர்த்துகிறது. தன்னினம் விட்டுத் தனித்து, நரிதலையாய்த் திரிந்து, தத்தாரியின் தலைவனாய், திண்டாடக்கூடாது என்று ஞானபோதமும் செய்கிறது. ஒரு காகம் பசித்திருக்க மற்றக் காகம் புசியாமல், தன் நண்பர்களின் கஷ்டத்தை நாமும் பங்கிட்டு அனுபவிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறது. நரிகளும் காகங்களைப்போல்தான் தனியே வராது தனியாகவும் புசிக்காது.

அகாரணமாய் அவஸ்தைப்படும் ஜந்துக்களில் நெருப்புக்கோழி யொன்று. சில நாகரீகம் மிகுந்த ஜனங்கள் தலையில் சிறகு ஒன்று சொருகிக்கொள்ளுவதற்காகத் தீக்கோழிகளைக் கொல்கிறார்கள். அச்சிறகைச் சொருகிக்கொள்ளாவிடில் என்ன? தலைக்குக் கனத்திற்கும் கனம். பாவத்திற்கும் பாவம். காரணமின்றிக் குற்றமும் செய்கிறோம். அப்படி வேண்டுமெனறாலும் தானாய்ச் செத்துப்போனவைகளின் சிறகு போதாதோ? கொஞ்சம் விலை ஜாஸ்தியாய்த்தானிருக்கும். உண்மைதான். ஆனால் நம் சுகத்திற்காக அன்னியனையா உபத்திரவிக்கிறது? அவ்விதம் செய்தால் சுயலாப திருஷ்டியுள்ள ஒனாய்களைப்போலாகிறோம்.

இது இவ்விதம் நிற்க, சிலர் ''நாயைக் கண்டால் கல்லைக் காணோம்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம்'' என்று சொல்லிக்கொண்டு நாயைக்கல்லால் அடித்து உபத்திரவிக்கிறார்கள். நாயைக் கண்டால் ஏன் கல்லைக் காணவேண்டும்? அல்லது கல்லைக் கண்டால் ஏன்தான் நாயைக் காணவேண்டுமோ தெரியவில்லை. இன்னும் தீபாவளிகாலத்தில் நாய்வாலில் சீனவெடிகளைக் கட்டி படபடவென்று வெடிக்கச்செய்வது மிகவும் கொடியகாரியம். நாய் ஒரு அற்புதமான மிருகம். வேட்டைக்குப் புலிபோல் பாயும். திருடனைப் பிடிக்கும். வீட்டைக் காக்கும். ஆட்டுமந்தையை ஓட்டிவரும். இத்தகைய நாயைச் செவ்வனே உணவளித்துக் காத்து வந்தால் எஜமானனைக் கண்டவுடன் வாலைக்

குழைத்துப் பல்லைக்காட்டி அளவில்லா ஆனந்தங்கொடுக்கும். நாய் எவ்வளவு உபயோகமுள்ள மிருகம். அதனால் மனிதனுக்குத் தீங்கு என்ன? தன்னுடைய சரீர சௌக்கியத்தை நாடியும், சீதோஷ்ணத்தின் கொடுமையையும் அகற்றத் திறமையற்ற மிருகத்தினிடத்தில் மனிதன் நிஷ்பிரயோஜனமாய்த் தன் கொடுமையை ஏன் காட்டவேண்டும்? மிருகத்திற்கும் மனிதனுக்கும் பேதம் யாது? மனிதன் பேசுபவன்; மிருகம் பேசாதது. பேசத் திறமையற்று ஒரு மனிதன் வருந்துங்கால் அவனை இதர மனிதர்கள் ஹிம்ஸிப்பது சரியா? நாயும் ஊமைவியாதி பிடித்த மனித ஜாதி. அதனை யேன் வெறுக்கவேண்டும்? மனிதன் ஊமையாயிருந்தால் ஒருவிதம்; பிறருக்கு வேறுவிதமோ? நல்லகுணம். இப்படி ஒருவன் நாய் முதலிய இதர ஜந்துக்களைப் படுத்தாதபாடு படுத்தி வருவானாயின், எதிர்த்துப் பேசுவதினாலோ மற்றுமுள்ள ஆயுத உதவியாலோ சண்டைபோட்டு நம்மை ஜெயிக்கத் திறமையற்ற மனிதர்களிடத்து அலக்ஷியங்காட்டி, அவர்களையும் ஏன் நாயினும் கீழானபடியில் நடத்தமாட்டான்.

நம்வீட்டு வியாதியஸ்தர்களை அடித்தால் பிசகு, வழியேசெல்லும் நாயை அடித்தால் மோக்ஷமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? இப்படி இரண்டுவித நடத்தைக்கும் காரணமென்ன? மிருகத்தினிடத்தில் அகாரணமான வெறுப்பும் தன்னினத்தாரிடத்தில் அத்யந்த அன்புந்தான் காரணம். மனிதனுக்குக் கோபம் வந்தால் ''உன்னை நாயையடிப்பதுபோல் அடிப்பேன்'' என்று சொல்லுகிறான். ஆகவே நாயையடிப்பது இலகுவென்றும் அப்படிப்பட்ட செய்கையை மனிதனிடத்திலுங் காட்டி அப்படி அவனையும் மண்டைபிளக்க அடிப்பது இலகுவென்றும் ஓர் எண்ணம் ஜெனிக்கிறது. யுத்தக் குதிரைக்கு இரத்தத்தில் ஆனந்தமென்றபடி சிறு குழந்தை முதற்கொண்டு, அன்பின்றி வளர்க்கப்பட்டு மாந்தர்கள் வரவரக் கடின சித்தத்தை அடைகிறார்கள். ஒரு வியாபாரி தான் ஏரிக்கரையில் வைத்து மறந்துபோன பையைப்பற்றி, தன் சேஷ்டைகளினால் அவன் வழியைத் தடுத்து ஞாபகப்படுத்த முயன்ற நாயைச் சுட, அது வலியைப் பொறுத்துக்கொண்டு பையை மறுபடியும் காக்கச் சென்றது என்ற கதை எல்லாருக்கும் பாலியத்திலேயே தெரிந்ததே!' அதினின்று நாயை அநியாயமாய்க் கொன்றபோதிலும், தான் சாகும்வரையில் உண்டவீட்டிற்கு இரண்டகம் நினைக்கேல், செய்நன்றி மறவேல் என்ற நற்குணங்கள் அவசியம் என்று நமக்கு இதனால் தெரிவிக்கிறது.

ஏ. எஸ். வேங்கடரமணன்,
முனிசிபல் ஹைஸ்கூல்,
மாயவரம்.

(இன்னும் வரும்.)

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கங்களும் ஜனங்களின் ஆரோக்கியமும்.

1866–ம் வருஷத்தில் ஹென்ரிபர்க் என்பவர் அமெரிக்கா கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணங்களில் முதல் முதல் ஜீ. ஹி. நி. சங்கத்தை ஸ்தாபித்தார். அப்பொழுது ஜனங்களெல்லாரும் அவரைப் பைத்தியக்காரனென்று சொல்லி நகைத்தார்கள். 1908–ம் வருஷத்தில் கொலம்பியா யூனிவர்ஸிடியார் தயாளத்துவத்தைப்பற்றிய கல்வி கேள்விகளில் பரீக்ஷைகள் வைக்கத் தொடங்கினார்கள். இந்த ஐம்பது வருஷங்களுக்குள் அப்படிப்பட்ட சங்கங்கள் அடைந்த அபிவிருத்தியானது இன்னும் ஜீவஜந்துக்களுக்குச் செய்யப்படுகிற ஹிம்சைகளைக் கண்ணுற்று அவைகளின் நிவாரணத்தின்பொருட்டு முயற்சி செய்கிறவர்களை யெல்லாம் உற்சாகப்படுத்திச் சிரத்தையுடனும் தைரியத்தோடும் உழைக்கும்படி செய்கிறது.

ஆகையால், பைத்தியம் பிடித்தவனென்று எல்லாராலும் பரிகாசஞ்செய்யப்பட்ட ஹென்ரிபர்க் என்பவர் ஸ்தாபித்த சபையின் அபிவிருத்தியை நாமெல்லோரு மப்போதைக்கப்போது கவனித்துவருவது நலமாயிருக்கும். ஏனென்றால், அப்படிப்பட்ட சபையை ஸ்தாபிப்பதில் அவருக்கிருந்த விருப்பமும் அபிப்பிராயமும் முற்றிலும் நிறைவேறுவதற் கின்னும் வெகுகாலமிருக்கிறது. நாளதுவரையிலும் ஜீவஜந்துக்களிடத்தி லன்போடிருக்கவேண்டுமென்கிற வெண்ணம் நமக்கிருந்தபோதிலும் சாதாரண ஜனங்கள் வாயில்லாப் பிராணிகளைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. ஆகையால், அநேக பட்டணங்களில் பல சிறுவர்களும் சிறுமியர்களும்

பெரியோரும் குணத்திலும் பலத்திலும் நாளுக்குநாள் மெலிந்துவரச் சில புத்திசாலிகளான ஸ்திரீகளும் புருஷர்களும் பிராணிகளினுடைய க்ஷேமத்திற்காகப் பாடுபட்டுப் பணத்தையும் செலவுசெய்து வருவதைப் பார்க்க வாச்சரியமாயிருக்கிறது.

வாயில்லாப்பிராணிகளிடத்துப்பணத்தை வீணாய்ச் செலவழிக்கிறோமென்றும், அவைகளின் க்ஷேமத்தின்பொருட்டு நாம் அனாவசிமாய்ப் பாடுபடுகிறோமென்றும் நம்மைத் தூஷிக்கிறவர்களுக்கு மானிடரின் க்ஷேமம் மிருகங்களின் க்ஷேமத்திற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறதேயில்லை. ஜனங்கள் யாவரும் ஜீ. ஹி. நி. சங்கங்களுக்குச் செய்யவேண்டிய கடமை இவ்வளவென்று சொல்லிமுடியாததா யிருக்கிறது. ஏனென்றால் மானிடரின் தயையின்மையால் அநேகப் பிராணிகளின் மாம்சம் போஜனபதார்த்தமாக உபயோகிக்கப்படுகிறது. அப்படிப் பட்ட மிருகங்களை ஹிம்சிக்காமல் தகுந்த ஸ்திதியி லவைகளைக் கொல்வதற்கு அவசியமான சட்டங்களையும் அவை பசியினாலும் ஆதாவுக்குறைவினாலுங் கஷ்டப்பட்டு அவைகளி னிறைச்சிஉண்பதற்குதவாமலும் விஷமுள்ளவை யாகாமலும் செய்வதற்கு வேண்டிய சட்டங்களையு மேற்படுத்தும்பொருட்டு முயற்சிகள் செய்துவருகிற ஜீ. ஹி. நி. சங்கங்களுக்கு நாம் செலுத்தவேண்டிய கடமையைப் பூர்த்தியாய்ச் செலுத்துவதற்கு நம்மாலியலுமா?

இப்பூவுலகிலுள்ள அநேக பேதைப்பிராணிகள் மனிதருடைய போஜனத்திற்குத் தவிர வேறெதற்கும் சிருஷ்டிக்கப்படவில்லையென்று பலர் அறியாமையா லெண்ணுகிறார்கள். ஆகையால் அவைகளின் க்ஷேமம் வுலக முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சங்கங்களெல்லாம் செலவுசெய்கிற பணத்தைவிட விலையுள்ளதல்லவா? ஏனெனில் அவை நன்றாயும் ஆரோக்கியமாயும் வளர்க்கப்பட்டாலன்றோ அவைகளைத் தின்பவர் க்ஷேமமாயிருக்கக்கூடும். வருஷந்தோறும் இந்த வாயில்லாப் பிராணிகள் லக்ஷக்கணக்காய்க் கொண்டுவரப்பட்டு இரக்கமின்றி கொல்லப்படுகின்றன. மிருகங்களையும் பக்ஷிகளையும் வண்டிகளிலும் புகைவண்டிகளிலும் விற்பனைக்காகக் கொண்டுபோகும்பொழுது வழியில் அவைகளுக் குண்டாகக்கூடிய அசௌகரியங்களை ஜீ. ஹி. நி சபையார் கண்டுபிடித்துச் சீர்திருத்தஞ் செய்கிறார்கள். அவைகளின் விஷயத்தில் கிரமமான சட்டங்களேற்படுத்துவதற்கு முயலுகிறார்கள். இக்காரியங்களினாலென்ன பலன்? தயவின்மைபொருந்திய சொந்தக்காரர், நினைத்தமாத்திரத்தில் போஜனத்திற்காகக் கொல்லப்படுகின்றன. மனிதனுடைய 'பிரயோஜனார்த்தந்தான் மிருகங்க ளிருக்கின்றனவென்றெண்ணுகிறார்கள்.

இவ்விஷயத்தில் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கிய சபைகள் (Local Boards of Health) நன்றாயும் திருப்திகரமாயும் பரீக்ஷிக்கிறதில்லையென்பது சிறச் சொல்லப்படும் பாஸ்டன் நகரத்தில் நடக்கிற அநியாயத்தினால் விளங்கும். அந்நகரத்து ஆரோக்கியசபையார் எழுதின ரிபோர்டில் 107,644 ஜந்துக்கள் கொல்லப்பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தொகையில் வியாதியினாலோ வேதனையினாலோ போஜனத்திற் குபயோகமற்றவை யென்று தள்ளப்பட்டவை 256. கொண்டுவரும்பொழுது வழியிலேயே காயங்களினாலோ வியாதியினாலோ 103 பிராணிக ளிறந்துவிட்டன. அவைகளில் 15 மாத்திரமே பிரயோஜனமற்றவை யென்று தீர்மானிக்கப்பட்டன. மற்றவையெல்லாம் நல்ல போஜன பதார்த்தமாக வுபயோகிக்கப்படலாமென்று சொன்னார்கள். வழியி லிறந்தவைகளின் தொகை யின்னு மதிகமா யிருக்குமென்ப தென்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால், ஒவ்வொரு வண்டியிலும் களைப்பினால் 2 முதல் 28 ஜந்துக்கள்வரையிலு மிறந்திருந்ததாகத் தெரியவருகிறது. இந்த ஆரோக்கியசபையார் மாமிசத்தைப் பரீக்ஷிப்பது வெறுமையென்பது மற்றொருவிதத்தில் தெரியும். கொல்லப் பட்ட 18,102 கன்றுகளில் 32 மாத்திரந்தான் இளங்கன்றுகளென்று பரீக்ஷகர்கள் (Inspectors) சொன்னார்கள். ஆனால் நம்முடைய காரியக்காரர் (Agents) தங்களுடைய கண்களால் பார்த்தமட்டில் ஆயிரக்கணக்காய் இரண்டுவாரத்துக் கன்றுகளும் நூற்றுக்கணக்காய் மூன்றுநாளைய கன்றுகளுமிருந்தனவாகச் சொல்லுகிறார்கள்.

வயது முதிர்ந்தவையும் க்ஷீணித்துப்போனவையுமான பசுக்களின் கொலையில் பெருத்த வியாபாரம் நடந்துவருகிறது. அவைகளி னிறைச்சி உண்பதற்குச் சிறந்ததென்று மாம்ச பரீக்ஷகர்கள் சொல்லுகிறார்கள். இது எவ்வளவு குற்றமுள்ளதோ அவ்வளவு ஆரோக்கியக் குறைவுமுள்ளது. மற்றப் பட்டணங்களைக்காட்டிலும் பாஸ்டன் நகரம் இவ்வளவு கொடியதென்று நம்புவதற் கென்னாலியலவில்லை. எங்கு பார்த்தாலும் ஆரோக்கிய அநாரோக்கியங்களைப்பற்றி ஜனங்கள் தர்க்கித்துக்கொண்டு வந்தபோதிலும் உண்மையற்ற வுத்தியோகஸ்தர் ஜனங்களின் சௌக்கியத்திற்கு விரோதமாய் நடந்துகொள்வதற்கு இடங்கிடைக்கிறதல்லவா?

ஆகையால் நம்முடைய ஜீ. ஹி. நி. சபைகள் அவைகளுக்குள்ள அதிகாரத்தை எவ்வாறு வுபயோகிக்கவேண்டுமென்றால் அவைகளினுத்தியோகஸ்தர் உணவுக்காகப் பிராணிகளைக் கொல்லுகிற விடங்களுக்குப் போய்த் தயாராயிருந்து ஜனங்களுக்குக் கெடுதியை விளைவிக்கக் கூடியதாயும் அநேகருடைய மரணத்துக்குக் காரணமாயிருக்கக் கூடியதாயுமுள்ள ஸ்திதியிலிருக்கும் பிராணிகளைக் கொல்லும்பட்சத்தில் அவ்விஷயத்தைச் சாத்தியமானவரையில் வெளிப்படுத்தி அப்பேர்ப்பட்ட வழக்கங்களை நிறுத்தவேண்டும். நம்மில் சிலருக்குத் தெரிந்திருப்பதுபோல் யாவருக்குந் தெரியும்பட்சத்தில் மாமிச பக்ஷணமே அதிகமாய்க் குறைந்துபோகுமென்று நானுறுதியாய்ச் சொல்வேன்.

ஜனங்களின் சௌக்கியத்திற்காகவும் அவர்களினாகாரத்திற்காகவும் ஏற்றுமதி யிறக்குமதி செய்யப்படுகிற மிருகங்களுக்குச் சாத்தியமானவரையில் ஹிம்சை செய்வதைக் குறைப்பது எவ்விதம்? என்னுடைய அனுபவத்தைக்கொண்டு பார்க்குமளவில் அவ்வாறு ஏற்றுமதி யிறக்குமதி செய்யப்படுகிற மிருகங்களுக்குச் சௌக்கியத்தை யுண்டுபண்ணுவது கொஞ்சங் கஷ்டமென்றே தோன்றுகிறது. ஏனென்றால், அவைகள் யாரிடத்தி லொப்புவிக்கப்படுகின்றனவோ அவர்கள் அவைகளைச் சிறிது ஹிம்சிக்காமலிரார். கொடிய ஜனங்கள் மிகுந்த பட்சத்துடனிருந்தாலும் அது கொஞ்சங் குரூரமாகவே யிருக்கும். மற்றொரு காரணமென்னவென்றால், அவைகளை யேற்றும் வண்டிகளிலும் தோணிகளிலும் அவைகளுக்கு உணவையும் தண்ணீரையுஞ் சேகரிப்பதற்கும், அவைகளை யேற்றும்போதும் இறக்கும்போதும் கஷ்டப்படுத்தாமலிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதிக பணம் செலவழியும்.

தற்காலம் ஏற்றுமதி யிறக்குமதி செய்யப்படும் ஜந்துக்களுக்கு அவசியமாயுண்டாகிற ஹிம்சையைக் குறைக்க நம்மால் முடிந்தவரையில் பிரயத்தினஞ் செய்யவேண்டும். ஜந்துக்களை யேற்றும் வண்டிகள் இப்பொழுதைக்காட்டிலும் நன்றாயிருக்க வேண்டுமென்றும், அவைகளை யேற்றிக்கொண்டு போகும்போது வேகமாயோடக் கூடாதென்றும் சட்டங்க ளேற்படுத்த முயலவேண்டும். நமக்கு இதுவரையி லேற்பட்டுள்ள அதிகாரத்தைச் சட்டப்பிரகாரஞ் செலுத்த யத்தனிக்கவேண்டும். மாம்சமில்லாமல் சாப்பிடுவதற் கியலாதென்று பலர் சொன்னபோதிலும், அதற்காகவென்று பிராணிகளை வெகுதூரம் வண்டிகளில் போட்டுக்கொண்டு போகாமல் கூடினவரையில் அங்கங்கே கிடைக்கிற பிராணிகளை அருகாமையிலேயே கொல்வதற்கும், அதிக அவசியமாய்க் கொஞ்சந் தூரங் கொண்டுபோக வேண்டியதாயிருந்தால் அவைகளை நன்றாய்க் காற்றுலாவக்கூடிய வண்டிகளில் கொண்டுபோவதற்கும் சட்டங்க ளேற்படுத்தவேண்டும். இவ்வாறெல்லாஞ் செய்யும்பட்சத்தில் பிராணிகளின் ஹிம்சை குறைவதோடு ஜனங்களின் ஆரோக்கியமும் விருத்தியாகும்.

டாக்டர் பிரான்ஸிஸ் ரௌலி.

நாட்டுக் கோழிகள்.

முன்னொரு சஞ்சிகையில் காட்டுக்கோழிகளைப்பற்றி யெழுதியிருந்ததை இப்பத்திரிகையின் நேயர்க ளறிவார்கள். இப்பொழுது நாட்டுக் கோழிகளின் தன்மையைப்பற்றிச் சிறிது ஆராய்ச்சி செய்வோம். கோழியினத்திற்குச் சதா உண்டு களித்துச் சுகிகளாயிருப்பதே முக்கியமான வேலையென்று ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) என்னும் கவீசுவரர் கூறியிருப்பதை படித்தவரெவரும் நாட்டுக் கோழிகளின் துஷ்டத்தனத்தைப்பற்றி வியப்படைய 'மாட்டார்கள். "பன்றிகளை நடத்திக்கொண்டு போகவும் முடியாது, ஓட்டிக்கொண்டுபோகவும் முடியாது" என்று சாதாரணமாய்ச் சொல்

வது வழக்கம். ஆனால், தப்பியோடின வொரு கோழியை மறுபடியும் அதனிடத்திற்குக் கொண்டுவருவதற்காக ஒரு அரைமணி நேரம் அலைந்தவர்கள் அவ்வசனத்தை மாற்ற வேண்டுமென்பார்கள். பெட்டைக் கோழிகளுக்கு முரட்டுத்தனம் வந்துவிட்டால் அவை கழுதைகளைவிட மந்தபுத்தியுள்ளவை போல் நடிக்கின்றன. ஆயினும் அவைகளின் புத்திசாலித்தனத்தைப்பற்றியும் அநேக கதைகளைக் கேட்கிறோம். கோழிச்சண்டைகளை இக்காலத்தில் சட்டத்தால் நிறுத்திவிட்டதனால் சேவல்களின் சாமர்த்தியத்தைப் பார்ப்பது அரிதாகிவிட்டது.

ஒருதடவை யொரு பெட்டைக் கோழியினிடத்தில் சில வாத்துமுட்டைகள் குஞ்சு பொரிப்பதற்காகக் கொண்டு வைக்கப்பட்டன. அக்குஞ்சுகள் தண்ணீரி லிறங்கினதைக் கண்டு அப்பெட்டை அதிக திகிலடைந்ததாம். மற்றொருமுறை சில முட்டைகளைப் பொரித்தபொழுது அது அவ்வளவாகப் பயத்தைக் காண்பிக்கவில்லை. மூன்றாமுறை பொரித்த குஞ்சுகள் தண்ணீரி லிறங்கின பொழுது தானும் நீரில் கிடந்திருந்த வொரு கல்லின்மேல் பறந்துபோ யுட்கார்ந்து தன்னைச்சுற்றி அக்குஞ்சுகள் நீந்திவருவதைப் பார்த்து அதிக களிப்படைந்தது. பிறகு அப்பெட்டையே முட்டையிட்டு அதன் குஞ்சுகள் வெளிப்பட்டபோது அவை நீருக்கருகிலேயே செல்லாமலிருந்ததைக் கண்டு வியப்புற்று வழக்கமாய்த் தான் போயுட்காருகிற கல்லின்மேற் போயுட்கார்ந்து அக்குஞ்சுகளைத் தன்னிடத்திற்கு நீந்தி வரும்படிக் கத்தி யழைத்ததாம். இதனால், கோழிகள் சுலபமாக வொரு அப்பியாசத்திற் கிணங்குந் தன்மையுள்ளனவென்று தெரிவதோடு தன்னினத்துக் குஞ்சுகளின் சுபாவத்திற்கும் பிறபக்ஷிக் குஞ்சுகளின் சுபாவத்திற்குமுள்ள வேறுபாட்டை யறிவதற்குப் போதுமான புத்தி அவைகளுக் கில்லையென்பதும் விளங்குகிறது. ஆனால் பெட்டைக்கோழி தன் குஞ்சுதவிர வேறு கோழியின் குஞ்சு ஏதாவது தன்னிடத்திற்கு வந்தால் அதைக் குத்திக்குத்தி ஹிம்சித்துவிடும்.

(இன்னும் வரும்.)

வர்த்தமானக் குறிப்புகள்.

1. வருஷாந்தரக் குதிரைகளின் காட்சி.– சென்ற மார்ச்சு மாதம் 25-ம் தேதியன்று சாயங்காலம் சென்னைக் கோட்டை ஜிம்கானா மைதானத்தில் நடத்தப்பட்ட குதிரைகளின் காட்சி நன்றாயிருந்தது. ஆனரெரி செக்ரிடரியாகிய மிஸ்டர் ஏ. எச். ஸ்டீல் (Mr. A. H. Steele) துரையவர்கள் இக்காட்சியின் வேலைகளில் அதிகப் பிரயாசை யெடுத்துக்கொண்டார். நேர்த்தியான குதிரைகளைக் கொண்டுவந்தவர்களுக்கு வெகுமதிகளளிக்கப்பட்டன.

2. கொழும்பு துறைமுகத்தில் ஓர் திமிங்கிலம்.- சில வாரங்களுக்குமுன் கொழும்பு துறைமுகத்திற்கு ஒரு திமிங்கிலம் வந்ததாம். அது சிறிதுநேரம் கரையோரத்திற்குச் சென்று அங்கிருந்த படகுகளைக் கவிழ்த்தும் தூண்களைச் சிதறியும் அல்லல் செய்துகொண்டிருந்தது. அப்பொழுது அநேகர் அதன்மேல் கத்திகளை யெறிவதும் துப்பாக்கியால் சுடுவதுமாயிருந்தார்கள். அதையெல்லாம் அது லக்ஷியஞ்செய்யாமல் மறுபடியும் கடலுக்கே பிரயாணப்பட்டுப் போய்விட்டது.

3. ஓங்கோலில் கால்நடைகளின் காட்சி.- சென்ற மார்ச்சு மாதம் 20-ம் தேதியன்று ஓங்கோலில் நடத்தப்பட்ட கால்நடைகளின் காட்சி வெகு விமரிசையாயிருந்தது. அக்காட்சிக்கு குண்டூர் கலெக்டராயிருக்கும் மிஸ்டர் ஜெ. என். ராய் அவர்கள் விஜயஞ்செய்தார். உஷ்ண மதிகமாயிருந்தபோதிலும் எப்பொழுதும்போலவே நல்லமாதிரி கால் நடைகளைக் கொண்டுவந்திருந்தார்கள். ஓங்கோல் கால்நடைக் காட்சிகளில் அதிக அனுபோகமுள்ளவரும் முனிசிபல் சேர்மனுமான மிஸ்டர் பி. எல். நாராயணராவ் என்பவருடைய பார்வையின்கீழ் செய்யப்பட்ட வேற்பாடுகள் குறைவற விருந்தன. சென்ற வருஷத்தைப்போலவே நேர்த்தியான ஜாதி மாடுகளை வளர்க்கிறவர்களுக்கு நல்ல வெகுமதிகளளிக்கப்பட்டன. இரண்டு மாதங்களுக்குமுன் சுமத்திரா ஜாவா முதலிய தீவுகளிலிருந்து பலர் வந்து அந்த ஜில்லாவி லகப்படக்கூடிய மிகவும் நேர்த்தியான 300 மாடுகளை வாங்கிச் சென்றார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1913.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாருடைய கொள்கை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 ... 1913 MADRAS.

அருளுடைமை.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாதி யாங்கு.

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(திருக்குறள்.)

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்ச நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தியவர்களும் சக்ரவர்த்தினியாரும் பரிபாலகர்களாக விருப்பதன்றி, அவர்களின் ஜேஷ்ட புதல்வரான மஹிமையுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பிரபுஅவர்கள் அக்ராசனாதிபதியா யிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயம்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப் போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சாப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமா யதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்ய வேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

MADRAS

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY. ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XIII.] AUGUST, 1913-ஹு ஆகஸ்ற்றுமீ. [இலக்கம் 3.

வெகுமதிபெற்ற தமிழ் வியாசம், 1912—II.

(தொடர்ச்சி.)

மனிதனுடைய யோக்கியதை யேற்படுவதில், ஜீவஜந்துக்களைத் தயவுடன் ஆதரிப்பதின் முக்கியம்.

யுத்தத்தில் மடமடவென்று சென்று சத்துருவின் கத்திக்கும் குண்டுக்கும் அஞ்சாமல் சண்டைசெய்யும் குதிரைகளைப்பற்றிச் சற்று யோசிப்போம். சில கொடியவர்கள், வாலும் தோலுமுள்ள குதிரைகளை வண்டியில் கட்டி, முழங்காலாலிடித்து, வண்டியை யிழுக்க முடியாமல் திண்டாடுங்கால், சவுக்கால் வெளுத்துக் கோலால் அடித்து உபத்திரவிக்கிறார்கள். கண்ணில் பீளைசாயும் அக்குதிரையைக் காணும்பொழுதெல்லாம் மனிதனுக்கு ஒரு வெறுப்பும் துர்நாற்றமும் உண்டாகி, அக்காற்றை உட்கொள்ளுகிறவர்களுக்கு வியாதி வந்து ஆயுள் குறைகிறது. அக்காரணம்பற்றியே, வியாதியாலும், பலவீனத்தாலும் வருந்தும் குதிரைகளைச் சுட்டுக் கொன்றுவிடுவோர் பலர். அவ்விதம் செய்வது மிகவும் சரியான காரியம். குதிரைகள் வருந்துவதைக்காட்டிலும் செத்தால் பிசகு என்ன? பிறர் வருத்தத்தைச் சகிப்பது ஓர் கெட்ட குணம். அதனால், அவர் வியாதியை நம்மால் நீக்க முடியாவிடில், அவர் வருந்துவதைக்காட்டிலும் செத்தால் மோசமென்ன?

ஒரு அரபி தேசத்தவன், திருடர்களால் கட்டுண்டு வருந்துங்கால், அவன் குதிரை அவனை வாயாலேயே ஊர்தூக்கிச் சென்று உயிர்விட்டது என்றால், தன் உயிரைவிட, இக்குதிரைக்குத் தன் எஜமானன் உயிர் மேலானது என்பதற்குச் சந்தேகம் என்ன? அவன் அக்குதிரைக்குச் சரிவர உணவளித்துக் காத்தமையால், அது தன் சுகத்தையே மறந்து, அவன் உயிரைக் காத்தது. செய்நன்றி மறவாமை அவசியம், சமயமென்றால் தன் உயிரையும் கொடுத்து அந்யரைக் காக்க வேண்டும் என்று நன்கு புலப்படவில்லையா?

தற்காலத்தில் கண்ணிற் கழகென்று குதிரைகளின் வாலை ஒருவிதமாய் நறுக்கிவிடுகிறார்கள். மாடு முதலிய ப்ராணிகளுக்கு வாலில் குஞ்சமும், குதிரைக்கு வால் முழுமையும் மயிரையும் ஈசன் ஏன் சிருஷ்டித்தார்? அதற்கு, ஈ, கொசு இதர இம்சை செய்யும் எளிய ப்ராணிகள் அவைகளின்பேரில் மொய்த்து அவைகளின் தேகம் நோகாமலிருக்கும்படி தடுப்பதற்கே தவிர வேறில்லை. அப்படியிருக்க அகாரணமாய் அவைகளை அறுப்பானேன்? பிறகு சாமரம பிடித்து ஈயோட்ட ஆசாமிகள் தேடுவானேன்? எப்படிப்பட்ட ஆளிருப்பினும் இராப்பகல் முழுதும் கண்கொட்டாமல் விழித்திருந்து ஈயோட்ட முடியுமா? ஆகையால் அனாவசியமாய் அந்ய மிருகங்களை நம் கண் அழகுக்காக உபத்திரவிப்பது மிகவும் பிசகான காரியம்.

மாடுகளைத் தோலுக்காக ஆசைப்பட்டுத் திருட்டுத்தனமாய் இழுத்துச் சென்று சிலர் உயிருடன் தோலை உரிக்கிறார்கள். ஒரு தரம் மாட்டைத் தோலுக்காகத் திருடுபவர் ஏன் பெரும் கொள்ளையும் அடியார்கள்?

அவர்கள் அடிக்கடி இரத்தத்தில் பழகுவதால் ஏன் கொலையும் செய்யார்கள்? சங்கராந்தி யன்றைபதினம் கோக்களைப் பூஜிக்கிறது; மறுநாள் அவைகளைப் புசிக்கிறதா நல்ல ஏற்பாடு? தவிர, இந்தியாவானது பயிர்த்தொழிலுக்குப் பெயர்போனதால்மாடுகளன்றி நிலங்களை உழவே முடியாது.

காளைக் கன்றுகளுக்கு இளமையிலேயே விரை அடிக்கிறார்கள். நாய்க்கு விரை எடுக்கிறார்கள். குதிரைக்கும் விரையடிக்கிறார்கள். எல்லாம் எதற்காக? இப்பிராணிகள் ஜிதேந்திரிகளாய் ஒறுத்த வேலைகளுக் குதவுமென்பதுதான். இப்படிச் செய்வதால் இம்சையே; ஒருவித லாபமுமில்லை. நல்ல காளைகளை இப்படிக் காயப்படுத்திவிட்டால் மிச்சமுள்ள எளிய மிருகங்களுக்குப் பிறக்கும் காளைகள் என்னவேலை செய்யக்கூடும்? மாட்டினம் வரவர தென்பற்ற தாகிவிடும். சரிவர உணவுபோட்டு வளர்த்தால் காயடித்த மாடுகளைவிட நன்றாய் வேலைசெய்து அதிக லாபத்தைக் கொடுக்கும். உதாரணமாய், கோவில் மாடுகளுக்குக் காயடிக்காவிட்டாலும் எவ்வளவு த்ருடமுள்ளவைகளா யிருக்கின்றன? ஆகவே நமக்கு லாபமென் றெண்ணிக்கொண்டு, பிறகு, மிருகங்களுக்கு ஆனந்தத்துக்கு விரோதமாயுள்ளதைச் செய்யக்கூடாது. காளைக் கன்றுகளுக்கு இளமையிலேயே கொம்பு தீய்த்துக் காதறுக்கிறார்கள். அதனால் பிரயோஜனம் அதிகமாய் ஒன்றையும் காணோம். எல்லாம் அழகிற்காகவே! நம் கண்ணிற்கு அழகாயிருப்பதற்காக வெண்ணி ஜீவனுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுப்பதான மனிதனிடமுள்ள ஓர் கெட்ட குணம். நம்முடைய ஸகோதரர்களில் ஒருவனுக்கு சிறு மூக்காயிருக்கிறதென்று அதனை உலையில் காய்ச்சித் தட்டலாமா? அல்லது பெரிதாயிருக்கிறதென்று கொஞ்சம் சீவிவிடலாமா? இதுமட்டும் கூடாது. மாடு, குதிரை முதலியவைகளுக்கு ஈயோட்ட ஈசன் கொடுத்த காதையும், வாலையும் அறுப்பதுமட்டும் தகுதியாமோ?

துஷ்டமிருகங்களைப்பற்றிச் சற்றுயோசிப்போம். புலி, கரடி முதலிய காட்டு மிருகங்கள் மனிதனைக்காட்டிலும் பலமுள்ளவைகளே! அவைகளை மனிதன் தந்திரமாய்ப் பிடித்துச் செவ்வையாய்ப் பழக்குவானாயினும் அதற்குப் பலம் குன்றுமா? அப்படிப்பட்ட மிருகங்களுக்குத் தம் பலம் தமக்குத் தெரியாதா? உதாரணமாய் ஒரு யானைப்பாகனை ஒருவன் அடித்துவிட்டால் அவனை யானை சும்மா விடுமா? ஆகவே, நாம் பலசாலி என்று கர்வங்கொள்ளாமல் ‘‘உப்பிட்டவனை உள்ளளவும் நினை” என்றபடி நம்மை ஒருவன் நேசித்து ஒரு கவள அன்னம் கொடுப்பானாயின், அவனுடைய ஆபத்தை, நம்மால் கூடியவரையில் உதவி செய்து நீக்கவேண்டியது அவசியம்.

மேலும் சிங்கம் எவ்வளவு கொடிய ப்ராணியாயினும் அதை மனிதன் பிடிக்க எவ்வளவு பிரயத்தனங்கள் செய்யினும் பிடிபட்டபிறகு. பூர்வம் தனக்குச் செய்த வயிரத்தைச் சற்றேனும் பாராட்டாது, அவன் இச்சைக்கிசைந்தபடி ஆடுகிறது. ஆகவே நமக்குமுன் ஒருக்கால் தீமை நினைப்போரிடத்திலும், அவர் பிந்திய நற்செய்கைகளைமட்டுமே மனதிற்கொண்டு அவ ரெண்ணத்திற்கு மாறாது நடந்து இருகட்சியாரும் களித்தல் அவசியம்.

சிங்கம், ‘‘மிருகேந்திரன்” என்று பெயர் வாங்கி எல்லாமிருகங்களைக்காட்டிலும் பராக்கிரமசாலியா யிருந்தபோதிலும் தனக்குப் பசித்தாலொழிய குகையைவிட்டு வெளியில் வந்து இதர பிராணிகளை உபத்திரவிக்காது. ஆகவே மனிதன் அகாரணமாய் அல்ப மிருகங்களை உபத்திரவிக்கக்கூடாது என்று தெரியவில்லையா? காட்டில் அண்டராக்ளீஸ் (Androcles) செய்த உதவியை, கொடிய பிடரியுள்ள சிங்கமும் மறந்ததோ? அப்படியல்லாமல், பாரதத்தில் கூறியபடி தனக்கு அருள் தானமும் பொருள் தானமும் செய்த ராஜதர்மா என்னும் கொக்கைக் கொன்ற ரகளதமனைப்போ லிருத்தலாகாது.

அணில்களின் அவஸ்தையைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். மரங்களில் பதுங்கியிருக்கும் அணில்களைச் சுவிக்கியால் குத்துவது எதற்காக? ஆகாரத்திற்காகவா? ஒரு மனிதன் சாண் வயிறு நிரப்ப எவ்வளவு அணில்களைப் பிடிக்கவேண்டிவரும். கொல்லுவதிலும் கொஞ்சம் நிதானமாய்க் கொல்லவேண்டும். சிங்கம் பசித்தால் யானையை அடிக்குமேயொழிய பூனையைத் தொடாது. அதுபோலவே நாமும் நமக்குச் சமானமானவனைப் பகைக்கலாமேயொழிய அணில் முதலிய அல்ப மிருகங்களை அடிப்பது மிகவும்

பிசகான காரியம். அணிலைக் கேவலம் ப்ரஷுக்காகவும் அவஸ்தைப்படுத்துகிறார்கள். அதன் மயிரால் ப்ரஷ் செய்தால்தான் செய்ததோ? ஏதாவது மெலிந்த நாறுகளைக்கொண்டு செய்தால் நன்றாயிருக்காதோ? இலகுவான விதம் ஒன்று. இருக்குங்கால் ஏன் அணில்களை அகார்யமாய் அவஸ்தைப்படுத்தவேண்டும்? முள் புதரையும் வயற்காட்டையும் கடந்து செல்லுவது இலகுவா? அல்லது அடிக்குப் பிடிப்பணம் போட்டுத் தளவரிசை செய்தாற்போல் சமதளமாயுள்ள கப்பிரஸ்தாவில் செல்லுவது இலகுவா? ஏன் அந்த இலகுவான வழியில் போதல் கூடாது? அதுபோலவே மெலிந்த நாறுகளைக்கொண்டு ப்ரஷ் செய்தால் என்ன? அகாரணமாய் ஒரு ப்ராணியை ஹிம்ஸிப்பது கொடுமையிலும் கொடுமை! நற்குணமன்று.

பூவரசு, ஒதி முதலிய மரங்களில் ஒட்டியிருக்கும் முசுக்கட்டைப் பூச்சிகளை நெருப்புப் பந்தத்தால் பொசுக்குகிறார்கள். அப்பூச்சிகளோ அம்மரங்களில் வருகின்றனவே ஒழிய அந்நிய மரங்களை அண்டுகிறதில்லை. வீட்டு மத்தியில் அவைகளுக்கு ஆகாரமாகிய அம்மரங்களை வைத்துக்கொண்டு அப்பூச்சிமட்டும் அங்கு வரக்கூடாது என்று சொல்லுவது, ஒரு மனிதன் நெருப்பை அடிமடியில் கட்டிக்கொண்டு எரிகிறதே, எரிகிறதே என்று சொல்லுவதுபோல்தா னிருக்கிறது. மேலும் தன் பிசகிற்காக முசுக்கட்டைப் பூச்சிகளைக் கொல்லுவது மிகவும் அந்யாயம்.

இது இவ்வாறிருக்க, சில கொடியவர்கள் பன்றிகளின் காலைக் கட்டி ஆறு குளம் முதலிய இடங்களில் ஜலத்தில் ஆழவமுக்கிமூச்சுவிட முடியாமல் திக்குமுக்காடச் செய்து கொல்லுகிறார்கள். பன்றி தெருவில் கிடக்கும் அசுத்தங்களைத் தின்று அளவில்லா ஒத்தாசை செய்கிறது. அவைகளை நாம் இவ்விதம் உபத்திரவிப்பதால், நமக்கு உபகாரம் செய்கிறவர்களுக்கே நாம் அபகாரம் செய்கிறவர்களாகிறோம்.

ஸ்ரீமத் மகா பாரதத்தில் அநுசாஸனிக பர்வத்தில், கௌதமி என்னும் ஒரு இருஷியின் குமாரனை ஸர்ப்பம் தீண்டியபொழுது அர்ச்சுனகன் என்னும் வேடன் அப்பாம்பைப் பிடித்துவந்து ‘‘இதை எவ்விதம் கொல்லுகிறது! நெருப்பில் போடட்டுமா? துண்டு துண்டாய் வெட்டட்டுமா?” என்று கேட்டான். அவன் மிருகங்களை அடித்துத் தின்னும் ஒரு வேடனாயினும், அப்பாம்பை அகாரணமாய்த் தான் கொல்லக்கூடாதென்றும், குற்றத்திற்குத் தகுந்த பிரகாரம் தண்டிக்க வேண்டுமென்றும் எண்ணங்கொண்டு கேட்டானேயொழிய வேறில்லை. மேலும் கௌதமி தன் தனயனுக்குத் தீங்கு ஏற்படினும் நடந்தகாரியம் நடந்தது, இனிப் பிறரை இம்சிப்பதில் ப்ரயோஜனமில்லை என்றெண்ணிக் காருண்யம் மிகுந்து, அதை விட்டுவிட வேண்டுமென்று வேடனை வற்புறுத்தியது ‘‘மன்னித்து மற” (forgive and forget) என்னும் பைபில் (Bible) வாக்கியத்திற்கும் ஒத்திருக்கிறது.

சிபிச் சக்ரவர்த்தி சரணமென்றடைந்த ஒரு புறவுக்காக சதையைத் துண்டம் துண்டமாக வெட்டிக் கொடுத்து, பிறகு, தன் உயிரையே கொடுக்கத்தயாரா யிருந்தது எதற்காக? எளிய மிருகங்களை உபத்திரவிக்கவா? எவ்வளவு அற்ப மிருகமாயினும் அவன் உயிரைவிட மேலானது என்ற எண்ணந்தான் அவ்விதம் செய்யும்படி தூண்டியது. அடிமை என்று அடைந்தவர்களைக் கைவிடலாகாது என்றும் புகட்டுகிறது.

கடைசியாக ஆடு மாடு முதலிய மிருகங்களை ஆகாரார்த்தமாய்க் கொல்லும்படி நேரிட்டாலும், கொல்லுவதிலும் கொஞ்சம் கருணை காட்டிக் கொல்லவேண்டும் என்பது பலருடைய கொள்கை. மிருகங்களைக் கொல்லும்முன் ஒரு பிரத்தியேகமான இடத்திற்குக் கொண்டுபோய் கண்ணைக்கட்டிக் காதை மூடி ஒரே வெட்டாய் வெட்டிக் கொன்றுவிடவேண்டும். அவ்வாறன்றி மிருகங்களை அவைகள் சாகும்முன் அவைகளின் உடலும் வருந்தும்படி சித்திரவதை செய்வது மிகவும் கொடுமையான காரியம்.

பிற எளிய ஜீவன்களுக்கு தம் மனஸு, வாக்கு, காரியம் என்ற மூன்றுவிதத்தில் ஒரு விதமாகவாவது தொந்தரவு ஏற்படக்கூடாது. மேனாட்டு தத்வ சாஸ்திர நிபுணரான ஆலிவர் கோல்டு ஸ்மித் (Oliver Goldsmith) சொல்லும் பிரகாரம் ‘‘மனிதன் மிருகங்களை ஆளப்பிறந்தானே ஒழிய அவைகளுக்குக் கொடுங்கோல் மன்னனாகக்கூடாது. மனிதன் மிருகங்களோடு தன்னுடைய பாத்யங்களைப் பகரவேண்டியதேதவிர எல்லா பாத்

யங்களையும் தனக்குத்தான் என்று சுதந்தரம் கொள்ளவுங்கூடாது......" என்ற விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு மனிதன் மிருகங்களைக் காருண்யம் என்ற பாலோடு, நாம் த்ரிகரண சுத்தியாய் அவைகளுக்கு அளிக்கும் ஆகாரமாகும் பழத்தை அன்புடன் கலந்து கொடுக்கின், சுயநலம், கொடுரம், வ்யபிசாரம் என்ற துர்க்குணங்கள் மாறிப் பரோபகாரம், ஆறுதல், ஸந்தோஷம், தாம்பத்திய விச்வாஸம், சிநேகிதர்களுடைய சுகதுக்கத்திற்குப் பாத்யப்படல், ஜாதி விச்வாஸம், நன்றி மறவாமை யென்ற உத்தம குணங்கள் உதயமாகும் என்பதற்குத் தடை கொஞ்சமேனு மில்லை. இக்குணங்களை, அணில் காகம் முதலிய அற்ப மிருகங்களிடமிருந்தும், யானை குதிரை முதலிய அபூர்வ மிருகங்களிடமிருந்தும், புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்களிடமிருந்தும் செவ்வனே கற்கலாம்.

ஏ. எஸ். வேங்கடரமணன்,
முனிசிபல் ஹைஸ்கூல்,
மாயவரம்.

நாட்டுக் கோழிகள்.

(தொடர்ச்சி.)

கில்பர்ட் ஒயிட் (Gilbert White) என்னும் துரை ஒரு பெட்டைக்கோழி யொரு குதிரையுடனதிகநேசமாயிருந்ததாகவொரு கதை யெழுதுகிறார். ஒரு தோட்டத்திலிருந்த அநேக ஜந்துக்களி லிவை யிரண்டுக்குமொருவித நட்புண்டாகிவிட்டதாம். அந்தக் குதிரை நடக்கும்போதெல்லாம் அந்தக் கோழியை மிதிக்காமல் வெகு ஜாக்கிரதையாய்ச் செல்லும். அந்தப் பெட்டைக் குதிரையின் கால்களில் அதன் தேகத்தைத் தேய்த்தும் குதிரையின் முதுகின்மே லுட்கார்ந்தும் தன்னுடைய அன்பைக் காட்டும்.

ஒருகாலத்தில் குஞ்சுகளை வளர்க்கச் சேவல்களை யுபயோகித்திருக்கிறார்கள். முதலில் குஞ்சுகளிடத்துச் சேவலுக்குப் பற்றுண்டாவதற்கு ஒருபாயஞ் செய்துவந்தார்கள். அதன் பயனெவ்விதமா யிருந்தபோதிலும் அது மிகவுங் குரூரமான வழக்கமாயிருந்தது. சேவல்கள் மனிதருடைய கைகளிலிருந்து உணவை யெடுத்துண்பதற்குப் போதுமான தைரியமுண்டாகும்படி அவைகளை வளர்த்து ஒரு சாயங்காலத்தி லவைகளின் மார்பிலுள்ள சிறகுகளைப் பிடுங்கிவிட்டுக்காஞ்சொறியிலையைமார்பில்தேய்த்துவிடுவார்கள். பிறகு கோழிக் குஞ்சுகளை மார்பின்கீழ் விட்டுவைப்பார்கள். அப்பொழுது குஞ்சுக ளிப்புறமும அப்புறமும் அசைவது சேவலின் மார்பெரிச்சலைத் தணிக்குமாம். இந்தமாதிரி இரண்டு மூன்றுமுறை செய்தபிறகு அச்சேவல்களுக்குக் கோழிக் குஞ்சுகளினிடத்தில் வாலாயமாகவே பற்றுண்டாகிவிடும்.

கோழிகள் முட்டையிட்டால் இட்ட கோழிக்கேயன்றி சுற்றுப்புறத்திலுள்ள எல்லா கோழிகளுக்குமொருவித ஆனந்தமுண்டாகிவிடுகிறது. அவ்வானந்தத்தை முதலில் முட்டையிட்ட கோழியின் சேவல்தான் அதனுடைய பெருத்த குரலோடு வெளிப்படுத்தும். உடனே பெட்டைகள் கத்தும், இக்கூச்சலைக் கேட்டு அருகிலுள்ள மற்றொரு சேவலும் அதன் பெட்டையும் கூவும். இப்படியே அக்கம் பக்கத்திலுள்ள கோழிக்கூட்டமெல்லாவற்றிற்கு மிச்செய்தி தெரிந்துவிடும். இதற்குள் இன்னொரு கோழி முட்டையிட நேரிடுமேயானால் அதன் விளம்பரமவ்விடத்திலிருந்து ஆரம்பிக்கும். இவ்வாறு அதிக நேரம்வரையில் கத்திக்கொண்டேயிருப்பது கோழிகளுக்கு வழக்கம்.

விடியற்காலத்திற்குமுன் சேவல் கூவுகிறதில்லை யென்பது எவ்வளவுமட்டு முண்மை யென்பதை, கோழிகளை வளர்க்கிறவர்களும் அவைகளி னருகில் வசிப்பவர்களுமறிவார்கள். விடியற்காலத்தில் அதன் குரல் சிறிது வேறுபட்டு இனிய வோசையுள்ளதாகத் தோன்றுகிறதேதவிர சேவல் தனக்கிஷ்டம் வந்தபோதெல்லாம் கூவும். ஒவ்வொரு சமயங்களில் இரவு முழுவதும் சேவல்களின் கூச்சலிருக்கும். அந்தப் பக்கத்திலுள்ள பறவைகள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கூவிக்கொண்டே யிருக்கும். அதைக் கேட்கும்போது அவை இராக் காவற்காரர்களுடைய வேலையை யெடுத்துக்கொண்டவை போலக் காணப்படும்.

மனிதனுக்குப் பறவைகளாலாகும் பயன்.

(தொடர்ச்சி.)

நாட்டுப்புறங்களில் தோட்டங்களின் பக்கமாகவும் வயற்புறங்களிலும் செல்லுகையில். பலவித ஜாதிப்பறவைகள் பல்விதமான கானஞ்செய்வதைக் கேட்டவர் யாவரும் அப்படிப்பட்ட ஜந்துக்களைச் சிருஷ்டித்த கர்த்தாவினிடத்தில் பக்தி பாராட்டாம லிரார்.

பறவைகளை யடைப்பதற்குக்கூடுகள் செய்யப்படாமலேயொருகால மிருந்திருக்கவேண்டுமென்பது யாவரு மொத்துக்கொள்ளத் தக்கதல்லவா? அக்காலத்திலிருந்த பறவைகளினிலைமையையும் இக்காலத்தில் கூடுகளிலடைபட் டிருக்கிற பறவைகளி னிலைமையையு மொப்பிட்டுப் பாருங்கள். அதைப் பார்க்கும்பொழுது பறவைகளைக் கூடுகளிலடைப்பது குரூரமான வழக்கமென்றுதோன்றுகிறதல்லவா? சிறையி லடைத்தபோதிலும் அவைகளை நன்றாய்ப் போஷித்தால் அவைகளுக்கு யாதொரு கஷ்டமு மில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள்; அது சரியல்ல. அவைகளுக்குக் கடவுளால்கொடுக்கப்பட்ட முக்கியமான சக்தி பறக்கிற சக்தி. நம்முடைய விநோதார்த்தம் அந்த சக்தியை உபயோகப்படுத்துவதினின்றும் தடுப்பது பாவமாகும்.

"பட்சிகளைக் கூட்டி லடைத்துவைத்து வளர்ப்பதுபாவமென்கிறீர்களே, சிலர் அவைகளை நன்றாய்ப் பாடுமென்று அவைகளின் கண்களைக் கட்டிவிடுகிறார்களே, அதைப்பற்றி யோசிக்கும்பொழுது நாங்கள் செய்வது பாவமல்ல" என்று அநேகர் சொல்வதுண்டு. நாம் அப்படி நினைக்கக்கூடாது. நம்மைவிட மிகுதியான பாவத்தைச் செய்கிறவர்களிருப்பதினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படமாட்டா! ஆகையால் எவ்வளவு சிறிய குற்றமாயிருந்தபோதிலும் குற்றமென்று தெரிந்தவுடன் அதை நீக்க முயல்வதுதான் நீதியாகும்.

ஒருவிஷயம் நிச்சயம். அதாவது, நாம் நம்மையும் நம்முடைய இன்பத்தையுங்காட்டிலும் பறவைகளின் குணங்களையும், அவை கூடுகட்டிக்கொள்வதி லுபயோகப்படுத்துகிற சாமர்த்தியத்தையும் அவைகளின் முட்டைகளி னழகையும்பற்றி யோசிக்க யோசிக்க, அவைகளுக்கு எவ்வித் ஹிம்சையையும் விளைக்க இஷ்டப்படமாட்டோம்.

பல்லிகள்.

இந்தியாவில் காணப்படுகிற பல்லிகளை மூன்று முக்கியமான வகுப்புகளாகப் பிரிக்கலாம். அவையாவன:—(1) சாதாரணமாய் வீடுகளில் திரிகிற சிறு பல்லிகள், (2) தோட்டங்களில் காணப்படுகிற பருத்த பல்லிகள், (3) பாம்பைப்போலிருக்கிற பச்சைப் பல்லிகள். இவைகளைச் சாதாரணமாய்ப் பார்க்கிறவர்கள் எல்லாப் பல்லிகளும் இந்த மூன்றிலேதாவதொரு இனத்தைச் சேர்ந்ததாகவும் சிறியவையா யிருப்பவை பெரியனவா யிருப்பவைகளின் குட்டிகளா யிருக்குமென்பதாகவும் நினைப்பார்கள். ஆனால் சிறிது கவனித்து நோக்கினால் மேற்சொன்ன ஒவ்வொரு இனத்திலும் பலவித ஜாதிக ளடங்கியிருப்பதும் அவைகளி லொன்றுக்கொன்று வித்தியாசங்களிருப்பதும் விளங்கும்.

வீட்டுப் பல்லிகள் தட்டையான தலையும் உடலும் பொருந்தி ஊர்ந்து செல்லும்போது முதலையைப்போல் தரையைத் தேய்த்துக்கொண்டு போகும். இவைகளினின்றும் வேற்றுமை தோன்றும்படி தோட்டத்துப் பல்லிகளின் தலை மரத்துண்டைப்போல் தடித்தும் உடல் உயர்ந்துமிருப்பதுடன் எலி, மூஞ்சூறு முதலியவைகளைப்போல் அவை கால்களை உயர்த்தி நிற்கின்றன. மேலும், வீட்டுப்பல்லிகளுக்குத்தோட்டத்துப்பல்லிகளைப்போல் அசைக்கக்கூடிய கண் இரப்பைகளில்லை. அதிசயமானதும் சாதாரணமாய்க் கவனிக்கப்படாததுமான வேற்றுமை யொன்றுண்டு. அதாவது வீட்டுப் பல்லிகளுக்குக் குரலுண்டு. அதாவது அவை கூச்சலிடுகின்றன. ஆனால் தோட்டத்துப் பல்லிகளின் வாயிலிருந்து ஒருவிதமான சப்தமும் கிளம்பாது. மேற்கூறிய வித்தியாசங்களைத் தவிர அவைகளின் தேக வமைப்பில் சிலவித்தியாசங்களிருப்பதாகத் தாவர சங்கம சாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

வீட்டுப் பல்லிகளில் சிலவற்றின் தோல் மிருதுவாயும் துலக்கமாயுமிருக்கிறது;. மற்றவைகளுக்குக் கரடுமுரடான தோல் அமைந்திருக்கிறது. சில வெளிச்சத்தில் ஒருவிதமான நிறமும் இருளில் ஒருவிதமான நிறமு

மாய்க் காணப்படுகின்றன; மற்றவை அவ்வாறு நிறம் மாறுகிறதில்லை. சிலவற்றிற்குக் கண்கள் கறுப்பாயிருக்கின்றன; மற்றவைகளுக்கு வெண்மையாகவாவது காவிநிறமாகவாவது இருக்கின்றன. சில சாந்தகுணமுள்ளவையா யிருக்கின்றன; மற்றவை துர்க்குணமும் முரட்டுக்கோபமு முள்ளவையா யிருக்கின்றன. சில கண்ணாடியின்மேல் ஓடுகின்றன; மற்றவைகளால் அவ்வாறு ஓட முடியாது. கடைசியாகச் சொல்லிய வித்தியாசத்திலிருக்கிற அனுகூலத்தை ஒரு பல்லி மற்றொன்றை யொரு ஜன்னலின்மேல் துரத்திச் செல்லும்போது நாம் பார்க்கலாம். அவைகளிலொன்று கண்ணாடித் தட்டுகளின் மேலோடும். மற்றொன்று கண்ணாடியின் மேலோட முடியாத ஜாதியைச் சேர்ந்ததா யிருக்கும்பட்சத்தில் அது முன்னதைப் பிடிக்கும்பொருட்டு கண்ணாடியைச் சுற்றி யிருக்கிற மரச் சட்டத்தின்மேற் செல்ல வேண்டியதா யிருக்கும். அது அவ்வாறு செல்வதற்குள் மற்றொன்று தப்புவித்துக் கொள்ளும். ஒவ்வொரு வகுப்புப் பல்லிக்கு ஒவ்வொருவிதமான உள்ளங்கால் அமைந்திருப்பதினால் இந்த வித்தியாசம் விளைகிறது.

வீட்டுப் பல்லிகளின் தோற்றத்திலும் குணத்திலும் பல வேறுபாடுகளிருப்பதுபோலவே அவைகளின் பரிமாணத்திலும் வேறுபாடுண்டு. அவைகளில் மிகச் சிறிய வகுப்பு 3 அங்குல நீளமுள்ளது. இவ்வகுப்பின் குட்டிகள் மிகவும் சிறியவையாயிருக்கும். இப்பொழுது கூறப்படுகிறதெல்லாம் இந்தியாவில் காணப்படுகிற வகுப்புகளைமட்டும் பற்றியதென் றறியவேண்டும். உலகமுழுவதுங் காணப்படுகிற வீட்டுப் பல்லிகளில் கிட்டத்தட்ட 300 வகைக ளிருக்கின்றன. அதில் அரைவாசிகூட வாசிக்கப்படவில்லை. இந்தியாவில் பெரும்பான்மையாய் 5 அங்குல முள்ளவை. சில 7 அங்குலமு மிருக்கின்றன. இப்பெரும் பல்லிகள் பகலில் வெளிப்படையாக வருவதில்லை; இரவில் வெளிச்சத்திற் செல்வதில்லை. அவைகளின் உருவம் பிறருடைய கவனத்தை யெளிதில் கவரத்தக்கதென்கிற வுணர்ச்சி அவைகளுக் கிருக்கிறதுபோலும். அவை இருட்டான மூலைகளில் பதுங்கியிருந்து அஜாக்கிரதையாய்ச் செல்லுகிற கரப்பான், விட்டில் முதலிய பூச்சிகளைப் பின்பற்றிச் செல்லும்.

வீட்டுப்பல்லிகளின் முட்டைகள் வெண்மையாயும், வட்டமாயும், கொத்தமல்லி விதை முதல் பெரிய பட்டாணிவரையிலுள்ள பரிமாணங்க ளுள்ளவையாயு மிருக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் பல்லி முட்டைகள் கதவுகளின் சந்துகளிலும், பாய்களுக்கடியிலும், புத்தகங்களின் பின்புறங்களிலும், மூலைகளிலும் ஏராளமாய்க் கிடக்கும். தாய்ப்பல்லிகள் முட்டைகளைப்பற்றிப் பாராமுகமாயிருக்கும். குட்டிகள் பிறந்ததுமுதல் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளவேண்டியதுதான். அவை முதலில் எறும்புமுதலிய சிற்றுயிர்களைத் தின்று பிழைக்கும். ஒரு வாரத்திற்கெல்லாம் ஈ, கொசுகு முதலிய பிராணிகளையும் பிடிக்கக் கற்றுக்கொள்ளும்.

வீட்டுப் பல்லிகள் அவைகளின் இரையைப் பின்பற்றிச் செல்லும்பொழுது அவைகளுக்கிருக்கிற ஊக்கமும் விரைவும் மிகவும் வியக்கத்தக்கன. தோட்டத்துப் பல்லிகள் வீட்டுப் பல்லிகளைக்காட்டிலும் பெரிய வயிறுதாரிகளா யிருக்கின்றனவேயொழிய அவைகளைப்போல் சுறுசுறுப்பா யிருப்பதில்லை. வீட்டுப் பல்லிகள் விளக்குகளுக்கருகில் பூச்சிகளை எவ்வளவு சாமர்த்தியமாய்ப் பிடிக்கின்றன பாருங்கள். அப்பொழுது அவை அருகில் யாராவதிருந்தாலும் இலக்ஷியம் பண்ணுகிறதில்லை. நம்முடைய கைவிரல்களுக் கிடையில் பூச்சிகளை வைத்துக்கொண்டு பல்லிகளுக் கூட்டலாம். முதலில் அவை அச்சப்படும். சிறிது பழகினபின்பு தாமாகவே பாய்ந்துவந்து எடுத்துக்கொள்ளுகின்றன. பல்லிகள் தாம் பிடிக்கிற பூச்சிகளை எல்லாந் தின்பதில்லை. துர்நாற்றமுள்ளவைகளையும் காரமானவைகளையும் தள்ளிவிடுகின்றன. அவை இரை யுண்ணும்போது வெகு ஜாக்கிரதையுடன் பரீக்ஷித்துத் தகாதவைகளை நீக்குகின்றன. ஒருவேளை கொஞ்சம் பிசகி, ஆகாததைத் தின்றால் உடனே தலையை யசைத்துக்கொண்டு அதைக் கக்குவது வேடிக்கையாயிருக்கும். அதிக ருசிகரமான உணவைத் தின்றபின் அதிக சந்தோஷத்துடன் உதட்டை நக்கிக்கொள்வதும் வேடிக்கையா யிருக்கும். பல்லிகள் உணவை மொத்தமாய் விழுங்குகின்றன. விட்டிற்பறவைகளைச் சிறகு செதிள்கள் சஹிதமாயும், தேள்களையும், கரப்பான் பூச்சிகளையும் சம்பூர்ணமாயும் விழுங்கிவிடுகின்றன.

ஒருநாள் ஒரு கரப்பானை யொருபல்லி பிடிக்கப் பார்த்தேன். பல்லி சுவரின்மேல் சிறு புழுக்களைப் பிடித்துக்கொண் டிருக்கையில் தரையிலிருந்த சில சாமான்களின்மேல் அந்தக் கரப்பான் போய்க்கொண் டிருந்ததைக் கண்ணுற்றது. உடனே அது சுவரிலிருந்து மேஜையின்மேல் பாய்ந்து அங்கிருந்து தரையில் குதித்து அதைத் துரத்திக்கொண்டு போய்ப் பிடித்துக்கொண்டது. வீட்டுப் பல்லிகள் செத்த புழுக்களைத் தின்பதில்லை. சிறு பக்ஷிகளின் முட்டைகளையும் இறைச்சித் துண்டுகளையுந் தின்பதுண்டு. புழுப்பூச்சிகள் விசேஷமாய்க் கிடைக்காத காலங்களில் சந்து பொந்துக்களிலும், வளைகளிலும் தலையை நுழைத்துப்பார்த்தும், ஓரறையிலிருந்து மற்றோரறைக்கும் தோட்டங்களுக்கும் சென்றும் வேறு தீனியைத் தேடும். அப்பொழுது அவைகளுக்குப் பலவித அபாயங்கள் நேரிடுவதுண்டு. தவளைகள், பாம்புகள், ஆந்தை, துரிஞ்சில் முதலிய பிராணிகள் பல்லிகளைப் பிடித்துத் தின்னும். முக்கியமாய்ப் பாம்புகளுக்குப் பல்லியின்மேல் வெகு பிரியம். கல்கத்தா நகரத்திலிருக்கும் மிருகக்காட்சிச் சாலையில் தவளைகளும் வெட்டுக்கிளிகளும் அகப்படாத பருவங்களில் பாம்புகளுக்குப் பல்லிகளைத்தான் கொடுக்கிறார்கள்.

வீட்டுப் பல்லிகள் அவைகளின் இரையைக் கல்லின்மேலாவது மரத்தின்மேலாவது மோதிக் கொல்லுகிற வழக்கத்தையுடையன. அவை கதவுகளின்மேல் அவ்வாறு மோதும்பொழுதுண்டாகிற சப்தம் தூங்குகிறவர்களைக்கூட விழிப்பிக்கும். அவை கத்துவதும் அவ்வாறே திடுக்கிடும்படி இருக்கும். சில பல்லிகள் ‘சக்’ ‘சக்’ என்று சப்தஞ் செய்கின்றன. சில ‘க்ளிக்’ ‘க்ளிக்’ என்று கூச்சல் போடுகின்றன. பல்லியின் கூச்சல் அவசகுனமென்று ஹிந்துக்கள் நினைக்கிறார்கள். அவைகளின் ஸ்பரிசமும், கடியும் விஷமுள்ளனவென்று நினைக்கிறார்கள். அவ்வாறெல்லாம் எண்ணுவது ஆதாரவற்றதும் அனாவசியமானதுமான காரியம். பல்லியின் வால் சுலபமாய் வெட்டுண்டுபோவதும் மறுபடியும் சீக்கிரத்தில் வளருவதுமான சுபாவமுள்ளது. சில வேளைகளில் இரட்டை வாலாக முளைப்பது முண்டு. வாலில் தசையும் நிணமும் தவிர எலும்பென்பதே கிடையாது.

பர்மா தேசத்திலும் ஆஸாம் மாகாணத்திலும் அவ்விரண்டிற்கு மிடையிலுள்ள காடுகளிலும் எலியின் பரிமாணமுள்ள ஒருவகைப் பல்லி யிருக்கிறது. அதன் நீளம் ஒரு அடிக்குமே லிருக்கும். இந்த ஜாதிப் பல்லிகள் ‘டிக்டோ’ ‘டிக்டோ’ வென்று உரத்திக் கூச்சலிடும். புதிதாய் வருகிறவர்கள் அக்கூச்சலினால் பயப்படும்படி யவ்வளவு பயங்கரமா யிருக்கும். இவை சிறு வௌவால்களைப் பிடித்துத் தின்னும்படியான வல்லமையுடையன.

சுபாவீகமான தயவுபோருந்திய ஆகாரம்.

லண்டன் மகா நகரத்து, ‘ஆர்டர் ஆப் தி கோல்டன் ஏஜ்’ (Order of the Golden Age) என்னும் சங்கத்தார் பிரசுரித்துவருகிற ‘ஹெரல்ட் ஆப் தி கோல்டன் ஏஜ்’ (Herald of the Golden Age) என்னும் பத்திரிகைக் கதிபாகிய மிஸ்டர் ஸிட்னி எச். பியர்ட் (Mr. Sidney H. Beard) என்கிற துரைமகன் மானிடரின் தேகதத்துவத்திற்கு விரோதமானதும் கொடுமை பொருந்தினது மான மாமிச பட்சணத்தைப்பற்றி ஒரு சிறு புத்தக மெழுதியிருக்கிறார். நாம் அதை யொருவாறு சுருக்கி முக்கியாம்சங்களைமட்டு மெடுத்துக் கூறுவோம்.

மேனாடுகளில் அநேக நூற்றாண்டுகளாக மாமிசபோஜனம் யாதொரு இடையூறுமின்றிச் செழித்துவந்ததற்குக் காரணம் மனிதருக் கது இயற்கையானதும் ஆவசியகமானதுமான உணவென்கிற வபிப்பிராயமே. இத்தப்பெண்ண மில்லாதிருந்தால் மானிடருக்கு ஆரோக்கியக் குறைவையும் சில சமயங்களில் அபாயத்தையு முண்டுபண்ணத்தக்க ஆகார்த்தைச் சேகரிப்பதற்காக நடந்துவருகிற ஜீவப்பிராணிகளின் மாமிச வர்த்தகத்தினால் விளைகிற கொடுமைகளெல்லாம் வெகு காலத்திற்கு முன்னமே முடிவாயிருக்கும். இக்கொடுமைகளின் தன்மையையும் அளவையும் அறிந்தவர்கள் இத்தகைய உணவு நமக் கின்றியமையாததா யிருக்கலாமென்பது தவிர, வேறெந்தக் காரணத்தினாலும் புலாலுண்பதை நியாயமான பழக்கமென்று கூறமாட்டார்கள். இவ்வொரு காரணத்தைக்கொண்டே நாம் மாமிசபட்சணிகளா

வதும் பிராணிகளுக்குப் பெருந்துன்பம் விளைவதும் நியாயந்தா னென்கிறவர்களுங் கூட, நமக்குப் புலால் சிறிது மவசியமில்லாததென்று சாஸ்திரோக்தமாய் ருஜுப்படுத்தப்பட்டபிறகு அது நியாயமானதென்று வாதிக்கமாட்டார்கள்.

ஊனைப் புசிப்பது நமக் கனவசியமானதேயல்லாமல் நம்முடைய இலௌகிக வைதிகவொழுக்கங்களுக்கு விரோதமுமானதென்கிற சரியான வபிப்பிராயம் மேனாட்டு ஜனங்களுக்கு எப்பொழுது தோன்றுகிறதோ வப்பொழுதே அத்தேசங்களுக் கொருவிதமான அவகீர்த்தியைத் தருகிற மிருகக்கொலையும் இரத்தஞ் சிந்துதலும் நின்றுவிடும்.

மாமிச போஜனார்த்தம் நாடோறும் எவ்வளவு சம்ஹாரம் நடந்துவருகிற தென்பது அநேக ஜனங்களுக்குத் தெரியாது. லண்டன் நகரத்திலிருக்கும் ஸ்விப்ட் அண்டு கோ (Swift and Co.) வென்கிற மாமிச வர்த்தகசாலை யொன்றில்மாத்திரம் பிரதி தினமும் 10,000 மாடுகளும், 20,000 ஆடுகளும், 27,000 பன்றிகளும், 30,000 கோழிகளும் சங்கரிக்கப்படுகின்றனவென்று 'காஸ்மோபாலிடன் (Cosmopolitan) என்னும் பத்திரிகையி லெழுதப்பட்டிருக்கிறது. அதே நகரத்திலுள்ள சற்றேறக்குறைய 400 வர்த்தகசாலைகளிலு மின்னு மிதர நகரங்களிலும் நடந்துவருகிற கொலையின் பரிமாணத்தை யொருவாறு உத்தேசித்துப் பார்க்கும்பொழுதுதான் அதை நிறுத்துவதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக்கொள்ளுவது அத்யாவசியமென்று புலப்படுகிறது.

(இன்னும் வரும்.)

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **கொடுமையின் பலன்.**—லண்டன் நகரத்தி லொரு சில்லரை வியாபாரி வண்டியிலதிக சுமையை யேற்றியும் நன்று யடித்தும் தன்னுடைய குதிரையை ஹிம்சித்து வந்தான். இப்படி யிருக்கையி லொருநாளிராத்திரி அவன் வீட்டுக்கு வரவில்லை. அவனுடைய மனைவி யவனைத் தேடி வரும்படி யொரு ஆளை அனுப்பினாள். அவன் தெருத்தெருவாய்ப் போய்த் திரிந்து கடைசியி லொரு சிறிய சந்தில் நுழைந்தான். அச்சந்தி னொருமுனையி லொரு சிறு குட்டையிருந்தது. அக்குட்டையி னோரத்தி லொரு வண்டி முறிந்து கிடந்தது. இன்னஞ் சிறிது தூரஞ் சுற்றிப்பார்க்கையில் வியாபாரியின் குதிரை மேய்ந்துகொண்டிருந்ததைக் கண்டான் உடனே அவன் அந்தக் குட்டையி லிறங்கிப் பார்க்க, அதில் வியாபாரி விழுந்திருந்தானும். அவனைத் தூக்கிப் பார்க்கையில் பிராணன் போயிருந்ததாகத் தெரிந்தது. மறுநாட்காலையில் மரணத்தின் காரணத்தை விசாரிக்கிற சபையார் கூடி விசாரணை செய்தபொழுது, அந்த மனிதனுடைய வாக்குமூலத்தைக்கொண்டும் வியாபாரி தன் குதிரையை ஹிம்சித்து வந்தானென்னும் விஷயத்தைப்பற்றி மற்றுஞ் சிலர் கொடுத்த வாக்கு மூலத்தைக்கொண்டும், அன்று அவனுடைய ஹிம்சையைப் பொறுக்கமுடியாமல் குதிரை யதிக வெறிகொண்டு குட்டையண்டை வண்டியைக் கவிழ்த்துவிட்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இவனுடைய செய்கையைப் பொறுக்காமல் தெய்வமே இச்சம்பவத்தை விளைத்ததுபோலும்!

2. **பேவார்சு ஜந்துக்கள்**—நியூயார்க்கில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தார் பேவார்சாய்த் திரிகிற நாய்களையும் பூனைகளையு மெடுத்துக்கொண்டு போய் ஹிம்சை யில்லாமற் கொல்வதற்கு இரண்டு வருஷகாலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த விரண்டு வருஷங்களுக்குள் அவ்வாறு கொல்லப்பட்டவைகளின் தொகை இரண்டு லக்ஷத்திற்கு மேற்பட்டிருக்கும். பிராணிகளுக்குச் சம்பவிக்கிற தொத்து வியாதிகளைப் பரவச்செய்வது பேவார்சுப் பிராணிகள்தானென்று சொல்லுகிறார்கள். ஆகையால் நியூயார்க் சங்கத்தார் எடுத்துக்கொண்ட தொழில் இருவிதப் பிரயோஜன முள்ளதா யிருக்கிறது.

3. **மைசூர் யானைகள்.**—சென்ற வருஷம் டிசம்பர் மாதத்தில் மைசூரைச்சேர்ந்த சிவமுகி ஜில்லாவில் யானைகள் ஏலம் போடப்பட்டன. அத்தருணம் கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த ஜெமின்களால் 11 யானைகள் ஏலத்தில் வாங்கப்பட்டன. அவைகளில் 8 யானைகள் இறந்துபோயின. அதனால் அவர்களுக்கு 20,000 ரூபாய் நஷ்டம் என்று சொல்லப்படுகிறது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1913.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாருடைய கொள்கை.

அருளுடைமை.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(திருக்குறள்.)

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்ச நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தியவர்களும் சக்ரவர்த்தினியாரும் பரிபாலகர்களாக விருப்பதன்றி, அவர்களின் ஜேஷ்டபுதல்வரான மஹிமையுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பிரபுஅவர்கள் அக்ராசனாதிபதியா யிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயம்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப் போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சரப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமா யதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்யவேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

THE REGISTRAR
17 NOV 1913
MADRAS

சம்புடம் XIII.] NOVEMBER, 1913-௵ நவம்பர்௴. [இ[illegible] 4

சுபாவீகமான
தயவு பொருந்திய ஆகாரம்.

(தொடர்ச்சி.)

'நான் இரக்கத்தைத்தான் விரும்புகிறேன், பலியையல்ல; இதன் பொருளை யறிந்துகொள்ளுங்கள்' (Go ye and learn what this meaneth, I desire mercy and not Sacrifice) என்று பேராசிரியர் கூறிய வார்த்தைகளைக் கிறிஸ்தவ நாட்டாரெல்லோரும் ஞாபகத்திற்குக் கொண்டுவரக்கடவர். ஆகையால் கர்த்தரின் விருப்பத்திற் கிணங்கி வசிப்பதற்கும் இவ்வுலகின்க ணுள்ள துன்பத்தையும் வேதனையையும் குறைப்பதற்கும் இஷ்டப்படுகிறவர்கள் கீழே எழுதப்பட்டிருக்கும் சில சிறந்த வித்தியா விற்பன்னர்களின் அபிப்பிராயங்களை ஆராய்வார்களாக.

மனிதனுடைய தேகக்கட்டு, பல், உள்ளுறுப்புகள் முதலியவைகளைக் கவனிக்கும் பொழுது, நாம் காய் கனிகளைத் தின்னுவதற்குத் தக்கபடி சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறோமே யல்லாமல் மாமிச பட்சணிகளாகப் படைக்கப்படவில்லை யென்று செவ்வனே விளங்குகிறது. நம்முடைய கைவிரல்களும் நகங்களும் பழவர்க்கங்களைப் பறித்து உரிப்பதற்குத் தக்கவண்ண மமைந்திருக்கின்றனவேயொழிய சிங்கம், புலி, ஓநாய் முதலிய மிருகங்களைப்போல் பிராணிகளை யடித்துக் கொல்வதற்காவது இறைச்சியைக் கிழிப்பதற்காவது பிரயோஜனப்படமாட்டா. நம்முடைய தாடைகளும் பற்களும் அந்த மிருகங்களைப்போல் இறைச்சியைக் கடித்து மெல்லுவதற்குச் சுலபமாயிருக்கும்படி யமைந்திருக்கின்றனவா? அல்லது அவைகளைப்போல் எளிதில் ஜீரணமாகும்படியான ஜீரணக் கருவிகள்தான் நமக் கிருக்கின்றனவோ? மாமிசத்தைக் கண்டங்களாக நறுக்கி வேகவைத்தும், பொரித்தும், வறுத்தும் இன்னும் பலவிதமாய்ப் பக்குவப்படுத்தியு மல்லவா மனிதன் மாமிசஞ் சாப்பிடவேண்டியதாயிருக்கிறது. இதெல்லாமிருக்கட்டும். நம்முடைய குழந்தைகள் ஆடு, கோழி முதலியவைகள் அருகிற் போகும்போது சிங்கக்குட்டி புலிக்குட்டியைப்போல் மூக்கை யுயர்த்தி வாசனைபிடித்துக்கொண்டு அவைகளின் மேல் பாய்வதை யாராவது கண்டதுண்டா? சில குழந்தைகளுக்கு முதல்முதல் மாமிச பதார்த்தங்கள் அருவருப்பா யிருப்பதை யநேகர் கவனித் திருக்கலாம். அவ்வாறின்றி, ஒரு பழத்தின் தோற்றமானது குழந்தைகளின் ருசியையும் பசியையும் எவ்வாறு கிளப்புகிறது பாருங்கள். ஆகையால் மாமிசம் மனிதனுக்கு இயற்கையான வுணவல்லவென்பது சித்தாந்தம்.

மாமிச போஜனம் மனிதனுக் கவசியமானதென்பதும் தப்பெண்ணமே. நம்முடைய சரீரத்தின் வளர்ச்சிக்கும், ஆதாரத்திற்கும், உஷ்ணத்தையும் பலத்தையு முண்டாக்குவதற்கும் வேண்டிய பொருள்கள் மரக்கறி பதார்த்தங்களிலேயே விசேஷமா யிருக்கின்றன. மரக்கறி யுண்ணுகிறவர்களிலநேகர் மாமிச பட்சணிகளைவிட எவ்வளவோமடங்கு பலசாலிகளா யிருக்கிறார்கள். ஆகையால் மாமிசஞ் சாப்பிடுவது மனிதருக்கு வீணானதும் கெடுதியை விளைவிப்பதுமான பழக்கமென்பதிற் சந்தேகமேயில்லை.

மாமிச போஜனம் அநேகவிதமான வியாதிகளுக்குங் காரணமா யிருக்கிறது. பலவிதமான சூலைநோய்களும் நீர்வியாதிகளும் ஆட்டிறைச்சி மாட்டிறைச்சிக் கண்டங்களோடு கூடவே தேகத்திற் புகுகின்றன. நாம் உட்கொள்ளுகிற உணவிற்கும் நம்முடைய தேகத்தி லுற்பத்தியாகிற வியாதிகளுக்கும் சம்பந்த மிருக்கிறதென்கிற வுணர்ச்சி, வந்த வியாதியைப் போக்குவதற்கே யல்லாமல் வியாதியே வராமல் தடுப்பதற்கும் பிரயோஜனப்படும். நாம் பழவர்க்கங்களையும், காய்கறி வகைகளையும் கிழங்குகளையு மதிகமாகப் புசித்துவந்தால் அநேக வியாதிகளை யேட்டுச் சுரைக்காயாக விலக்கிவிடலாமென்பது திண்ணம்.

சில வருஷங்களுக்குமுன் நடந்த ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் அதிகதூரம் நடப்பதற்கும் கஷ்டங்களைச் சகிப்பதற்கும் ருஷியரைக்காட்டிலும் ஜப்பானியருக்கு அதிக வல்லமையிருந்தவிஷயம் யாவரு மறிவார்கள். ஜப்பானியருடைய காயங்கள் சீக்கிரத்திலாறிக்கொண் டிருந்தனவாம். அவர்களுடைய சேனையில் வியாதியால் மரணமடைந்தவர்களின் தொகையுஞ் சொல்பமாம். இதற்குக் காரணம் ஜப்பான் தேசத்தில் பெரும்பாலும் அநேக நூற்றாண்டுகளாக மரக்கறி பதார்த்தங்களையே புசித்துவந்ததாகும். இப்பொழுதும், சில வருஷங்களாகப் பெரிய பட்டணங்களில் ஐரோப்பிய வப்பியாசங்களை யனுசரித்துவருகிற சிலரைத் தவிர நாட்டுவாசிகள் யாவரும் புலாலை யணுகுவதே யில்லையாம்.

குழந்தைப்பருவமுதல் மாமிசந்தின்றுவந்ததினால் தேகத்திலிருக்கிற இந்திரியங்களெல்லாம், அவ்வித உணவிற்குப் பழக்கப்பட்டுவிட்டபடியால், இடையி லிந்த உணவை நிறுத்துவதினா லவைகளுக்குக் கெடுதியுண்டாகுமென்று சிலர் நினைக்கிறார்கள். அது உண்மை யல்ல. இங்கிலாந்தி லநேகர் 50 வயதுக்குமேல் மாமிசத்தை விட்டு மரக்கறியை யுண்ண வாரம்பித்தார்கள். அவர்க ளெல்லோரும் தங்களுக் கதனால் யாதொரு தீங்கும் விளையவில்லையென்றும் முன்னிலு மிப்பொழுது தாங்கள் பலவான்களா யிருப்பதாகவுங் கூறுகிறார்கள்.

மேற்கூறிய விஷயங்களினால் மனிதனுடைய இகலோக வாழ்க்கைக்குக் காய்கனி வர்க்க வாகாரம் போதுமானதும் மேன்மையானதுமென்று தெரிகிறது. அது பரமார்த்த லாபத்தையுங் கொடுக்கத்தக்க தென்பதற்கு, ஊனைத் தவிர்த்தும் நல்லொழுக்கங்களை யப்பியசித்தும்வந்த ப்ளேடோ, அரிஸ்டாடில், ஸாக்ரெடிஸ் முதலிய தத்துவ சாஸ்திரிகள், ஜொரோஸ்டர், புத்தர் முதலிய தீர்க்கதரிசிகள், ஜேம்ஸ், மத்தே, பீடர் முதலிய அப்போஸ்தலர்கள், டெர்டல்லியன், க்ளிமெண்ட் முதலிய கிறிஸ்தவ பாதிரிகள், மில்டன், நியூடன், ஷெல்லி முதலிய கல்விமான்கள் ஆகிய இவர்களுடைய சரித்திரங்கள் சிறந்த திருஷ்டாந்தங்களா யிருக்கின்றன. ஆதியில் மனிதர் தங்களுக்குக் கிடைத்ததை யுண்ணவேண்டியதாயிருந்தார்கள். அடுத்தபடி யவர்கள் தங்களுக்கு விருப்பமுள்ளதைத் தின்ன வாரம்பித்தார்கள். இனியவர்கள் எது தங்களுக்குச் சிறந்ததா யிருக்கிறதோ அதைப் புசிக்கவேண்டும். ஆகையால் நமக்கியற்கையா யேற்பட்டுள்ள ஆகாரத்தை உட்கொள்ளுவதினால் நமக்கே நன்மை புரிந்துகொள்வதுடன் பல்கோடிப் பிராணிகளின் உபத்திரவத்தையும் நீக்குவோம்.

"ஊனைத்தின் றூனைப்பெருக்காமை மிகவினிதே."

கால்நடைகளுக்கு வீட்டுமருந்துகள்.

கால்நடைகளின் சாமான்ய ரோகங்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளும் கொடுக்கவேண்டிய சாதாரணக் கடைமருந்துகளும் குடியானவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் ஜந்து வைத்தியர்களைத் தேடிச் செல்லுகிறதில்லை. ஆனால் அவர்கள் கால்நடைகளுக்கு வைத்தியஞ் செய்வதில் தங்களுக்கிருக்கிற சாமர்த்தியத்தில் மிகுதியான விசுவாசத்தை வைப்பதினால் அவைகளுக்குப்பெருத்த வியாதிகள் கண்டிருக்கும் பொழுதுகூட வைத்தியர்களை யழைக்காமல் அவைகளை யிறக்க விட்டுவிடுகிறார்கள். ஆகையால் இந்தியாவின் தற்கால நிலைமையில், மிகவும் அவசியமாய் வேண்டும்பொழுது ஜந்து வைத்தியர்கள் அகப்படமாட்டார்கள். ஏனென்றால், அவர்களைக் கூப்பிடுகிறவர்கள் குறைந்துவிடவே அவர்களும் அபுரூபமா யகப்படுகிறார்கள். நாட்டுப் பக்கங்களில் ஒவ்வொரு வீட்டிலும் ஆமணக்கு நெய், சணல்விதை நெய், கந்தகம், உப்பு,

கடுகு, இஞ்சி, மிளகு, மிளகாய் முதலிய பண்டங்கள் சாதாரணமாயிருக்கும். இவைகள் தனித்தனியாகவும் சிற்சில கலந்தும் கால்நடைகளுக்கு மருந்துகளாகவுபயோகப் படத்தக்கவை. இன்னும் இந்துப்பு, சோடாவுப்பு, காடி, மயில்துத்தம், டர்பெண்டைன், க்ளோரோடைன் முதலிய மருந்துகளைக் கடைகளிலிருந்து தருவித்துக்கொள்ளலாம்.

ஆமணக்கு நெய்யானது கன்றுக்குட்டிகளுக்கும் ஆடுகளுக்கும் சிறந்த ஔஷதம். சில கன்றுகள் பிறந்து சிலநாள்வரையில் சரியாய்ப் பிரவர்த்திக்குப் போகிறதில்லை. அதற்கு 2 அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் கொடுத்துவந்தால் குணமாகும்.

கால்நடைகளின் ஆகாரத்தோடு சிறிதளவு கந்தகத்தைச் சேர்த்து 10 அல்லது 15 நாளைக்குக் கொடுத்தால் அவைகளுக்கு நலம். மாடுகளுக்கு அரையவுன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரையிலும், ஆடுகளுக்கு ஒரு திராம் முதல் இரண்டு திராம்வரையிலுந்தான் கொடுக்கவேண்டியது. குதிரைகளின் சொறி மருந்துகளிலும் கந்தகத்தைக் கலப்பதுண்டு.

கடுகை யுள்ளுக்குக் கொடுக்கிற மருந்தாக வுபயோகப்படுத்துகிறதில்லை; ஆனாலது கொப்புளமெழுப்பு மருந்தாகப் பிரயோஜனப்படும். அதைத் தண்ணீரைவிட் டரைத்துப் போடவேண்டிய விடத்தில் போட்டுத் தேய்த்து இருபது நிமிஷமானவுடன் நன்றாய்க் கழுவிவிடவேண்டும். இல்லாவிடில் அது அவ்விடத்தைக் கறைப்படுத்திவிடும்.

வயிற்று வலிக்குக் கருவாப்பட்டையையும் இஞ்சியையும் உப்போடு சேர்த்துக் கொடுக்கலாம். அஜீர்ணமா யிருந்தால் சோடா வுப்போடு கலந்து கொடுக்கவேண்டியது. இதற்கு மிளகையுங் கொடுக்கலாம். ஆனால் மிகச் சிறிய அளவாய்க் கொடுக்கவேண்டும். அதிகமாய்க் கொடுத்தால் வயிற்றி லெரிச்சலை யுண்டாக்கும்.

கால்நடைகளின் வயிற்றில் கிருமிகள் சேர்வது சாதாரணமான வொரு வியாதி. அதற்குச் சிறிதளவு டர்பெண்டைன் திராவகத்தைப் பாலோடு கலந்து கொடுத்தால் அக்கிருமிகள் செத்துப்போகும்.

மனிதருடைய வயிற்று வலிக்குக் குளோரோடைன் என்னுந் திராவகம் நல்ல ஔஷதம். அதைக் கால்நடைகளுக்குங் கொடுப்பதுண்டு. இம்மருந்து வலியைக் கொஞ்சங் குறைக்குமேயொழிய அதை வேரோடு நீக்காது. வயிற்றுவலிக்குக் காரணமாயிருக்கிற அசுத்தங்களை எண்ணெயைக்கொடுத்துத் தான் நீக்கவேண்டும்.

காடியை யெந்த வியாதிக்குங் கொடுக்கலாமென்று சொல்லுகிறார்கள். அதில் குணமிருக்குமென்பது சந்தேகமான விஷயமாயிருக்கிறது. அது லாகிரித்தன்மை பொருந்தியிருப்பதினால் ஒருவேளை சிறிதுநேரம் நோய் தெரியாம லிருக்கும்படி செய்கிறது போலும்.

மயில்துத்தம் புண்களையுஞ் சொறிகளையு மாற்றும். ஆனாலதைச் சேர்க்கவேண்டிய பரிமாணத்தைப்பற்றி யதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்திய கிருஷிக்காரர் இம்மருந்தைத் தாங்களே கையாளாமல் வைத்தியர்களைக்கொண்டு உபயோகப்படுத்திக்கொள்வது உசிதமாகும்.

பட்டுப்பூச்சி.

பட்டானது மிகவும் விலையுயர்ந்த வஸ்திரங்கள் நெய்வதற்காக உபயோகப்படும். பட்டானது ஓர் சிறிய புழு தன் படுக்கைக்காக நூற்கும் நூல். எவ்வளவோ கஷ்டப்பட்டு தனக்கொரு மிருதுவான படுக்கை ஏற்படுத்திக்கொண்டவுடனே, அப்பூச்சியை வெந்நீரில் போட்டு, கொன்றுவிட்டு அதன் படுக்கையாகிய பட்டினால் மிகவும் அழகான வஸ்திரங்களை நெய்கிறார்கள்.

ஆறாவது நூற்றாண்டின் முதலில் இரண்டு பாதிரிகள் சீனா தேசத்திற்குப் போயிருந்தபொழுது, அங்கிருந்து சில பட்டுப்பூச்சிகளின் முட்டைகளை ஓர் மூங்கிற் குழாயில் ஒளித்து கான்ஸ்டான்டிநோபிலுக்குக் கொண்டுபோய், அவ்விடத்தில் அம்முட்டைகளைப் பொரிக்கச் செய்து அவற்றிலிருந்த புழுக்களை வளர்த்துப் பட்டு உண்டாக்கினார்கள். அதுவரையில் சீனா தேசத்தாருக்கு மாத்திரம் பட்டு உண்டாக்கும் விதம் தெரிந்திருந்தது. மேற்கூறிய விதத்தில் முதல் முதல் ஐரோப்பியர்கள் பட்டு உண்டாக்கும் விதத்தை அறிந்தார்கள். அதற்கப்புறம் பட்டு நூற்கும் தொழில் இடலி, ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய தேசங்களில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவிற்று. பிரதி தேசத்தாரும் தங்க

ளுக்குப் பட்டு நூற்கும் தொழில் தெரிந்தவுடனே, வேறு யாருக்கும் அத்தொழிலைத் தெரிவிக்கக் கூடாதென்று, எவ்வளவோ ரகசியமாய் வைத்திருந்தார்கள். ஆனபோதிலும் அது வெளிப்படாம லிருக்கவில்லை. அநேகருக்குத் தெரிந்த விஷயம் வெகுகாலம் ரகசியமாக இருக்காது. ஓரிடத்திற்குப் பிறகு மற்றோரிடமாக ஐரோப்பியாவின் தென்தேசங்களி லெல்லாம் பட்டுநூற் றொழில் சாதாரணமாய்விட்டது.

பட்டுப்பூச்சி என்பது முசுக்கட்டைச் செடியிலிருக்கும் ஒரு புழு. மற்றச் செடிகளிலெல்லாம், எண்ணிறந்த பூச்சிகள் வாசஞ்செய்ய, முசுக்கட்டைச் செடியில்மாத்திரம் சாதாரணமாகப் பட்டுப்பூச்சி யொன்று தவிர வேறெந்தப் பூச்சியும் சேருகிறதில்லை. அச்செடி பட்டுப்பூச்சிக்கே உரித்தானதுபோ லிருக்கிறது. அது பயிராகும் சீனதேசத்தில், அதன் இலைகளின்மீது சாதாரணமாகப் பட்டுப்பூச்சிகளைப் பார்க்கலாம்.

பட்டுப்புழுச் சற்றேறக்குறையக் கடுகவ்வளவு முட்டையிலிருந்து உண்டாகிறது. ஒரு பூச்சி அநந்தம் முட்டைகளை யிட்டபின் உடனே இறந்துவிடும்.

முட்டை பொரித்தவுடனே பட்டுப்பூச்சி சற்றேறக்குறையக் காலங்குல நீளமிருக்கும். எட்டுநாள் இலைகளைப் புசித்து, அதிக விரைவாகப் பருத்துத் தன் தோலை உரித்துவிடும். உடனே மறுபடியும் அதிக ஆவலோடு நன்றாய்த் தன் ஆகாரத்தைத் தின்று ஐந்து நாளுக்குள் இரண்டாவது விசை தோலுரிக்கும்; இவ்விதமாக நாலுமுறை தோலுரித்தவுடனே பக்குவகால மடைந்து மூன்றங்குல நீளமுள்ளதாகும். அப்போது அது நல்ல பொன்னிறமாக விருக்கும். இத்தருணத்தில் அப்புழு ஆகாரம் தின்னுகிறதை விட்டுக் கூண்டு கட்டுகிறதற்கு ஒரு மூலையிற்போ யடையும்.

அம்மூலையி லிருந்துகொண்டு நூல் நூற்றுத் தன்னைச் சுற்றி நூலை வளைத்துத் தான் மறைந்துபோகும்படி ஒரு கூண்டைப் பின்னும். இக்கூண்டு முட்டை வடிவாக விருக்கும். இக்கூட்டைப பின்னினவுடனே மறுபடி யொருதரம் தோலுரிக்கும். அதன்மேல் பழுப்பு நிறமுடையதாய் உயிரற்றதுபோல் கிடக்கும். இப்படி பதினைந்து இருபது நாளிருந்து தன் கூண்டின் நூல்களை நீக்கிக்கொண்டு, இறகுகளோடு ஒரு பட்டுப்பூச்சியாக வெளிப்படும்.

இப்பூச்சி தன் கூட்டைத் திறந்துகொண்டு வெளிப்படுமுன், அக்கூட்டை எடுத்து வெந்நீரிற் போட்டு, அதற்குள்ளிருக்கும் பூச்சியைக் கொன்றுவிட்டு, அக்கூண்டில் சுற்றியிருக்கும் பட்டின் முனையைக் கண்டுபிடித்து, அநேக கூண்டுகளுடைய பட்டுகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டைகளில் சுற்றிக் கொள்ளுவார்கள்.

பட்டுப்பூச்சியினின் றுண்டாகும் பட்டானது நேர்த்தியும், தெளிவுமான ஒரு பிசின். இது அப்பூச்சியிலிருந்து வெளிப்பட்டுக் காற்று பட்டவுடனே கடினமாகிறது. ஒரு கூண்டிலிருந்து எடுக்கப்படும் பட்டு 300 கெஜம் நீளமிருக்கும். இது அதிக மெல்லிய தன்மையுள்ளது. ஆகையாற்றான் 2,000 கூண்டுகளைப் பிரித்தால் ஒரு ராத்தல் பட்டாகிறது.

மைசூர் நாட்டில் பட்டு நூல் உண்டாகிறது. இந்து தேசத்தில் வங்காளத்திலேயும் பட்டு உற்பத்தியாகும்.

இப்படிப்பட்ட விலையுள்ள பட்டைப் பட்டுப்பூச்சிகள் தம்முடைய சவுக்கியத்திற்காக உற்பத்தி செய்கின்றன. அந்தப் பட்டுக்காக மனிதன் அந்தப் பூச்சியைக் கொன்று அப்பட்டைஎடுத்துக்கொள்ளுகிறான். ஆகையால் பட்டுப்பூச்சிகள் தம்முடைய சவுக்கியத்திற்காகச் செய்யும் காரியத்தினால் அவைகளுக்குக் கெடுதி சம்பவிக்கிறது. பூச்சிகளைக் கொல்லாமல் அப்பட்டை யெடுத்துக்கொள்ள ஏதாயினும் உபாயம் கண்டுபிடித்தால் அளவில்லா நன்மையுண்டாகும். ஒரு பூச்சியைக் கொன்றுவிடுவதினால் அப்பூச்சியோ மேல்மேல் உற்பத்தி செய்யக்கூடிய பட்டுக்கு நஷ்டம் உண்டாகிறது. மேல் சொல்லிய உபாயத்தைப்போல் ஓர் உபாயம் கண்டுபிடித்தால் பட்டுக்கும் நஷ்டமில்லை, பூச்சிக்கும் ஹிம்சையில்லை.

கனம்பொருந்திய சாரல்டன் துரைசானி.

இவ்வுலகில் நன்மை செய்யவேண்டுமென்கிற கருத்துடன் கஷ்டப்படுகிற சபையோர்க ளனைவரும் இந்து தேசத்தில் கஷ்டப்பட்டுப் பலவிதமான நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் வாயற்ற ஜந்துக்களின் விஷயத்தில் பட்ட கஷ்டங்களி லொன்றாயினும் சரியான பலனைக் கொடுக்கவில்லை.

இந்து தேசத்தில் ஜந்துக்களை விசேஷ அன்புடன் பார்க்கவேண்டி யிருக்கிறது. அந்நிய தேசங்களில் ஜந்துக்களை எவ்வளவு பிரீதியுடன் வளர்க்கிறார்களோ அதைக் காட்டிலும் அதிகப்பிரீதியுடன் வளர்க்கவேண்டும். ஏனென்றால், அத்தேசத்தில் மதசம்பந்த விஷயத்தில் ஜந்துக்கள் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தை வகித்திருக்கின்றன. ஆகையால் அத்தேசத்தில் ஜந்துக்களை மிகவும் பிரீதியுடன் வளர்ப்பார்களென்று எல்லோருக்கும் சகஜமாய்த் தோன்றும். ஆனால் சுமக்கமுடியாத சுமையை ஏற்றிப் பசியோடும், வியாதியோடும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிற ஜந்துக்களைச் சவுக்கினால் அடித்து ஹிம்சித்துக்கொண்டு ஓட்டுகிறதை, இந்து தேசத்தில் வசிக்கும் ஆங்கிலேயர்கள் சாதாரணமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சில முக்கியமான பட்டணங்களில் மாத்திரம் ஜீவ ஹிம்சை நிவாரண சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பட்டணங்களில்கூட இராஜாங்கத்தாரின் உதவியில்லாமல் பிரத்தியேகமாய் ஜனங்கள் சபைகள் ஏற்படுத்திக்கொண்டு கஷ்டப்படுகின்றார்கள். இவ்விஷயமான ஜீவ ஹிம்சைக்காகச் செய்யப்படும் தாவாக்கள் விஷயத்தில் சில சட்டங்கள் ஏற்படுத்தியிருக்கிறது தவிர, வேறு எவ்விதமான சகாயமும் இச்சபையோர்களுக்கு இராஜாங்கத்தார் கொடுக்கிறதில்லை.

பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய வியாபார ஸ்தலங்களில் எருதுகளை எவ்வளவு ஹிம்சிக்கிறார்களோ அது எல்லோருக்கும் சாதாரணமாகத் தெரிந்த விஷயமே. ஆங்கிலேய இந்து பத்திரிகைகளில் (Anglo-Indian Journals) அடியில் எழுதப்பட்டிருக்கும் கடிதத்தைப்போல் அநேக கடிதங்களை அடிக்கடிப் பார்க்கலாம். "ஸ்டேட்ஸ்மென்" (The Statesman) என்னும் ஒரு கல்கத்தா பத்திரிகையில் 1911–ம் வருஷம் பெப்ருவரி மாதத்தில் ஓர் கடிதம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது.

"உங்கள் பத்திரிகையில் பளுவு சுமக்கும் எருதுகளின் ஹிம்சையைக் குறைப்பதற்காக எழுதப்படுகிற கடிதங்களையெல்லாம் பதிப்பிக்கிறீர்கள். இந்தக் கடிதத்தையும் நீங்கள் எழுதும் விஷயத்தில் கொஞ்சம் நன்மை உண்டாகும்.

வண்டிக்காரர்களைச் சவுக்குகளை வைத்துக்கொண்டு வண்டிகளை ஓட்ட விடுகிறவரையில் ஜீவ ஹிம்சை குறையுமென்று நம்புகிறது வியர்த்தந்தான். அநேகமாய் வண்டிக்காரர்கள் தம் சொந்த எருதுகளை ஓட்டுகிறதில்லை. ஆகையால் அவைகளுக்கு என்ன சம்பவித்தாலும் அவர்கள் லக்ஷியம் செய்கிறதில்லை. நல்ல வெய்யிலில் சுமக்க மாட்டாத சுமையை சுமந்துகொண்டு போவதும் தவிர அந்த எளிய ஜந்துக்களை வண்டிக்காரர்கள் கொன்றுவிடுகிறார்கள். அடிப்பதுமன்றி அடிகளைத் தலையிலும் கொடுக்கிறார்கள். கண்களில் அடிப்பட்டாலும் அவர்கள் பார்க்கிறதில்லை.

நம்முடலில் ஒரு அடிப்பட்ட பக்ஷத்தில் அதனால் நமக்கு எவ்வளவு நோவு உண்டாகிறது. அதே இடத்தில் மற்றொரு அடிப்படுமோ என்கிற எண்ணத்தினால் மாத்திரம் நமக்குப் பைத்தியம் பிடித்துப்போகும். சாதாரணமாய் அந்த எளிய ஜந்துக்கள் பிரதிதினமும் இருநூறு அடிக்குக் குறையாமல் தின்கின்றன. இந்த அடிகளெல்லாம் அவைகளுக்கு எவ்வளவு நோய் கொடுத்திருக்குமோ என்று நாம் யோசிக்கும்பக்ஷத்தில் நம்முடைய மனதிற்கு எவ்வளவு சங்கடமுண்டாகும். இந்த ஜந்துக்களுக்கு இப்படிப்பட்ட பாதை நிரந்தரம். இந்தப் பாதையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்குப் பிரயத்தினம் செய்கிற விஷயம் நமக்கு எப்படித் தெரிகிறதென்றால் அடிக்கும்பொழுது அவை தம்முடலை ஒடுக்கிக்கொள்வதில் விசதமாகும்.

இப்பேர்ப்பட்ட ஹிம்சையை வண்டி ஓட்டும் பாபிகள் தினந்தோறும் செய்கிறார்களே யொழிய அதனால் அவைகள் கொஞ்சமாகிலும் வேகமாய் ஓட முடியாது. வண்டியில் பளுவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் எருதுகள் விஷயத்தில் வண்டிக்காரர்கள் குரூரமாகத்தான் இருக்கிறார்கள். கையிலிருக்கும் கழியினால் மாட்டை யடிக்கத்தான் வேண்டுமென்று ஓர் கருத்துடன்

அவர்கள் வண்டிய்யை ஓட்டுகிறார்கள். அப்படிப்பட்ட பாதகமான காரியத்தைச் செய்வதற்காக அவர்களை நாம் அடித்தால்'அவர்கள் அந்த ஜந்துக்களை நாம் இல்லாத ஸமயத்தில் கொன்றுவிடுகிறார்கள். ஐயோ! ஊமை ஜந்துக்கள் படமுடியாத கஷ்டத்தைப் பட்டும் கிழத்தனத்திலாகிலும் கொஞ்சம் சுகத்துடன் காலம் கழிக்க விடாமல் அக்காலத்திலும் அவற்றினிடத்தில் வேலை வாங்குகிறார்க ளல்லவா! அவைகள் பட்ட கஷ்டத்துக்கெல்லாம் பலன் கசாப்புக்காரன் கத்திதான்! ஆனால் பரலோகத்தில் இந்த அற்ப ஜந்துக்களுக்காகப் புல் நிறைந்த மைதானமும் நல்ல தண்ணீருள்ள ஊற்றுகளும் கடவுளால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமென்று நான் நம்புகிறேன்."

இப்படிப்பட்ட கடிதங்கள் என்னிடத்தில் அநேக மிருக்கின்றன. என்னுடைய அனுபவத்தில் இப்பேர்ப்பட்ட குரூர காரியங்களுக்கு அநேக உதாரணங்க ளிருக்கின்றன. வண்டிக்காரர்கள் எருதுகளை ஒரு விதத்தில் ஹிம்சிக்கிறதில்லை. கழியால் கண்களின்பேரில் அடிப்பது, முரட்டுத்தனமாய் வாலை முறுக்கி உடைப்பது முதலிய ஹிம்சையினால் அந்த ஜந்துக்கள் முதுகு எலும்பு முதலியவை உடைந்து மரணமடைகின்றன. வண்டி ஓட்டும் சண்டாளர்கள் மாடுகளை எப்படி ஹிம்சித்தபோதிலும் அதைப் பார்க்கும் ஆங்கிலேய ஸ்திரீகள் அவைகளுடைய கஷ்டத்தை நிவாரணம் செய்கிறார்களா என்று பார்ப்போம். ஆனி பிசெண்டு துரைசானி அவர்கள்(Mrs. Annie Besant) இவ்விஷயத்தில் கொஞ்சம் பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிறார்கள். நான் கேட்டுக்கொண்டதின்பேரில் இரண்டு தடவையில் மதராஸிலும் கல்கத்தாவிலும் மிகவும் நேர்த்தியான உபந்நியாசங்களைக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட உபந்நியாசங்களை அங்கங்கு அடிக்கடி கொடுக்க அந்தம்மாள் ஒத்துக்கொண்டார்கள். இதனால் கொஞ்சம் நன்மை உண்டாகுமென்று நம்புகிறேன்.

இப்படிப்பட்ட தேசாபிமான காரியங்களைக்குறித்து அநேகர் பச்சாத்தாபம் பட்டபோதிலும் இந்து தேசத்தில் வசிக்கும் ஆங்கிலேய ஸ்திரீகள் சம்பந்தப்பட்டவரையில் என்னுடைய கஷ்டங்களெல்லாம் கடலில் கலந்த காயமாகவே யிருக்கிறது. ஜனங்களெல்லோரும் ஸவுக்கியமாயும் க்ஷேமமாயும் இருக்கவேண்டுமென்கிற கருத்துடன் இந்து தேசத்திலிருக்கும் ஸ்திரீகளெல்லாரும் பிரயத்தினப்பட்டாலொழிய நன்மை உண்டாகாது. ஜனங்கள் ஸவுக்கியமாயிருந்தால் ஜந்துக்களுக்கும் சவுக்கியம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகங் கிடையாது. ஆகையால் இந்து தேசத்திலிருக்கும் பிரதி ஆங்கிலேய ஸ்திரீயும் ஜீவ ஹிம்சை நிவாரணைக்காக பிரயத்தினப்படுவார்களென்று நம்புகிறேன்.

இங்கிலாந்திலும் மற்ற நாகரீகமுள்ள தேசங்களிலும் அநேகர் தயை என்னும் ஓர் வண்டிக்குச் சக்கிரத்தைப்போல் இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நன்மையை ராஜ்யம் முழுவதும் பரவச்செய்ய அவர்களுடைய சகாயம் வேண்டும்.

இந்து தேசத்தில் ஜந்துக்களின் க்ஷேமத்தின்பொருட்டு மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டும். இவைகளை ஸ்திரீகள் கவனிக்கலாம். ஆதரிப்போர்கள் வேண்டும். அத்தேசத்தில் வசந்த காலத்தில் ஸ்திரீகளுக்கு விசேஷ சாவகாசம் இருக்கும். செலவழிக்க திரவியம் வேண்டும். வாயினால் மாத்திரமல்லாமல் காரியங்களினால் சகாயம் வேண்டும். இக்காரியங்களைச் சாதிக்க இத்தேசத்திலிருக்கும் ஆங்கிலேய ஸ்திரீகளுடைய தயை தவிர வேறு மருந்துண்டா! இந்துதேசத்து ஸ்திரீகளுக்கு நம் சுயதேசத்தில் இவ்விஷயத்தில் கஷ்டப்படுகிறவர்க ளனேகர் ஸ்நேகிதர்களாய் இருக்கவேண்டும். ஸ்திரீகள் ஜீவ ஹிம்சைக்காக தாவா கொண்டுவருவதினால் மாத்திரம் அவர்களுடைய தயாளத்துவம் வெளிப்பட மாட்டாது. இவ்விஷயத்தில் அவர்கள் மிகவும் சிரத்தையுடன் வேலை செய்யவேண்டும்.

சம்மன் செய்த ஒவ்வொரு தாவாவிலும் அந்த ஜந்து அலுப்பாற்றிக்கொள்வதற்கும், பசு சிகிச்சை ஆஸ்பத்திரியில் அதன் வைத்தியத்திற்கும் கொஞ்சம் பணம் செலவு செய்து, அதை மீட்டுக் கொண்டுபோக வரும் சொந்தக்காரனுக்கு அந்த ஜந்துவின் பூர்வ ஸ்திதிக்கும் அப்பொழுது இருக்கிற ஸ்திதிக்கும் வித்தியாசத்தை யெடுத்துக்காட்டி அதுமுதலாவது அதை ஜாக்கிரதையாய் வளர்க்கும்படி அவனுக்குப் புத்திசொல்லவேண்டும்.

இந்துதேசத்தில்ஜீவ ஹிம்சை அதிகமாய்க் கிடையாதென்று சொல்லுகிறவர்கள் கால்

நடைகளைப் புகைவண்டியில் கொண்டுபோகும் விதத்தைப்பற்றிக் கொஞ்சமாகிலும் யோசித்திருப்பார்களா? அல்லது ஜீவ ஹிம்சையைக்குறைக்கும்பொருட்டு அத்தேசத்திலுள்ள பெரிய பட்டணங்களிலிருக்கும் சந்தைகளுக்குளெப்பொழுதாயினும்போய்ப்பார்த்திருப்பார்களா? 'அப்படிச் செய்திருப்பார்களேயானால் பிரதி ரெயில்வே கம்பெனியிலும் கால்நடைகள் வழியில் தாகத்தினாலும் அஜாக்கிரதையினாலும் சாகாமலிருக்கச் சட்டங்கள் ஏற்பட்டிருந்தாலும், அச்சட்டங்கள் அப்பியாசம் செய்ய அப்பிரயோஜனமானவை என்ற விஷயம் ஸ்பஷ்டமாய் அறிந்திருப்பார்கள்.

எந்தப் பெரிய பட்டணத்திலும் கூலிக்காரர்கள் கொள்ளுங் கோழிகளை எப்படிக் கூடைகளில் அடைத்து ரெயில்வேயில் போடுகிறார்களோ அது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவைகளை வண்டியிற் போட்டு இழுக்கும்போது அந்தக்கஷ்டத்தை வாயினால் சொல்லமுடியாது. சரியான கூடையில் சில கோழிகள் இருந்தாலொழிய ஏற்றுமதியாக மாட்டாதென்று ஓர் சட்டம் ஏற்படுத்த ஆங்கிலேய ஸ்திரீகளால் முடியாதா?

நான் ஸிம்லாவில் இருக்குங் காலத்தில் கூடைகளில் அநேக ஜந்துக்களை அடைத்துக் கல்கத்தா ஸ்டேஷனில் வண்டியிலிருந்து மொத்தம் மொத்தமாய்க் கீழே தள்ளி அங்கொரு இராத்திரி அல்லது அதிககாலம் தண்ணீர்கூட இல்லாமல் தள்ளிக்கிடப்பதை நான் பார்த்திருக்கிறேன். முந்நூறு மைல்களைக் காட்டிலும் அதிக தூரம் போகவேண்டிய பட்சிகளுடன் ஓர் மனிதன் போகவேண்டுமென்று சட்டங்களி லிருந்தபோதிலும், அப்படிப்பட்ட மனிதன் ஒருவனையாவது நான் காணவில்லை.

அவ்வெளிய ஜந்துக்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் காப்பாற்ற அங்கிருக்கும் ஆங்கிலேய ஸ்டேஷன் மாஸ்டர் மிகவும் சிரமப்பட்டார். ஆனாலும் அநேக கூடைகளில் அந்த ஜந்துக்களில் அநேகம் செத்துக்கிடந்தன.

இவ்விஷயங்களைக் கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு ஆங்கிலேய ஸ்திரீயும் தயாளத்துவத்தைக் குறித்த சட்டங்களைச் சரியாய் அமுலுக்குக் கொண்டுவரும்படி பிரயத்தினம் செய்யவேண்டிய தவசியமாயிருக்கிறது. இந்த ஜந்துக்கள் விஷயத்தில் அநேக ரெயில்வே அதிகாரிகளும் மற்ற இதர உத்தியோகஸ்தர்களும் இஷ்டத்துடன் வேலைசெய்வதையும் நான் பார்த்திருக்கிறேன்.

இந்து தேசத்துக் கடைகளில் காட்டுப் பறவைகளை மிகவும் வதைக்கிறார்கள். புறா, குருவி முதலான அற்ப ஜந்துக்களைக் காலை ஒடித்துக் கண்ணைக் குத்தி விற்பனையாகும் வரையில் அன்னபானங்க ளில்லாமல் வைத்திருக்கிறார்கள். கல்கத்தா சந்தையில் அப்படிப்பட்ட ஜந்துக்களுக்கு நான் தண்ணீர் காட்டியிருக்கிறேன். கையில் வைத்துக் கொண்டு தண்ணீர் காட்டும்போது மிகவும் ஆவலுடன் அத்தண்ணீரைப் பருகுகின்றன.

(இன்னும் வரும்.)

பதற்றமுள்ள சுல்தானும் அவன் அருமை வல்லூறும்.

முன்னொரு காலத்தில் பாரசீக தேசத்தை ஆண்டுவந்த சுல்தான்களி லொருவன் ஓர் வல்லூறை அதிக விருப்பத்துடன் வளர்த்து வந்தான். அவ்வாறு தான் வளர்த்துவந்த வல்லூறுகளி லொன்று பார்வைக்கு மிக்க அழகாயும் புத்திக் கூர்மையுள்ளதாயு மிருந்தமையால் அதனிடம் விசேடமான அன்பு வைத்துவந்தான். அல்லாமலும், அதைப் புறாக்கள் பிடிக்க நன்றாய்ப் பழக்கிப் புறா வேட்டைக்கென்றே அருமையாய் ஆதரித்து வந்தான். அப்படி இருக்க ஒருநாள் தன் பரிவாரங்களோடு காட்டிற்குச்சென்று அந்த வல்லூறைப் புறாவேட்டைக்கு விட்டான்.

அதுகண்ட ஒரு புறா தன் சத்துருவின் வருகையைத் தெரிந்துகொண்டு அதிவேகமாய்ப் பறந்துசெல்ல, அந்த வல்லூறும் அதை விடாமற் பின்தொடர்ந்துசென்றது. அதைப் பார்த்த சுல்தான் தன் வல்லூறு கண்ணுக்கு எட்டாமல் மறைந்துபோகுமென் றெண்ணித் தானும் குதிரையின்மீ தேறிக்கொண்டு அது செல்லும் வழியே சென்றான். அவன் அங்ஙனம் செய்தமையால் தன் பரிவாரத்தை விட்டுப் பிரிய நேர்ந்தது. தெய்வச்செயலால் அப்புறா வல்லூற்றினின்று விலகித் தப்பிப் போய்விட, வல்லூறு தன் யஜமானிடம் திரும்பி வந்து சேர்ந்தது.

அப்போது சுல்தான் வெயிலின் கொடுமைக்கு ஆற்றாதவனாய் நீர் வேட்கையால் அங்குமிங்கும் தவித்துச் செல்கையில் சிறிது

தூரத்தில் ஓடையொன்றிருக்கக் கண்டு அங்குச் சென்று குதிரையை விட்டிறங்கி தன்னிடமிருந்த ஓர் கிண்ணத்தில் அந்நீரை மொண்டு குடிக்க யத்தனித்தான். ஓடையில் ஜலம் மிகக் கொஞ்சமா யிருந்தமையால் அக்கிண்ணம் நிறைய வெகுநேரம் சென்றது.

இங்ஙனம் சிரமப்பட்டு மொண்ட அத்தண்ணீரைக் குடிக்க வாயினிடம் கொண்டு போக, தன் வலக்கை மணிக்கட்டி லுட்கார்ந்திருந்த அவ்வல்லூறு கிண்ணத்தைத் தன் சிறகால் அடித்துக் கவிழ்த்துவிட்டது. அப்பொழுது சுல்தானுக்கு அடக்கமுடியாத கோபமுண்டாயிற்று. ஆயினும் அதனிடம் கொண்டிருந்த வெகு அன்பினால் அதை அப்பொழுது ஒன்றும் செய்யாமல் பொறுத்துக் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று விசனப்பட்டு, மறுபடியும் ஒரு தரம் தண்ணீர் மொள்ளத் தொடங்கினான். இரண்டாந்தரமும் முன்போல் கிண்ணத்தை வாயண்டை கொண்டுபோகையில் வல்லூறு அதைக் கவிழ்த்துவிட்டது.

இரண்டுதரமும் தன் அருமை வல்லூறு அப்படிச் செய்ததற்குக் காரணத்தைச் சற்று நிதானித்துப் பார்க்காமல் பதற்ற குணத்தால் அதையுடனே அடித்துக்கிழித்தெறிந்து விட்டான்.

அப்பால் பரிவார ஜனங்களி லொருவன் அவனைத் தேடிக்கொண்டு அங்கு வந்துசேர்ந்தான். அப்பொழுது அங்கு கீழே கவிழ்ந்து விழுந்துகிடக்கும் கிண்ணத்தையும் கிழிப்புண்டு செத்துக்கிடக்கும் வல்லூறையும் கண்டு, அவன் சுல்தானை நோக்கி: சுவாமி இதென்ன புதுமை! தங்கள் அருமை வல்லூறு இப்படி செத்துக்கிடக்கும் காரணமென்ன? தங்கள் கிண்ணமும் கவிழ்ந்து விழுந்து கிடக்கின்றதே. என்னவிசேஷம்? என்று கேட்க, சுல்தான், நடந்த விருத்தாந்தம்முழுமையும்சொல்லியபின் 'இப்பொழுது எனக்குத் தாகம் மேலிட்டிருக்கிறது, இவ்வாற்றிலுள்ள தண்ணீரோ மிகவும் கொஞ்சமாயிருக்கிறது. அதுவுமன்றி அதிக கலங்கலாயு மிருக்கிறது. ஆகையால் இவ்வோடை எங்கிருந்து தொடங்கி வருகிறதோ அங்கு சென்று இக்கிண்ணம் நிரம்பத் தண்ணீர் கொண்டுவா' எனக் கட்டளையிட்டு அனுப்பினான்.

அவ்வாறே அரசன் கட்டளையை மேற்கொண்டு செல்லும் சேவகன் அவ்வோடையின் உற்பத்திஸ்தானத்துக்குப்போய்ப்பார்க்கும்போது அதில் ஓர் பெரிய சர்ப்பம் செத்து அழுகிக்கிடப்பதைக் கண்டு, அந்நீரைமொள்ளாமல் சுல்தானிடம் வந்து, ஐயா அரசே! தங்கள் உயிரைக் காப்பாற்றப் பிரயத்தினம் செய்த வல்லூறைத் தாங்கள் தாகத்தின்கொடுமையால் ஆலோசிக்காமல் கொன்றுவிட்டீர்களே. அவ்வோடையில் ஒரு நாகம் செத்து அழுகிக் கிடக்கின்றதே அதன்மீது பாய்ந்து வரும் நீரைக் குடித்தால் விஷமல்லவா? ஆனதுபற்றியே அவ்வல்லூறு தாங்கள் அதைப் பருகாமலிருக்க அத்தண்ணீரைக் கவிழ்த்தது. வீணே பதறி அதைக் கொன்றுவிட்டீர்களே, இனி செய்யத்தக்கது யாதென்றான்.

அதைக்கேட்டு சுல்தான் திடுக்கிட்டு அவ்விடம் சென்று பார்க்கையில் சேவகன் சொன்னபடியே யிருக்கக் கண்டு, பாவியான் பதறிப் பாவம் செய்தேனே? எனப் பலவாறுகத் துக்கித்துப் பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **பாம்புகடிக்கு மருந்து.**--மிஸ்டர் வெஸ்டன் என்பவர் வாழைமாத்தைக் குத்தி அதில் வடியும் சாற்றைப் பாம்பு கடித்திருப்பவர்க்கு மூன்றுநாள் விடாது கொடுக்க வேண்டும், அதனால் எவ்வித விஷமும் நீங்கும் என்று கூறுகின்றார்.

---

2. **ஆமையும் அதன் ஜீவனும்.**—ஆமையின் தலையை வெட்டி யெடுத்துவிட்டால் அது 400 முழந்தூரம் நகர்ந்து செல்லுமாம். அதன் ஈரலை யெடுத்துத் தொங்கவைத்தால் அது பல நாளைக்குத் துடித்துக்கொண்டிருக்குமாம்.

---

3. **திருவாங்கூர் ஜீ. ஹி. நி. சங்கம்.**—இச் சங்கத்தின் கூட்டமொன்று சென்ற செப்டெம்பர் மீ 6வ நடத்தப்பட்டது. சங்கத்தின் ரிபோர்ட்டைப் படித்தபிறகு வருகிற ஜந்து காட்சிக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1913.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாருடைய கொள்கை.

OF THE REGI... MADRAS 1914

உபாத்தியாயர்களுக்குச் சில வார்த்தைகள்.

சிறுவர்களுக்குஜீவகாருணியமுண்டாக்கும் விதமெப்படியென்றால், பசு பக்ஷி மிருகாதிகளுடைய அறிவு, அன்பு, உபயோகம் முதலியவற்றை விளக்கும்படியான சிறு கதைகளை யெடுத்துப் படிக்கும்படிச் செய்யவேண்டும். மேலும், தீனி தின்று தண்ணீர்க் குடித்து உயிர்வாழும் ஜீவன்களெல்லாம் தம்முடம்பிலுண்டாகும் உபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாமல் வருத்தப்படுமென்பதையும், அப்படி அவை வருந்தும்படி அவைகளுக்குக் கொடுமை செய்வது கொடிய பாவமென்பதையும், அந்தப் பாவஞ் செய்யாதபடி விலகப் பல வழிகளுண்டென்பதையும், அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதியச் செய்யவேண்டும். இப்படியே பல சிறுவர்கள் நாய், பூனை, தவளை, பறவை முதலிய எளிய ஜந்துக்களைப் பிடித்து இம்சிப்பதாகப் பலவாறு கேள்வியுற்றிருக்கிறோம். அப்படி அவைகளை இம்சிக்காமல் அவைகளிடத்தில் அன்பு பாராட்டவேண்டுமென்றும், அற்பப் பிராணிகளைப் பரிவுடன் பாதுகாப்பது பெருந்தன்மையென்றும் அச்சிறுவர்களுக்குக் கற்பித்தால், இந்தக் கொடிய செய்கைகள் வெகுவாய்க் குறைந்துபோகுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இப்படிப்பட்ட ஜீவகாருணியத்தைத் தம் பிள்ளைகளுக்குப் போதிக்கும்படி வேண்டுகிறோம். மனிதர்களுக்கு உடம்பில் ஏதேனும் ஒரு காயம்பட்டால் எப்படி சுறுக்கென்று உறைக்கிறதோ, அப்படியே வாயில்லா ஜந்துக்களுக்கும் உறைத்து நோவுண்டாகும். மேலும், மனிதரைப்பார்க்கிலும் மிருகங்களுக்கு அப்படி உபத்திரவப்படுத்துவதினாலுண்டாகும் நோவு இன்னு மதிகமாம். ஏனென்றால், அந்த நோவைப் பொறுத்துக்கொள்ளும்படியான மனவுறுதி அவைகளுக் கில்லையன்றோ? ஆகையால் அவைகள் விஷயத்தில் அதிகமான அன்புபாராட்டி ஆதரிக்கவேண்டும்.

பத்திராதிபர்.

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்சை நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயங்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய "ஜந்து வர்த்தமான ஸாரம்" என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப்போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது மேலும் இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சராப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமாயதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்யவேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

4. இப்புதிய வருஷாரம்பத்தில் இப்பத்திரிகையைப் படிப்பவ ரெல்லோருக்கும் ஜீவகாருண்யத்துடன் மற்றெல்லாச் சற்குண சம்பத்துகளும் உண்டாக வேண்டுமென்றும், அவர்களுடைய சிறு மக்கட்கேயன்றிச் சகல ஜனங்களுக்கும் ஜீவராசிகளிடம் அன்பு பாராட்டுதலென்னும் சன்மார்க்கத்தை அவர்கள் நன்றாய்ப் போதிக்க வேண்டுமென்றும், அவர்களாலும் அவர்களுடைய பந்துஜன இஷ்ட மித்திரர்களாலும் இச்சங்கத்துக் காரியங்களுக் குபகாரமாய்ப் பொருளுதவி முதலியவை மிகுதியாய்க் கிடைக்குப்படி யுவர்கள் முயல்வாராகவென்றும் ஆதிமூலக் கடவுளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

162038

சம்புடம் XIV.] FEBRUARY, 1914-ஹூ பெப்ருவரிமீ. [இலக்கம் 1.

ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்து ஜந்து விநோதக் காட்சி.

1914.

வருஷந்தோறும் நடந்துவருகிற சென்னை ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்து ஜந்து விநோதக் காட்சி இவ்வருஷம் ஜனுவரி மாதம் 10-ம் தேதியன்று நடந்தது. அக்காட்சிக்கு மஹிமை பொருந்திய கவர்னரவர்களும அவருடைய தேவியாரும் பரிபாலகர்களா யிருந்தார்கள். அக்காட்சி அதிவிமரிசையாக நடந்ததுடன் அக்கிராசனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கி, அநேகர் வெகுமதிக ளளிப்பதற்காக வெள்ளி கிண்ணிகள் திரவியம் முதலிய சகாயம் புரிந்தார்கள்.

அக்காட்சிக்கு மகிமை பொருந்திய கவர்னரவர்களும் அவர் தேவியாகிய லேடி பெண்ட்லண்டு பெருமாட்டியும் விஜயஞ்செய்தார்கள். அவர்களைச் சங்கத்தின் தலைவராகிய ஸர் ஆர்னால்டு வொயிட் துரையவர்கள் எதிர்கொண்டழைத்து அக்காட்சியின் பல பாகங்களுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் அங்கங்கே காணப்பட்ட விநோதங்களைக் கண்டு அதிக திருப்தியடைந்தார்கள்.

அக்காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட ஜந்துக்கள் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்தப் பிரிவில் முன்னமே ஏற்படுத்தப்பட்ட ஜட்ஜிகளின் அபிப்பிராயப்பிரகாரம் மேலான பிராணிகளென்று நிச்சயிக்கப்பட்டவைகளைக் கொண்டுவந்தவர்களுக்கு அவரவர்க்குத் தக்கபடி வெகுமதிக ளளிக்கப்பட்டன. அநேகர் தாங்கள் கொண்டுவந்த ஜந்துக்களுக்கு வெகுமதியொன்றுங் கொடுக்கவில்லையென்று விசனமடைந்தார்கள்.

ஜட்கா மட்டக்குதிரைகளில் வெகுமதி பெற்றவைகள் அதிக நேர்த்தியாயிருந்தன. சாதாரணமாய் ஜட்காக் குதிரைகளுக்குத்தான் அதிக ஹிம்சை புரிவது சகஜமாயிருந்தபோதிலும், அக்குதிரைகள் மட்டும் வெகு ஜாக்கிரதையுடன் வளர்க்கப்பட்டவையாயிருந்தன. வண்ணாரக் கழுதைகளில் இரண்டு மூன்று கழுதைகள் தவிர மற்றவையெல்லாம் பரிதபிக்கத்தக்க நிலைமையில்தா னிருந்தன. எல்லாருடைய கவனத்தையும் கவரத்தக்கதாயிருந்தது நாய்களின் வகுப்பு; நாகரிகமுள்ளவர்களால் வளர்க்கப்பட்டதும் ஏழைகளால் வளர்க்கப்பட்டதும் மற்றும் இராணுவச் சேவகர்களால் வளர்க்கப்பட்டதுமான பலவகை நாய்கள் கொண்டுவரப்பட்டன. இராணுவச் சேவகர்களால் வளர்க்கப்பட்டவற்றில் நேர்த்தியானதற்கொரு வெகுமதியும் ஏழைகளால் வளர்க்கப்பட்டவற்றில் உயர்ந்த நாய்க்கென்று ஒரு வெகுமதியும் அங்கே கொண்டுவரப்பட்ட நாய்களிலெல்லாம் மேலானதற்கு ஒரு வெகுமதியும் அளிக்கப்பட்டன. போர்ச்சேவகர்களால் கொண்டுவரப்பட்ட நாய்களெல்லாமே நல்ல ஜாதியைச்சேர்ந்தவையாயும் நன்றாய் வளர்க்கப்பட்டவையாயுமிருந்தன.

பசுக்களில் எல்லாம் நல்ல ஸ்திதியிலிருந்தன. வெகுமதி பெற்றவைகள் சிரேஷ்டமானவையா யிருந்தன.

வண்டி யிழுக்கிற மாடுகளில் அநேகம் நன்றாயிருந்தன. சென்னைக் கார்பொரேஷன் எருதுகள் அநேகம் கொண்டுவரப்பட்டன, அவைகளிற் சிலவற்றிற்கு வெகுமதி

யும் கிடைத்தது. கூலி வண்டிக்காரர் சிலர் நல்ல ஜந்துகளைக் கொண்டுவந்திருந்தார்கள். அவை உருவத்தில் மட்டமாயிருந்தபோதிலும் எவ்வளவு கஷ்டமானாலும் பொறுமையுடன் உழைக்கத்தக்க வல்லமை பொருந்தினவாயிருந்தன. நாய்த்தவிர இதர ஜந்துக்களில் தன் எஜமானனைப் பின்தொடர்ந்து செல்கிறவைகளுக்காகக் கொடுக்கப்பட்ட வெகுமதிகள் எல்லாம் அநேக ஆடுகளுக்களிக்கப்பட்டன. அவைகள் தங்களுடைய எஜமானர்களிடத்தி லதிக விசுவாசமுள்ளவையாகக் காணப்பட்டன.

கோழித் தொழுவங்கள் பறவைகளின் கூடுக ளிவைகளில் மேலானவற்றிற்கு வெகுமதிகள் பல கொடுக்கப்பட்டன. பக்ஷியினங்களில் ஜாவாக் குருவிகள், அழகான புறாக்கள் முதலிய பல நேர்த்தியான பக்ஷிகளிருந்தன. நானாவித மிருகங்களென்று சேர்க்கப்பட்ட வகுப்பில் ஒரு நாயினா லிழுக்கப்பட்ட வண்டியை யொரு குரங்கு ஓட்டிக்கொண்டு சென்றது அதிக விநோதமாயிருந்தது.

எருதுகளுக்குக் கஷ்டமில்லாதபடி நுகம் பூட்டுவதற்கு நல்ல உபாயம் கண்டுபிடிக்கிறவர்களுக்கென்று வெகுமதி யொன்று நியமிக்கப்பட்டிருந்தது. எருதுகளுக்கு நுகத்தடியைச் சரியானபடி பூட்டாத காரணத்தினால் உண்டாகிற கஷ்டங்கள் அநேகமுண்டு. அவைகளில் முக்கியமானது எருதுகளின் கழுத்திலுண்டாகிற நுகப்புண். அந்தப் புண்ணினால் அவைகளுக்கு வருகிற மற்ற நோய்களைக்காட்டிலும் அதிக துன்பமுண்டாவதுடன் அதனால் அநேக எருதுகள் இழுப்புவேலைகளுக்குச் சிறிதும் பிரயோஜனமற்றுப் போய்விடுகின்றன. எருதின் கழுத்தில் எப்பொழுதும் நுகத்தடி தேய்ந்துகொண்டே யிருப்பதினால் எரிச்சலும் நமைச்சலுமுண்டாகிக் கட்டிகள் புறப்படுகின்றன. அது போதாமல் எருதுகள் செல்லுகிற பாதைகள் கரடுமுரடாயிருந்தால் நுகத்தடியின்னு மதிகமா யசைந்தசைந்து அப்புண்களின்மேல் தேயும். இதையெல்லாம் தவிர்க்கும்பொருட்டு சில உபாயங்களில் முக்கியமானவை.

1. எதிரில் வருகிற வண்டி யல்லது ஏதாவது பாரமான வஸ்துக்கள் வந்து தாக்கினால் அதைத் தடுப்பதற்காக ஒரு முட்டம் கட்டிவைத்தல்.

2. மேட்டிலிருந்து சாய்வான விடங்களில் செல்லும்போது ஜாக்கிரதையாய்ச் செல்லுதல்.

3. பாரமுழுவதும் கழுத்தின்மேலேயே விழாமல் முசுப்பின்மேல் கொஞ்சம் பாரம் விழும்படிக்கு ஒரு ஏற்பாடு செய்தல்.

4. எருதுகளின் கழுத்துக்கு மிருதுவான சுமடு கட்டுதல்.

5. வண்டி யசையும்போதெல்லாம் நுகத்தடி எருதின் கழுத்தில் அழுத்தமாய்த் தேயாமலிருக்கும்பொருட்டு நுகத்தடியை எப்பொழுதுமே சிறிது அசைந்துகொண்டிருக்கிற நிலைமையி லிருக்கும்படிக்கு ஒரு ஏற்பாடு செய்தல்.

இந்த வெகுமதி நியமிக்கப்பட்டதற்குக் காரணம், எல்லா ஜனங்களும் இவ்விஷயங்களில் தங்களுடைய புத்தியைச் செலுத்தித் தற்காலத்தில் எருதுகளை வண்டிகளில் பூட்டுகிற விதங்களைக்காட்டிலும் சுகமான விதங்களைக் கண்டுபிடிக்க முயலும்படி அவர்களைத் தூண்டவேண்டு மென்பதே.

இக்காட்சி அதிக திருப்திகரமாக நடக்கும்படி உதவிபுரிந்த கனவான்களுக்கும் தங்களுடைய வேலையைப் பட்சபாதமில்லாமலும் அதிக சூக்ஷ்மத்துடனும் செய்த ஜட்ஜிகளுக்கும் அநேக வந்தனம் சமர்ப்பிக்கின்றனம்.

கனம்பொருந்திய சாரல்டன் துரைசானி.

(தொடர்ச்சி.)

இப்படி ஆங்கிலேய ஸ்திரீகள் எல்லோரும் இந்து தேசத்து சந்தைகளில் இருக்கும் அற்ப ஜந்துக்களிடம் பிரீதியும், பச்சாத்தாபமும் கொண்டிருந்தால் அது பெரிய தர்மமாகும்.

சிறகுகளை ஒடித்து, கண்களைக் குத்தி பட்சிகளை விற்பனைக்குக் கொண்டுவருகின்றார்கள். கல்கத்தா சந்தையில் அநேகதடவைகளில் பட்சிகள் பிழைத்திருக்கும்போதே, இறகுகளைப் பிடுங்குகிறார்கள். இந்த துஷ்டகாரியத்தைப்பற்றி விசாரித்தால் இதற்குக் காரணம் வெளிதேசத்திலிருந்து வரும் கப்பல்

களிலிருக்கும் சேவகர்களே யென்று ஏற்படுகின்றது. இதர தேசத்து கப்பல்களில் கோழிகளை ஏற்றுமதி செய்யும்போது இறகுகளை ஒடித்துத்தான் ஏற்றுகிறார்கள். உடலிலிருந்து இரத்தம் பெருகும்; ஆகையால் வர்த்தகர்கள் இராத்திரியில் இறகுகளை உடைத்துக் கூடைகளில் மூடிவிடுகிறார்கள். உதயத்தில் பார்க்க சுமார் நூற்றுக்கு எண்பது கோழிகள் செத்துக்கிடக்கும். மற்ற இருபது கோழிகளின் கழுத்தைத் திருகிவிடுகிறார்கள். இதர தேசத்தாருக்கு இது எவ்வளவு சந்தோஷகரமான காரியமானபோதிலும் ஆங்கிலேய தயாளத்துவமான மனசுக்கு விரோதமானதே. ஆதியில் கொன்றுவிட்டு, அவை இறந்துபோனபிறகு ஏன் இறகுகளைப் பிடுங்கக்கூடாது. ஆங்கிலேய ஸ்திரீகள் எல்லோரும் ஒன்றாய்க் கூடி இப்படிப்பட்ட துயரமான காரியங்களை நிறுத்தும்படி பிரயத்தனம் செய்யவேண்டும்.

கிளிகளை வளர்க்கும் விதம்.

வீட்டில் வளர்க்கப்படுகிற பறவைகளிலெல்லாம் வளர்க்கிறவர்களுடன் மிகவும் இணக்கமாயிருக்கிற பக்ஷி கிளி யொன்றுதான். கிளிகள் சுயேச்சையாயிருக்கிற ஸ்திதியில் பயிர்களுக்கும் கனிவர்க்கங்களுக்கும் மற்ற பறவைகளைவிட அதிகமான சேதத்தையுண்டுபண்ணக் கூடியவைகளல்ல. அவைகளின் தொகையைக் கூடியமட்டில் குறைத்துவிட வேண்டுமென்கிறதைவிட, அவைகளைக் கூடுகளில் வைத்து வளர்ப்பது நலமென்று சில ஜனங்களின் தயவுபொருந்திய அபிப்பிராயமென்று தோன்றுகிறது. கூடுகளிலிருப்பதைவிட வெளியிலிருக்கும்பொழுது கிளிகள் அதிக சுகமாயிருக்கின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமேயானாலும், அவை இதர பக்ஷிகளைப்போலில்லாமல் வீடுகளிலும் அதிக வின்பம் அனுபவிப்பதினால் அவைகளை வளர்ப்பதற்கு யாரும் தடை கூறுகிறதில்லை. ஏகாந்த வாசத்தைச் சகிப்பதற்கு மற்ற பறவைகளைக்காட்டிலும் சுகமான சரீரமும் உற்சாகமுள்ள சுபாவமும் பொருந்தியிருக்கின்றனவென்றெண்ணி கிளிகளை உபேக்ஷையுடன் வளர்க்கக்கூடாது. சில கிளிக்கூடுகள் மிகச் சிறியவையாய் அதிலடைக்கப்படும் பறவை நன்றாய்ச் சுற்றி வருவதற்குப் போதுமான இடமில்லாமலும் அது உட்காருகிறதற்காக அமைக்கப்படுகிற கம்பும் ஊசலாடுகிறதற்காகக் கட்டப்படுகிற ஊஞ்சலும் மிகவும் நெருக்கமாயும் அமைக்கப்படுகின்றன. பக்ஷியின் உல்லாஸத்திற்காக அமைக்கப்படுகிற ஊஞ்சல், அது சுகமாயுட்கார்ந்து அசைத்துக்கொள்ள இயலாமலும் கம்பின்மேல் நேராய் நிற்பதற்குத் தடையாயுமிருக்கும்பட்சத்தில் பிரயோசனமற்றதாகும். சாதாரணமாய் விற்கப்படுகிற கிளிப்பஞ்சரங்களில் வட்டமாயிருக்கிறவைகளைவிடச் சதுரமானவை கொஞ்சம் விசாலமாயிருக்கும். பஞ்சரங்களை வாங்கும்பொழுது அவை யழகாய்ச் செய்யப்பட்டிருக்கின்றனவா வென்பதைவிட அவை யதிக விடமுள்ளவையா யிருக்கின்றனவாவென்று ஆலோசிப்பது நலம். நீண்ட வடிவமுள்ள கூடுகள் மற்றவைகளைக்காட்டிலும் மேலானவை. ஆனால் அவை விசேஷமாய்க் கிடைக்கிறதில்லை. கிளிப் பஞ்சரங்களில் வைக்கப்படுகிற மணலைக் கிளியானது வாரி யிறைக்காமலிருக்கும்படி அம்மணல் தட்டுக்குமேல் போடப்படும் கம்பிகள் நெருங்கியிராமல் ஒருவேளை கிளியின் வாயினின்று தவறி விழுகிற வஸ்துக்களை அது தன் தலையை நுழைத்து எடுத்துக்கொள்வதற்குப் போதுமான அகலமுள்ள துவாரங்களிருக்கும்படி யமைக்கப்படவேண்டும். சில பக்ஷிகள் அவ்வாறு மணலையிறைக்கிற குறும்பு செய்கிறதில்லை. அப்படிப்பட்டவைகளின் கூடுகளில் கிராதி யமைக்கவேண்டிய அவசியமேயில்லை. கூடுகளின் அடிப்புறத்தில் மணலையே போடவேண்டுமென்கிற அவசியமில்லை. மணலுக்குப் பதிலாய் வாள்தூளையும் போடலாம். அதோடு சில சிறு கற்களையும் போட்டு வைக்கவேண்டும். ஏனென்றால் சிறு கற்களைக் கிளிகள் ஜீரணசக்திக்காக எப்போதாவது தின்பதுண்டு. உணவையும் நீரையும் வைக்கிற பாத்திரங்களைப் பஞ்சரத்தின் வெளிப்புறத்திலிருந்தே எடுக்கவும் வைக்கவும் முடியும்படி யிருக்கவேண்டும். ஏனென்றால் கிளிகளில் கபடமும் கொடுமையும் வாய்ந்த பறவைகளிருப்பது சகஜமாகையினால், அவைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறவர்கள் அவைகளினால் கடிக்கப்படுகிற அபாயத்திற்குள்ளாவது சிறிதும் விரும்பத்தக்கதல்ல.

பஞ்சரத்தை வைக்கவேண்டிய இடத்தைப்பற்றி இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அதிக காற்றுள்ள விடத்திலும் வைக்கக்கூடாது. பக்ஷியின் கண்ணுக்கு ஒன்றும் காணப்படாததும் காதுக்கு ஒன்றும் கேட்காததுமான இடத்திலும் வைக்கக் கூடாது. வெகுநேரம்வரையில் ஏகாந்தமாக யாரும் நடமாடாத அறையிலாவது வீட்டின் புறக்கடையிலாவது கிளிகளைச் சிறைப்படுத்தி வைப்பதைவிட அவைகளை வளர்க்காமலே இருப்பது நலம். இனப்பிரியமுள்ள ஒரு ஜீவனை அவ்வாறு நடத்துவது அதிக குரூரமான காரியம். கிளிகள் சாதாரணமாய்க் கூட்டம் கூட்டமாய்த்தானிருக்கும். குறைந்தபட்சம் ஒரு ஜோடியாகவாவது யிருக்கும். ஆதலினால் அவைகளைத் தனியாய் விட்டுவைப்பதனால் அவைகளுக்கு வெறுப்புண்டாவது ஆச்சரியமானதல்ல. மனிதர்களுடன் பழகின பிறகு சில கிளிகள் இதர கிளிகளின் நேசத்தைக் கூட விரும்புகிறதில்லை. நன்றாய் வளர்க்கப்பட்ட அநேக கிளிகளுக்கு அவைகளினத்தைக்காட்டிலும் மனிதரைப்பற்றியநேக விஷயங்கள் தெரியும். அதிக செல்வமாய் வளர்க்கவேண்டுமானால் கிளியைக் குஞ்சுப்பருவத்திலேயே வளர்க்கத் தொடங்கவேண்டும். இங்கிலாந்தில் விசேஷமாய்க் காணப்படுகிற ஆப்பிரிக்கா அமெரிக்கா தேசத்துக் கிளிகள் குஞ்சுகளாயிருக்கையிலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவ்வளவு சிறிய பக்ஷிகளுக்கு வெந்த சோளத்தைப்போன்ற மிருதுவான ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். ஆகாரம் புளிக்காமலிருக்கும்படிக்கும் சுத்தமான பாத்திரங்களில் வைக்கப்படும்படிக்கும் கவலை யெடுத்துக் கொள்ளவேண்டியது. அவை பெரியவையான பிறகு மிருதுவான வாகாரத்தை விரும்பா. அதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாய் சணல்விதை, ஓட்ஸ் என்னும் தானிய விதை முதலிய விதைகளைக் கொடுத்துப் பழக்கி வரவேண்டும். விதைகளைக் கொடுப்பதில் அதிக நெய்ப்பற்றுள்ளவைகளைப்பசையில்லாத சிலவற்றோடு சமபாகமாகச் சேர்த்துக் கொடுப்பது, மனிதருக்கு ரொட்டியும் வெண்ணெயும் கலந்துண்பது எவ்வளவு உசிதமோ அவ்வளவு உசிதமாயிருக்கும். அவை விதைகளை யதிகமாய்ப் புசிக்க வாரம்பித்த பிறகு பழவர்க்கங்கள், கிழங்குகள் முதலிய மரக்கறி பதார்த்தங்களை பச்சையாகவே யுண்ண விரும்பும். கிளிகள் அவைகளின் மூக்கினால் எதையாவது கொத்திக்கொண்டே யிருக்கு மியல்புடையவை. அவைகளின் கூடுகளில் கணவாய் மீனினுடைய எலும்புத்துண்டையாகிலும் விஷத்தன்மையில்லாத ஏதாவதொரு மரத்துண்டையாகிலும் கட்டி வைப்பது நலம். இவ்வித ஏற்பாடொன்று மில்லாவிட்டால் அவையுட்காருவதற்காகப் போட்டிருக்கும் மரக்கொம்பை அரித்துவிடும். அதற்காகச் சிலர் இரும்புக்கம்பியை யமைக்கிறார்கள். அது கூடவே கூடாது. குளிர்காலத்தில் பறவைக்கு மரத்துண்டு கணப்பு உண்டாக்கி வலியை யுண்டுபண்ணும். ஆகையால் எப்பொழுதும் மரக்கொம்பையே யமைக்கவேண்டும். அடிக்கடி அது கடிக்கப்பட்டு கெட்டுப்போனாலும் மறுபடியும் வேறு மரக்கொம்புகளைப் போடுவதற்கு அதிக செலவு ஆகாது. ஒரு அங்குல கனமுள்ள உருண்ட கட்டையொன்றைப் போட்டால் போதுமானது.

மானிட ஆகாரப் பதார்த்தங்கள் பலவற்றைக் கிளிகளுக்கு யோசனையில்லாமல் புசிப்பிக்கிறதினால் அவைகளுக்குச் சுகக்கேடுண்டாகும். சில நல்ல கிளிகளும் கூட சிறகைப்புண்ணும் அப்பியாசத்தை யுடையனவாயிருப்பதற்கு முக்கிய காரணம் அவைகளின் மனதிற்கும் மூக்குக்கும் போதுமான வேலையில்லாமலிருப்பதே. பெரிய பஞ்சரமும் கொந்துவதற்காக மரத்துண்டுகளும் பார்த்துக்கொண்டிருப்பதற்கு ஜனங்களின் நடமாட்டமும் இருக்கும்பட்சத்தில் இத்தகைய துரப்பியாசங்களுக்கு இடமிராது. சாதாரணமாய் அநேகர் தாம் உண்டு மிகுந்த இறைச்சிக் கண்டங்கள் ரொட்டித்துண்டுகள் மாப்பணியாரம் முதலியவைகளைக் கொடுக்கிறார்கள். அவைகளை யப்பறவைகள் சுலபமாய் விழுங்கி விடுகின்றன. ஆனால் பிறகு தேகத்திற்கு அது ஒத்துக்கொள்ளுகிறதில்லை. இறைச்சியைக் கொடுக்கவேண்டுமென்று விருப்ப மிருந்தால் மூக்கினால் குத்தி மிகச் சிறியவளவை யெடுத்துக்கொள்ளும்படி ஒரு சிறு எலும்பைத் தரலாம். எல்லாவற்றைக்காட்டிலும் கிளிக்கு விதைகளும் கனிகளும்தான் சுபாவிகமான ஆகாரம். கிளிகளுக்குத் தண்ணீர் குடிக்கவேண்

டிய தவசியமில்லையென்றும் குடிப்பதனால் அவைகளுக்குத் தீங்கு விளைகிறதென்றும் பலர் நினைக்கிறார்கள். ஒருவேளை யதிககாலம் நீரின்றி யிருப்பதினால் தீங்கு விளையலாம். கிளிகள் நீரில்லாமல் வசிக்கக்கூடுமென்பது வாஸ்தவம்தான். ஆனால் வெகுநாள் நீரையே யுட்கொள்ளாமலிருந்தால் தீர்க்கமான தாகமுண்டாகி நீரைக் கண்டபொழுது யளவுக்கு மிஞ்சி அருந்தி நோயை யுண்டாக்கிக் கொள்ளும். ஆதலினால் புதிதாயொரு கிளியை வாங்கிக்கொண்டு வருகிறவர்களுக்கு அது எவ்வளவு காலத்திற்குமுன் தண்ணீர் குடித்ததென்று தெரியாதாகையால் அதனிடத்தில் மிகுதியாக நீரை வைக்காமல் சிறு சிறு அளவு வைத்துக்கொண்டு வரவேண்டும். அதற்கு யாதொரு வியாதியும் வராமலிருந்து இனி யதிகமாய்க் குடிக்கலாமென்று தோன்றின பிறகு அதிகமாய்க் குடிக்கக் கொடுக்கலாம். பழவர்க்கங்களையும் பழங்களைப்போல அதிக சாறுள்ள மரக்கறி பண்டங்களையும் கொடுத்து வந்தால் கிளிகளுக்கு நீர் அதிகமாய்த் தேவையிராது. அதனாலேயே அதனருகில் நீரை வைக்காமலேயிருக்கவுங்கூடாது. சில கிளிகளுக்கு தேத்தண்ணீர் காப்பிமுதலிய பானங்களில் விருப்ப மிருப்பதுண்டு. இந்த பானங்களைக் கொஞ்சமாகக் கொடுப்பதினால் அவைகளுக்கு ஒரு கெடுதியும் வராது. சில கிளிகள் அவைகளுக்குக் கொடுக்கப்படுகிற ரொட்டித் துண்டுகளை ஜலத்தில் ஊறப்போட்டுத் தின்பதுண்டு. இவ்வழக்கத்தை ஆரம்பத்திலேயே தடுக்காவிட்டால் அப்பறவைகள் மிருதுவான வாகாரத்திலேயே அதிகப் பிரீதியுள்ளவை யாகிவிடும். அவைகளுக்கு ஜீரணசக்திக்காக உபயோகப்படுகிற சிறு கற்களும் அதிகமா யுண்ணப்பட்டால் கெடுதியையுண்டுபண்ணு மாகையால் ஏதாவதொரு கிளி மண்ணை யதிகமாகத் தின்னுவதாகத் தெரிந்தவுடனே மிக்க ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

உஷ்ணப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப்பட்டவை யானபோதிலும் அவை குளிர்ச்சியான நாடுகளில் சிறிதுகாலம் வசித்தால் பிறகு உஷ்ணத்தைச் சகிக்கா. ஆகையால் அப்படிப்பட்ட தேசங்களில் உஷ்ணமாயிருக்கும் காலத்தில் காற்றோட்டமுள்ள விடங்களில் கிளிப்பஞ்சரங்களை வைக்கவேண்டும். குளிர்ச்சியான் காலங்களில் உஷ்ணமுள்ள அறைகளில் வைக்கவேண்டியது.

சாதாரணமாய் விசேஷமாக அகப்படுகிற பச்சைக்கிளிகளிலும் வெண்ணிறமுள்ள கிளிகளிலும் சேவலுக்கும் பெட்டைக்கும் வேற்றுமை பார்த்தவுடன் தெரிகிறதில்லை. இரண்டும் ஒரே மாதிரியாகவே பேசுகின்றன. ஆண் பக்ஷிகள் ஸ்திரீகளிடத்திலும் பெட்டைகள் ஆண் மக்களிடத்திலும் அதிக நேசங் கொண்டாடுகின்றனவென்று ஒரு அபிப்பிராயம் பக்ஷி விற்கிறவர்களுக் கிருக்கிறது. கிளிகளை வாங்குகிறவர்கள் குஞ்சுகளாகப் பார்த்து வாங்குவது நலம். அடர்ந்த சிறகுகளும் உற்சாகமுள்ள தோற்றமும் நோயற்ற சரீரமு முள்ளவைகளாகப் பார்த்து வாங்கவேண்டும். அமெரிக்கா தேசத்து பச்சைக்கிளிகளைக்காட்டிலும் ஆப்பிரிக்காவின் வெள்ளைக்கிளிகள் பேசுவதற்கு சீக்கிரம் கற்கின்றன. தெளிவாயும் பேசுகின்றன. வாங்கும்பொழுதே நல்ல தேகஸ்திதியு மிருந்து நன்றாய்ப் போஷிக்கப்பட்டும் வந்தால் கிளிகள் முப்பது வருஷங்களுக்குக் குறையாமல் ஜீவித்திருக்கும்.

கிளிகளை வளர்ப்பதில் இவ்வளவு கஷ்டங்க ளிருப்பதாலும், சிறிது அஜாக்கிரதையினால் அவைகளுக்கு விசேஷ நோய்களும், சிலகாலம் மரணமு முண்டாகிறபடியாலும், சுயேச்சையாய் சுகமாய் வாழும் பறவைகளைப் பிடித்து சிறையிலடைத்து தீங்குண்டாக்குவது கூடாதென்றே பல புண்ணிய புருஷர்களுடைய அபிப்பிராயம்.

ஆனி பெசண்டு அம்மையின் பிரசங்கம்.

"ஆரிய சிறுவர் சபை" என்கிற சபையின் பதினைந்தாவது வருஷோற்சவம் கடந்த டிசெம்பர் மாதம் 6-ம் தேதியன்று ஜியார்ஜ் டவுன் தாதாமுத்தியப்பன் தெருவிலிருக்கும் நாடகசாலையில் கொண்டாடப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் ஆனி பெசண்ட் அம்மையவர்கள் "ஸ்தூல சரீரத்தின் பரிசுத்தம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள். கனம் பொருந்திய ஜட்ஜி திவான் பஹதூர் டி. சதாசிவ ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்திருந்தார்கள். அவ்வுபந்நியாசத்தில் அவ்வம்மை சொன்னதாவது:—

தேகத்தின் பரிசுத்தத்தைப்பற்றி பண்டைய காலங்களிலும்கூட ஜனங்கள் வெகு சிரத்தையுள்ளவர்களா யிருந்தார்கள். இத்தேசத்தில் வெகுகாலமாய் மதுபானமும், மாமிச பட்சணமும் கண்டிக்கப்பட்டு வந்ததினால் பூர்வீக இந்தியர்கள் நல்ல தேகஸ்திதியுள்ளவர்களாயிருந்தார்கள். புலாலையுண்பது மதுபானத்தி லிச்சையை யுண்டாக்கும். மதுபானம் ஐரோப்பியர்களைக்காட்டிலும் இந்தியர்களுக்கு அதிக விரோதமானது. அநேக தலைமுறைகளாக அதிக லாகிரித் தன்மையுள்ள பானங்களுக்குப் பழக்கப்பட்டு வந்தவர்களாகையால் ஐரோப்பியர் சொற்பமாய்க் குடித்தால் அவர்களுக்கு மிகக் கெடுதியில்லை. ஆனால் மது மாமிச ஸ்பரிசம் கொஞ்சமேனுமில்லாத பரம்பரையில் தோன்றிய இந்தியர்களுக்கு மிகச் சிறியவளவு குடிகூட பெருங்கேட்டை விளைவிக்கு மென்பதிற் சந்தேகமேயில்லை. மதுபானத்தை நிறுத்தவேண்டுமானால் முதலில் மாமிச பட்சணத்தை நிறுத்தவேண்டும். நாளாவட்டத்தில் குடியையும் நிறுத்திவிடலாம். அவ்வாறின்றி திடீரென்று பானத்தை நிறுத்தினால் தேகத்திற்குக் கெடுதியுண்டாகும்.

இந்தியர் தம்முடைய நிவாசங்களுக்கு மத்தியில் சாராயக்கடைகளை வைக்காமலிருக்கும்படியான பிரயத்தனஞ் செய்யவேண்டும். வாசஸ்தலங்களின் நடுவில் கள்ளுக்கடைகளிருப்பது விஷமிருப்பதற்குச் சமானம். சாராயக்கடைகளுக்கருகில் வசிக்கிறவர்கள் அவைகளுக்குள் நுழையாமலிருந்தபோதிலுங்கூட அந்த விஷக்காற்றினால் அவர்களுக்கு நோய் உண்டாகும். இந்தியாவிலிருந்து கள்ளுக்கடைகளைத் தொலைத்துவிட்டால் இந்தியர்களின் எளிமை நிவர்த்தியாகும். சாராயக்கடைகளினால் சாராயங்குடிக்கிற புருஷர்களேயல்லாமல் ஸ்திரீகளும் குழந்தைகளும்கூட அவ்விஷத்தினால் பீடிக்கப்படுகிறார்கள். மதுவின் விஷத்தினால் கேடடையாதவர்களின் ஜடசரீரம் சுத்தமாயிருப்பதுடன் அவர்களுக்கு நல்ல மனமும் நல்ல ஆசாரங்களும் அமையும். சென்னையின் வீதிகள் ஏற்கனவே ஆரோக்கியக் குறைவுள்ளவைகளா யிருக்கின்றன. அதோடு அவைகளில் கள்ளுக்கடைகளு மிருந்தால் அதனால் ஜனங்களுக்கு அதிக துன்பம் உண்டாகு மென்பதற் கென்ன சந்தேகம்.

மாமிச பட்சணம் தேகாரோக்கியத்திற்காக மாத்திரமேயன்றி உணர்வுள்ள பிராணிகளின் ஹிம்சையை நிவர்த்திக்கும்பொருட்டும் விடவேண்டியதாயிருக்கிறது. புலாலைப் புசிப்பதனால் சரீரம் தடித்து பலவித வியாதிகளுக்கு இடங்கொடுக்கத் தக்கதாகும். கால்நடைகளைக் கொல்வதினால் நாட்டின் முக்கியமான தொழிலாயிருக்கிற வேளாண்மைக் குபயோகமான பிராணிகளின் அபிவிருத்தி குறைந்துவிடும்.

சென்னையில் நாய்க்காட்சி.

"இந்திய கென்னெல் அஸோஸியேஷன்" என்னும் சபையின் விதிகளின்படி நாய்களின் காட்சியொன்று சென்னை ஜிம்கானா மைதானத்தில் சென்ற டிசெம்பர்மாதம் 18-ம் தேதியன்று நடந்தது. இத்தகைய காட்சியொன்றை நடத்தவேண்டுமென்கிற எண்ணம் நாய்களை வளர்ப்பதி லதிகப் பிரியமுள்ள பிட்டாபுரம் ராஜா அவர்களுக்கு முதலில் தோன்றிற்று. முதலில் சிலர் சென்னையில் நாய்களுக்குப் பிரத்தியேகமான காட்சி ஏற்படுத்துவது அவ்வளவு பிரயோஜனமுள்ளதா யிருக்குமென்று நம்பவில்லை. அவர்கள் ஜீ. ஹி. நி. சங்கத்தின் மிருகங்களின் காட்சிகளில் கொண்டுவரப்படுகிற நாய்களைமட்டும் பார்த்தவர்களாகையால் அவர்களுக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயம் தோன்றிற்று. ஆனால் காட்சியைப் போய்ப் பார்த்தவர்கள் அதிக வியப்புற்றார்கள். இங்கிலாந்து, வேல்ஸ், ஐர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், சீனா முதலிய பல தேசத்து நாய்களில் 75 வெவ்வேறு வகைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. அவைகளில்நேர்த்தியானவைகளுக்கு வெகுமதிக ளளிக்கும்பொருட்டு பரீக்ஷகர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மேஜர் இ. ஸி. லாக் துரையவர்கள், மாரிஸ் துரைசானி, மெகாலே ஆட்ஸ்லே துரையும் துரைசானியும். காட்சிக்காகவென்று இரண்டு கொட்டகைகள் அமைக்கப்பட்டன. அவைகளி லொன்றில் ஸ்பென்ஸர் கம்பெனியார் நாய்களுக் குபயோகமான ரொட்டி, அடை முதலிய தின்பண்டங்களையும் இன்னு மிதர சாமான்களையும் விற்பனைக்காக வைத்திருந்தார்கள்.

பலவகுப்பு நாய்களில் ஒவ்வொரு வகையிலநேகம் கொண்டுவரப்பட்டதாலும் அவைகளில் பல ஒன்றுக்கொன்று வித்தியாசந்தோன்றாதபடி சம்மான சிறப்பமைந்தவையாயிருந்ததாலும் வெகுமதிகளுக்காக வென்று சிறந்தவைகளைத் தேர்ந்தெடுக்கிற காரியம் வெகு சிரமமாக விருந்தது. இந்த வேலையைக் காலையில் 10-மணிக்குத் தொடங்கி பகல் 1-மணிக்கு முடித்தார்கள்.

மாலை 5-மணிக்கு கனம்பொருந்திய கவர்னரவர்கள் லேடி பென்ட்லண்டு பெருமாட்டி சகிதமாய்க் காட்சிக்கு விஜயஞ் செய்தனர். அவர்களை பிட்டாபுரம் ராஜாவும் மேஜர் இ. ஸி. லாக் துரையும், ஆட்ஸ்லே துரையும் வரவேற்றி காட்சியைச் சுற்றி யழைத்துக் கொண்டு சென்றார்கள். ராமநாதபுரம் ராஜா அவர்கள், கனம்: பி. எஸ். சிவஸ்வாமி ஐயாவர்கள், ஜட்ஜி வாலிஸ் துரையவர்கள் முதலிய இதர கனவான்கள் பலரும் அக்காட்சிக்கு வந்திருந்தார்கள்.

அங்கே கொண்டுவரப்பட்ட நாய்ச்சாதிகளெல்லாம் மிகவும் சிரேஷ்டமானவை யென்பதிற் சந்தேகமேயில்லை. டெரியர் என்னும் ஜாதியின் தொகைதான் மற்றவைகளைவிட அதிகமாயிருந்தது. அவைகளில் பெரும்பான்மை பிட்டாபுரம் ராஜா அவர்களுடையது. அவை வேறுதேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டவையாயும்வட இந்தியாவில் அநேக காட்சிகளில் வெகுமதிகள் பெற்றவைகளாயு மிருந்தன. நேர்த்தியான வேட்டைநாய்கள் பல கொண்டுவரப்பட்டிருந்தன. நாட்டுச்சாதிகளில் பெங்களூரிலிருக்கும் ஏ. தங்கவேலு முதலியாருடைய நாய்கள் மிக வழகியவையா யிருந்தன. இவ்வாறே இன்னும் அநேகர் பல நேர்த்தியான பிராணிகளை அனுப்பியிருந்தார்கள்.

லேடி பென்டலண்டு அம்மை வெகுமதிகளை அளித்தார்கள். வெகுமதிகளிற் சிறந்தவை நமது கவர்னரவர்கள் கொடுத்த ஐந்து கோப்பைகள். இன்னும் "சிலோன் கென்னெல் கிளப்", "கல்கத்தா கென்னெல் கிளப்" முதலிய சபையார்களும் நேர்த்தியான வெகுமதிகளை யனுப்பி யிருந்தார்கள்.

சென்னையில் நூதனமா யேற்படுத்தின இந்தக் காட்சி இவ்வளவு விமரிசையாய் முடிந்ததற்காகச் சென்னை பொது ஜனங்கள் இதைப் பிரேரேபித்த பிட்டாபுரம் ராஜா அவர்களுக்கு அதிக கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள். இக்காட்சியி லளிக்கப்பட்ட வெகுமதிகள் மிகவும் விலையுயர்ந்தவைகளா யிருந்தமையாலும் வெகு ஜனங்களைக் கவரத்தக்கதா யிருந்ததாலும் இனி நடக்கப்போகிற காட்சிகளுக்கு இன்னும் மேலான ஜாதிகள் கொண்டுவரப்படுமென்று நம்புகிறோம். மேலும் இதர ராஜதானிகளி லிருப்பதுபோல சென்னையிலும் நாய்களின் சங்கமொன்று ஏற்படுத்த பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்தில் வழக்கமான கோரூரம்.

ஹிந்துக்களுக்குப் பசுவினிடத்தில் உள்ள பக்தி பிரிட்டிஷ் குடியானவர்களுக்கு மிருக்குமேயானால் கொஞ்சநாளைக்கு முன் இங்கிலாந்தில் வாடர்ஸுக்கும் பிரெத்வெயிடுக்கும் நடந்த வழக்கைப்போன்ற வழக்குகளால் கோர்ட்டாருக்குக் கஷ்டமுண்டாகாது. மேற்சொன்ன வழக்கில் அப்பீல் பிரதிவாதி ஒரு பசுவை வெகுநேரம் பால்கறக்காமல் மடியைக் கனத்துவைத்ததற்காக 1911-ம் வருஷத்திய ஜீவ ஹிம்சை நிவாரண சட்டப்படி குற்றஞ் சாட்டப்பட்டான். அப்பசுவை விற்பனைக்காகச் சந்தைக்குக் கொண்டுபோகையில் அது அதிக பால் கறக்குமென்று தோற்றுவதற்காக பத்தொன்பது மணிநேரம் கறக்காமல் விட்டுவைத்தான். நிறைந்த பாலுள்ள பசுவைக் கறக்காம விருப்பதினால், அதற்குத் தற்காலம் நோய் உண்டாவதுடன் பின்னுக்கும் தீங்கென்றும் மேற்சொல்லப்பட்ட பசு அச்சமயத்தில் நோயினா லவஸ்தைப்படுவதாகக் காணப்பட்டதென்றும் ஒரு ஜந்து வைத்திய சாஸ்திரி வாக்குமூலங் கொடுத்தார். குடியானவர்கள் பசுக்களை அந்த ஸ்திதியில் விற்பனைக்குக் கொண்டுபோவது வழக்கந்தானென்று பிரதிவாதி வாதித்தான். இந்த நியாயத்தை மாஜிஸ்திரேட்டுகள் ஒப்புக்கொண்டபோதிலும் மேல்விசாரணையில் டிவிஷனல் கோர்ட்டார் விலக்கி விட்டார்கள். ஹாயிக்கும் பெர்மருக்கும் நடந்த வழக்கின் தீர்ப்பில் சில பாகங்கள் ஒரு பசுவின் சொந்தக்காரன் நியாயமாய் அதன் விலையை யதிகப்படுத்தும்பொருட்டு செய்யும்படியான அற்ப

ஹிம்சைகள் குற்றமாகாதென்று மபிப்பிராயங் கொண்டதாகக் காணப்படுகின்றனவென்று ஜஸ்டிஸ் டார்லிங்கு ஒப்புக்கொண்டார். ஆனால் அதற்குப் பின்னடந்த ஒரு வழக்கில் இத்தீர்ப்பைத் தழுவாமல் ஜஸ்டிஸ் கோல்ரிட்ஜும் ஜஸ்டிஸ் ஹாகின்ஸும் வழக்கமாய்ச் செய்யப்படுகிற ஜீவ ஹிம்சை குற்றமாகாதென்கிற வபிப்பிராயத்தை நிராகரித்து விட்டார்களென்று கூறினர்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. பக்ஷிஜாதிகள். — டாக்டர் ஹெண்டர்சன் துரையவர்களின் பிரசங்கங்களில் இரண்டாவது சென்ற டிசெம்பர் மாதத்தில் சென்னை மியூஜியமென்னும் விநோதக் காட்சிச் சாலையைச் சார்ந்த நாடகசாலையில் நடந்தது. அதைக் கேட்பதற்கு வந்த அநேக மாணாக்கரில் பெண்மணிகளு மிருந்தார்கள். சென்னையிலுள்ள பறவைகளைப்பற்றிப் பேசுவதாகக் கூறியவர் இவ்வுலகத்தில் பன்னீராயிரம் பறவைச்சாதிக ளிருக்கின்றனவென்றும் அவற்றில் ஆறிலொருபங்கு இந்தியா தேசத்தில் உண்டென்றும், ஆயினும் விநோதக்காட்சிச் சாலைகளில் அநேகமாய்ச் சேகரிக்கப்படுகிற ஜாதிகள் அவ்வளவாகத் திருப்திகரமாயில்லை என்றும், அப்படியிருந்தபோதிலும் பல சாலைகளில் வைக்கப்பட்டிருக்கிற முக்கியமாய் சென்னையில் வைக்கப்பட்டிருக்கிற பட்சிவகைகளும் உபயோகமுள்ளவையாகவே யிருக்கின்றனவென்றும், மதராஸ் விநோதச்சாலையில் கூடியமட்டும் பக்ஷிகளை அவைகளி னியற்கை நிலைமையில் காட்டுவதற்காகப் பிரயத்தனஞ் செய்துகொண்டிருப்பதாகவும், ஆனால் அவர் கோருகிற காட்சிப்பொருள்களை வைப்பதற்கு இடம் அதிகமாய் வேண்டியதா யிருக்குமென்றும் சொன்னார். பிறகு பஞ்சடைத்த பிராமணக் காக்கை முதல் குயில் ஈறாகவுள்ள பல தினுசுப் பறவைகளைக் காண்பித்து, அவைகளின் அப்பியாசங்களைப்பற்றிச் சுருக்கமாயும் விநோதமாயு மெடுத்துரைத்தார்.

2. காக்கையின் சிறகுகள். — வெள்ளைக் காக்கைகள் சிறகு பிடுங்கப்பட்ட பின்பும் உயிரோடிருப்பதற்குத் தக்க உபாயத்தை இனி எட்டு வருஷங்களுக்குள் கண்டுபிடிப்பவர்களுக்கு நானூறு பவுன் வெகுமானங் கொடுப்பதாகப் பிரான்சு தேசத்து இறகு வியாபாரிகள் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். இப்பறவைகளின் மெல்லிய சிறகு எல்லாராலும் விரும்பப்படுவதினால் அன்வ நிர்மூலமாய்ப் போய்விடுமென்கிற பயம் நேர்ந்திருக்கிறது.

3. இறைச்சி ஆகாரம்.—டார்வின், கூவியர், மூர் முதலான புகழடைந்த சாஸ்திரிகள் மனிதன் சுபாவத்தால் இறைச்சி தின்ன உத்தேசிக்கப்பட்டவனல்லவென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். எடுத்திருக்கும் கணக்குலக்கங்களினால் பூலோகத்து ஜனங்களில் எட்டிலோர் பாகந்தான் கிரமமாய் இறைச்சி புசிப்பவர்களென்று தெரியவருகிறது. உலகத்தில் மிகுந்த அசங்கியமான வியாதிகளெல்லாம் இறைச்சி யுண்பதினா லுண்டாகின்றனவென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இச்சங்கதியையெல்லோருங் கவனிக்கவேண்டியதாயினும், யோசனையும் பச்சாத்தாபமுமுள்ள சிலர் தான் பிராணிகளைத் துன்பப்படுத்திக் கொல்லுஞ் சங்கடங்களை யுத்தேசித்துப் புலாலுண்பதைத் தவிர்க்கிறார்கள்.

4. நாயின் சுபாவம். — நாய் மிகச் சுறுசுறுப்பான ஜந்து. அதற்கு விசேஷ பயிற்சியும் முயற்சியும் அவசியம். அப்படிக்கில்லாவிட்டால் மிகவும் கஷ்டப்படும். அதற்குக் கிரமமாய் ஆகாரம் கொடுத்து வேண்டிய போது குடிக்கத் தண்ணீரும் வைத்திருந்தால் அது அண்டை அயலாருக்குத் தொந்தரவு கொடாமல் வீட்டைக் காத்துக்கொண்டிருக்கும். சில நாய்கள் மனிதரைப்போல் வேட்டையாட சில வேளைகளில் இஷ்டப்பட்டாலும் பிராணிகளைக் கொல்லாமலிருக்கும்படி அவைகளைப் பழக்கக்கூடும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras.—1914,

THE HORSE TO HIS MASTER

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 MAY 1914
MADRAS.

I am a horse, you are a man;
I have been your slave since I began,
And though I am strong enough to shake
My shackles off and make a break
For freedom that would lift the lid,
You've noticed that I never did.
By day and night I have worked for you
And done the best that I could do;
And though I may not always like
Your methods, yet I never strike;
In heat and cold, in wet and dry,
I'm always ready—glad to try
To do the very most I can
To satisfy my master, man.
Therefore, my master if you please
Considering such facts as these,
Say, don't you think it ought to be
Your pleasure to look out for me,
If for no other reason than
My greater usefulness to man?
Of course, you might be worse I know
You sometimes treat your own kind so,
But I am a horse and truer than
The man-slave to his master, man.
And further more, my nature is
Much more dependent than is his;
And as I trust you sir, you should
Do all you can to make it good.
Nor do I ask a lot, I guess,
To be a fairly fair success—
Good food, good shelter and good care,
I think is just about my share.
No other pay I ask—no touch
I make, but this! Is that too much?

W. J. LAMPTON,

In the New York Times.

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்சை நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தியவர்களும் சக்ரவர்த்தினியாரும் பரிபாலகர்களாக விருப்பதன்றி, அவர்களின் ஜேஷ்டபுதல்வரான மஹிமையுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பிரபுஅவர்கள் அக்ராசனாதிபதியாயிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயம்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப்போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சரப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமாயதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறையின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்யவேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
27 MAY 1914
MADRAS

சம்புடம் XIV.] **MAY, 1914**-ஞு மேமீ. [இலக்கம் 2.

சென்னை ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தின் வருஷாந்த சபை. 1914.

சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தின் முப்பத்தி மூன்றாவது வருஷாந்த மஹாசபை கடந்த மார்ச்சுமீ 31உ யன்று மாலை விக்டோரியா ஹாலில் கூடிற்று. அச்சபைக்கு அநேக கனதனவான்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். சங்கத்தின் அதிபராகிய கனம் பொருந்திய ஸர் சார்லஸ் ஆர்னால்டு ஒயிட் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்கு சுகக்குறைவாயிருந்ததினால், அவரும் அவருடைய தேவியாரும் அச்சபைக்கு விஜயஞ்செய்யக் கூடவில்லை யென்றும், அச்சபையின் காரியங்கள் அனுகூலமாய் முடியும்படி அவர்கள் கோருகிறார்களென்றும் மிலிடெரி செக்ரிடெரியவர்கள் சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதிய நிருபத்தை அக்கிராசனாதிபதி படித்து, அச்செய்தியை யனுப்பியதற்காக இச்சபையார் கவர்னரவர்களுக்கு வந்தனங்க ளளிப்பதோடு, அவருடைய தேகம் சீக்கிரத்தில் முற்றிலும் சௌக்கியமடையும்படி விரும்புவதைத் தெரிவிக்கவேண்டுமென்று பிரேரேபித்ததின்பேரில், அவ்வாறே செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது.

பிறகு சங்கத்தின் ரிபோர்ட்டை அங்கீகரிக்கும்படி அச்சபையாரைக் கேட்டுக்கொண்ட கனம்பொருந்திய மிஸ்டர் பி. எஸ். சிவசுவாமி ஐயர் அவர்கள் பின்வருமாறு சில விஷயங்களைப்பற்றிப் பேசினார். சென்ற வருஷத்தில் சங்கத்தின் காரியங்கள் வெகு நன்றாய் நடைபெற்றுவந்ததோடு புதுவழிகளிலும் வேலைசெய்யத் தொடங்கினதைப்பற்றி கமிட்டியார் சந்தோஷப்பட வேண்டியது. பஞ்சரப்போலுக்கு ஒரு வெடரினரி ஸர்ஜன் நியமிக்கப்பட்டார். ஒரு புதிய தர்ம வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டது. முன் வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் சங்கத்தின் வருமானம் சற்று குறைந்திருக்கிறது. சந்தாக்களிலிருந்தும் நன்கொடைகளிலிருந்தும் கிடைத்த தொகை குற்றவாளிகளின் அபராதங்களிலிருந்து கிடைத்த தொகையைக்காட்டிலும் குறைந்துபோயிற்று. கடந்த சில வருஷங்களைக்காட்டிலும் இவ்வருஷத்தில் சங்கத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களும் குறைவாயிருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் சங்கத்தார் பொது ஜனங்களுக்குப் போதித்தல் முதலிய விலக்கு மார்க்கங்களினால் ஜீவ ஹிம்சையைத் தடுப்பதில் உழைத்து வருவதாயிருக்கலாம். ஆனால் அபராதங்களைச் சங்கத்துக்குப் பணம் வருவிக்கிற ஒரு வழியாக நினைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு அவ்வபராதத் தொகை குறைவுபட்டது அவ்வளவு திருப்திகரமாயிருக்காது. வேறு சிலர் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய வேலையைக் கவனத்துடன் பார்க்காமலிருந்திருக்கலாமென்றும் நினைக்கலாம். அவ்வாறு நினைப்பதற்குப் போதுமான நியாயமில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட அஜாக்கிரதை ஏதாவதிருந்தால், அது சங்கத்தின் அதிக ஊக்கமுள்ள காரியதரிசியாருக்குத் தெரியாமற்போயிராது.

இச்சங்கத்தார் செய்துவருகிற நற்காரியங்களில் விசேஷமானது பால்காரர் கன்றுக்குட்டிகளுக்குப் பால்விடாமல் கொன்று வருகிற பழக்கத்தை நிறுத்த முயல்வது,

இன்னும் மும்மாதத்துக் கொருமுறை பிரசுரஞ் செய்யப்பட்டுவருகிற பத்திரிகை, ஜந்துக்களைப்பற்றிய வியாசங்களுக்கு வெகுமதியளித்தல், ஜந்துக்களின் காட்சிகளை நடப்பித்தல் முதலிய காரியங்களும் செவ்வனே நடந்துவருகின்றன. அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டுள்ள கிளைச்சங்கங்களின் விருத்தியைப்பற்றியும் இன்னும் புதிய சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக வெளியூர்களின் முக்கிய வாசிகளோடு ஏற்பாடுகள் செய்வதிலும் காரியதரிசியார் செய்துவரும் முயற்சி வெற்றியடையுமென்று கோருகிறோம். கடைசியாக இந்தப் பொது நன்மையின்பொருட்டு உழைத்துவருகிற காரியதரிசியாருக்கும் கமிட்டியாருக்கும் வந்தனங்களோடு உபந்நியாசத்தை முடித்தார்.

அதன்பின் கனம்பொருந்திய ரெவரண்ட் ஜி. பிட்டெண்டிரிக் துரையவர்கள் சங்கத்தின் காரியங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசி ஜீ. ஹி. நி. சங்கத்தைப்போலவே சிசுபோஷண சங்கமும், இந்நாட்டாரால் கவனிக்கப்படவேண்டிய தவசியமென்றும், தயையென்பது மானிட ஹிருதயத்தின் ஒரு சார்பில்மட்டும் குடியிருக்காமல், முழுதிலும் வியாபிக்கத்தக்க பொருளாகையால் ஒருவகைப் பிராணிகளின் விஷயத்தில் இரக்கம் உண்டானபோது அவைகளைப்போலவே வாயற்று நிராதாரமாயிருக்கப்பட்ட மற்றவைகளின் விஷயத்திலும் அவ்விரக்கம் தோன்றுமென்றும், ஜீவனுள்ள எந்தப்பிராணிகளிடத்திலும் பக்தியும் விசுவாசமும் காண்பிக்கவேண்டுமென்கிற சாஸ்திர பூர்வகமான கோட்பாடுகளுள்ள இந்த நாட்டில் பலவித காரணங்களினால் அப்படிப்பட்ட பக்தியும் விசுவாசமும் அப்பியாசத்திற் குறைந்துவிட்டபடியால், இந்நாட்டாரை அவர்களின் பூர்வீக உணர்ச்சிகளுக்கு விழிப்பிக்கிற இச்சங்கம், லாபத்தையே பிரதானமாகக்கொள்கிற வர்த்தக உணர்ச்சியுடையவர்களில் தங்களுக்கு அதிக உபயோகமான வேலைசெய்கிற பிராணிகளின் சௌக்கியத்தில் உபேக்ஷைகொண்டவர்களைத் தண்டித்தும், சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பத்திரிகை மூலமாயும் வியாசங்கள் மூலமாயும் பிராணிகளிடத் தன்பு பாராட்ட வேண்டுமென்பதைப் போதித்தும் வருவதினால், இந்நாட்டார் இச்சங்கத்தை ஆதரிக்கவேண்டிய தவசியமென்றுங் கூறினார்.

சபையார் ரிபோர்ட்டை அங்கீகரித்தபிறகு இச்சங்கத்துக்கும் பஞ்சரப்போல் கமிட்டிக்கும் வருஷத்து அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று பிரேரேபித்த கனம்பொருந்திய மிஸ்டர் ஸி. ஜி. ஸ்பென்சர் துரையவர்கள், மனிதர் தங்களுக்குச் சேவைசெய்கிற பிராணிகளின் குணாதிசயங்களைச் செவ்வையாய்க் கவனித்தால், அவைகளுக்கு ஹிம்சை செய்யமாட்டார்களென்றும், குதிரை நாய் முதலியவைகள் அவைகளின் எஜமானர்களின் முகத்தை நோக்கினமாத்திரத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளத்தக்க சூக்ஷ்ம புத்தியுள்ள பிராணிகளென்றும், மனிதரும் அப்பிராணிகளின் உணர்ச்சிகளை அவ்வளவு சூக்ஷ்மத்துடன் அறியவேண்டுமென்றும், இந்நாட்டில் பசுக்களையும் எருதுகளையும் பாராட்டுவதுபோல் குதிரைகளையும் நாய்களையும் பாராட்டுகிறதில்லையென்றும் இவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமான ஜீவவுபேக்ஷை யிருந்துகொண்டு வருவதால், எங்கும் ஜீ. ஹி. நி. சங்கங்கள் அவசியமாயிருக்கவேண்டி யிருக்கின்றனவென்றும் பேசினார்.

பிறகு அக்கிராசனாதிபதி, வெகுமதிகளின் பொருட்டு எழுதப்பட்ட வியாசங்களில் மிகவும் நன்றாய் ஆங்கிலத்தில் எழுதின சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் மாணாக்கனான என். பஞ்சநாதத்திற்கு தங்கக்கீர்த்தி முத்திரைப் பதக்கமும், தமிழில் நேர்த்தியாய் எழுதிய மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலைச் சேர்ந்த டி. கல்யாணசுந்தரத்துக்கு வெள்ளிப்பதக்கமும் அளித்து சுருக்கமாயும் அறிவு நிறைந்ததுமான ஒரு உபந்நியாசம் செய்தார். அதன் சாராம்சமாவது:—

இராமநாதபுரம் ராஜா அவர்கள் இச்சபைக்கு வரக்கூடாமையைத் தெரிவித்து, இச்சங்கத்திற்கு 1,000 (ஆயிரம்) ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார். பிராணிகளின் ஹிம்சை நிவாரணத்தைக் குறிப்பிக்கிற மாஜிக்லாண்டர்ன் கண்ணாடிப் படங்களை இங்கிலாந்திலிருந்து வரவழைக்கும்பொருட்டு கொல்லா. வெங்கடராகவ செட்டியாரவர்கள் 25 பவுண் அளித்தார். அவைகளைத் தருவிப்பது சங்கத்தின் போதனாகாரியத்தைப் பலப்படுத்துமென்று நம்புகிறேன். எனக்குமுன் பேசியவர்கள் அபராதங்களிலிருந்து சங்கத்திற்குக் கிடைக்கிற வருமானத்தைப்பற்றி அதிகமாய்ப் பேசினார்கள். எனக்கும் அவ்விஷயத்தில் இருவகைப்பட்ட அபிப்பிராயமிருந்தபோதிலும், அபராதங்களிலிருந்துண்டாகிற வருமானம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக்காட்டிலும், குறைந்துகொண்டே வருவதுதான் சங்கத்தார் வேறு மார்க்கங்களில் ஜீவ ஹிம்சையைக் குறைக்கும்பொருட்டு செய்துவருகிற முயற்சிகளின் வெற்றிக்கு அத்தாக்ஷியாகுமென்று நினைக்கிறேன். தண்டனைகளிலிருந்து வரும்படியை எதிர்பார்ப்பதைவிட சங்கத்தின் செலவுக்குப் போதுமான வருவாயைத் தரத்தக்க முதற்பணமுள்ள ஊர்ச்சிதமான பண்டு ஒன்று சேகரிக்கவேண்டும். சங்கத்திற்கு அப்போதைக் கப்போது நன்கொடையாக அளிக்கப்படுகிற பணம் எப்பொழுதுங் குறையாதென்கிற நம்பிக்கை எனக்குண்டு. 1913-ம் வருஷத்து ரிபோர்ட்டு திருப்திகரமாயிருக்கிறதுபோலவே அடுத்த வருஷத்திய ரிபோர்ட்டும் இருக்கக் கோருகிறேன்.

ஒங்கோலில் கால்நடைகளின் காட்சி.

சென்ற மார்ச்சுமீ 7உ யன்று குண்டூர் ஜில்லா கால்நடைக்காட்சிச் சங்கத்தாரின் பரிபாலனத்தில் ஒங்கோலில் பத்தாவது கால்நடைகளின் காட்சி தொடங்கிற்று. பலவருஷங்களாக உபயோகிக்கப்பட்டுவருகிற மைதானத்திலேயே காட்சி நடத்தப்பட்டது. முன் வருஷங்களைக்காட்டிலும் இவ்வருஷத்துக் காட்சியில் விசேஷமொன்றுமில்லை. இதற்குமுன் கொண்டுவரப்பட்டவைகளைக்காட்டிலும் தொகையிலாவது மாதிரியிலாவது குறையவுமில்லை. இந்த ஸ்திதியிலேயே இன்னும் சில வருஷங்கள்வரையில் காட்சி நடத்தப்படக் கூடுமென்று நம்பப்படுகிறது. இவ்வருஷத்திலும் அநேக எருதுகளும் எருமைகளும் மதிக்கப்படத்தக்கவையாகவே யிருந்தன.

காட்சியைத் திறப்பதற்காகச் சென்னையிலிருந்துவந்த கனம்பொருந்திய மிஸ்டர் பி. எஸ். சிவசுவாமி ஐயர், ஸி. எஸ். ஐ., அவர்களும், குண்டூர் கலெக்டராகிய மிஸ்டர் ஜெ. என். ராய் அவர்களும், காட்சிக் கமிட்டியாரால் வரவேற்றப்பட்டார்கள். யாவரும் தத்தம் ஆசனங்களி லமர்ந்தபிறகு, காட்சிக்கமிட்டியின் தரப்பில் மிஸ்டர் எம். கிருஷ்ணராவ் அவர்கள் பின்வருமாறு உபந்நியாஸித்தார்.

“இந்தக் காட்சி இவ்வூரில் நடந்துவருகிற கால்நடைகளின் காட்சிகளில் பத்தாவதாயிருப்பதினால் இத்தனை வருஷங்களாக நாம் செய்துவந்த காரியங்களைப்பற்றிச் சரியான மதிப்புகொள்ளுவதற்குப் போதுமான விஷயங்களைக் குறிப்பிடத்தக்கதாயிருக்கிறது. இந்தப் பாகங்களில் சிறப்புபெற்ற கால்நடை வகுப்புகளின் அபிவிருத்தியின்பொருட்டும், கிருஷிப்பொருள்கள் கருவிகள் முதலியவற்றின் உபயோகங்களை நிதர்சன பூர்வமாக ஜனங்களுக்குத் தெரிவித்தலின் பொருட்டும், 1904-ம் வருஷத்தில் கால்நடைகளின் காட்சிச் சங்கமென்று ஓர் சங்கம் இவ்வூரில் ஸ்தாபிக்கப்பட்டு அதன் முதல் காட்சி 1905-ம் வருஷத்தில் வெகு சம்பிரமமாய் நடந்தேறிற்று. இப்படிப்பட்ட காட்சிகளின் உபயோகங்களைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் தங்களுடைய நேர்த்தியான கால்நடைகளின் விசேஷத்தையறியும்படி கமிட்டியார் எடுத்துக்கொண்ட கஷ்டத்தின் பலனாக சில வருஷங்களின் காட்சிகளுக்கு கொண்டுவரப்பட்ட மேன்மையான ஆடுமாடுகளைப்போல் இதுகாறும் இந்த இராஜதானியில் வேறெந்தவூரிலும் கொண்டுவரப்படவில்லை. இப்படிப்பட்ட வெற்றி முழுவதிலும் எங்களுக்கே சேர்ந்ததல்ல. அதில் பெரும்பாலும் இச்சங்கத்தாருக்கு இந்த ஜில்லா உத்தியோகஸ்தரால் கிடைத்த உதவியும் தூண்டுதலுமாகும். அப்போதைக் கப்போது இராஜாங்கத்திலிருந்தும் குண்டூர் நெல்லூர் முதலிய ஊர்களின் பொதுக்கூட்டங்களிலிருந்தும், அதிக திரவியசகாயத்தை இக்கமிட்டியார் பெற்றிருக்கிறார்கள். இவ்வருஷத்தில் சென்னைக் கவர்ன்மெண்டார் இரண்டு தங்கக்கீர்த்தி முத்திரைப் பதக்கங்களோடு 1,500 ரூபாய் அளித்திருக்கிறார்கள். பொதுக்கூட்டங்களிலிருந்து 1,250 ரூபாய் கிடைத்திருக்கிறது. இனி வரவர சங்கத்தின் செலவு அதிகரிக்குமாகையால் ஜனங்களும் இதுவரையில் கொடுத்துவந்ததுபோலவே பணங்கொடுத்து வரவேண்டும். இக்காட்சிகள் நடந்துவருகிற விஸ்தாரமான நிலம் சங்கத்தைச் சேர்ந்தது. அதில் ஸ்திர

மான கட்டட மமைத்துவிட்டால் வருஷா வருஷம் செய்கிற செலவு மீரும்.

இக்காட்சிகளின் முக்கியமான பயனென்று. அதாவது இங்கே சுற்றுப்புறங்களிலுள்ள அநேக கால்நடை சொந்தக்காரர் பணக்காரராகிவிட்டார்கள். ஓங்கோல் கால்நடைகளை வாங்க விரும்புகிறவர்கள் உலக முழுவதிலு மிருக்கிறார்கள். ப்ரெஜில் (Brazil) முதலிய தூரதேசங்களிலிருந்து வந்து கால்நடைகளை ஏற்றுமதி செய்துகொண்டுபோகிற வர்த்தகர்களின் தொகை வருஷத்துக்கு வருஷம் அதிகரித்துக்கொண்டு வருவதால், சில பாகங்களுக்குச் சிறப்பாயுள்ள ஜாதிகள் நிர்மூலமாய்ப் போகுமோவென்கிற பயமுண்டாயிருக்கிறது. ஓங்கோல் கால்நடைகளின் காட்சிகளில் வெகு சிரத்தையெடுத்துக்கொண்டிருந்த கனம்பொருந்திய மிஸ்டர் காடைல் ஸ்டூவர்ட் துரையவர்கள் இப்படிப்பட்ட அபாயம் வருமென்று அநேக வருஷங்களுக்கு முன்னமே கூறி நேர்த்தியான வகுப்புகளின் சந்ததியற்றுப்போகாமலிருப்பதற்காக, அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். மேற்கூறிய உபாயம் வந்தேவிட்டதென்றும், ரயத்துகள் தங்களுக்குத் தற்காலங் கிடைக்கிற லாபத்தைக் கவனிக்கிறார்களேயொழிய, இனி யொருகாலத்தில் இந்த நாட்டுக்கே வரப்போகிற பெருத்த நஷ்டத்தைப்பற்றிக் கவலைப்படுகிறதேயில்லையென்றும் சிலர் கூறுகிறார்கள். வேறு சிலர் அவ்வாறில்லையென்றும் பொன் முட்டையிடுகிற வாத்தைக் கொல்லுவதென்பது கதையேயொழிய், அதை யாரும் அனுஷ்டானத்துக்குக்கொண்டுவரமாட்டார்களென்றுஞ் சொல்லுகிறார்கள். உண்மையான நிலைமை, மூன்று வருஷங்களுக் கொருமுறையாவது கால்நடைகளின் தொகைக் கணக்கொன்று எடுத்தாலொழிய விளங்காதெனத் தோன்றுகிறது. எது எப்படியிருந்தபோதிலும் நல்ல ஜாதிகளைப் பரிபாலிக்கும்படி ரயத்துகளை உற்சாகப்படுத்தும்பொருட்டு, வெகுமதிகளுக்காக ஆயிரம் ரூபாய் செலவழிக்க இந்தக் கமிட்டியார் தீர்மானஞ் செய்தாயிற்று.

இக்காட்சிக்கு விஜயஞ்செய்திருக்கும் கலெக்டர் அவர்களுக்கும் மற்றுமுள்ள யாவருக்கும் வந்தனங்களளிக்கற் பாலனாயிருக்கிறேன். காட்சியைத் திறக்கும்படி கனம்பொருந்திய மிஸ்டர் பி. எஸ். சிவசுவாமி ஐயர் அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.”

அதன்மேல் கனம்பொருந்திய மிஸ்டர் பி. எஸ். சிவசுவாமி ஐயர் அவர்கள் எழுந்து சொன்னதாவது:—“இந்த ஜில்லாவின் கால்நடைகளின் ஸ்திதியைப்பற்றி எனக்கு அதிகமாய்த் தெரியாமற்போனாலும் இந்நாட்டிலுள்ள கால்நடைகளின் அபிவிருத்தியைப்பற்றி நானும் ஆவல்கொண்டவனே. இந்நாட்டு நல்லஜாதிக் கால்நடைகளின் தன்மை குறைந்துகொண்டுவருகிறதென்றும், உயர்ஜாதி மாடுகள் சாதாரணமான உழவர் விலைகொடுத்து வாங்கமுடியாத அவ்வளவு விலைபெற்றிருக்கின்றனவென்றும், நாடு முழுதும் ஜனங்களுக்குள்ள அபிப்பிராயம் கவர்ன்மெண்டாராலும் கவனிக்கப்படுகிறது. கால்நடைகளின் விஷயமாய் சென்னை சட்ட நிரூபண சபையிலுங்கூட அநேக கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன. அவைகளின் ஸ்திதியைப்பற்றி செவ்வையாய் விசாரணை செய்துவரும்படி மிஸ்டர் சாம்ஸன் துரையவர்களை நியமித்தார்கள். அவரும் சவிஸ்தாரமாய் ஒரு ரிபோர்ட்டு எழுதியிருக்கிறார். கால்நடைகளின் க்ஷீணத்திற்கு முக்கியகாரணம் பொதுவான மேய்ச்சல் நிலங்கள் இல்லாமையென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்களாம். ஆனால் இப்படிப்பட்ட விஷயங்களில் அனுபோகமுள்ளவர்கள் சிலர் பொதுமேய்ச்சல் நிலங்களினால் அதிக நன்மையில்லையென்றும், அவைதான் கலப்புச் ஜாதிகளின் தோற்றத்திற்குக் காரணமாயிருக்கின்றனவென்றும் கூறுகிறார்கள். இவ்வித விஷயங்களில் தேர்ந்த அபிப்பிராயங்களை ஜனங்களுக்குத் தெரிவிப்பது இத்தகைய காட்சிகளின் வேலையாயிருக்கவேண்டும். கால்நடைக் காட்சிகளின் முக்கியமான நோக்கம் நல்ல ஆடுமாடுகளை விற்பனைசெய்வதல்ல, அவைகளின் ஸ்திதிகளைப்பற்றிப் பலரும் பல விஷயங்களைக் கற்பதே. அநேக காட்சிகள் ஆடுமாடுகளை வளர்க்கிறவர்கள் குடியிருக்கிற விடங்களுக்கு அருகில் நடத்தப்படுகிறதில்லை. திருப்பூர், ஓங்கோல் இந்த இரண்டு விடங்களில்மட்டும் குடியானவர்களுடைய வாசஸ்தலங்களுக்குச் சமீபமாய்க் காட்சி நடத்தப்படுவதினால், அவர்கள் நேரில் சென்று நேர்த்தியான ஜாதிகளைக் கண்ணுற்

றும் அவை யதிகவிலைக்கு விற்கப்படுவதையறிந்துகொண்டும் போகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்குவதற்கு கால்நடைக்காட்சிச் சங்கத்தார் பிரயாசைப்படவேண்டும்.

வெகுமதிகளளிக்கும்பொருட்டு தரம் பிரிப்பதில் இன்னும் சிரத்தையெடுத்துக்கொண்டு வெகுமதிகளையும் அதிகப்படுத்தவேண்டும். சாம்ஸன் துரையவர்களுடைய ரிபோர்ட்டு சீக்கிரத்திலேயே பிரசுரமாகும். கிருஷிக்காரர் யாவரும் அதைப் படித்து அவர் கூறுகிற விஷயங்களைக் கவனித்து வருவார்களென்று நம்புகிறேன். மேற்சொன்ன விஷயங்களைப் பற்றிப் பொது ஜனங்களுக்கு தேசபாஷைகளில் உபந்நியாசங்கள் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். கவர்ன்மெண்டாரால் தரப்படுகிற போத்துகளை கிராமத்தார் நன்றாய்ப் போஷித்து சரியான வகையாய் உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். பணமுள்ள ரயத்துகள் கால்நடைகளின் அபிவிருத்தியை யொரு வேலையா யெடுத்துக்கொள்ளவேண்டும். கோயம்புத்தூர் ஜில்லாவில் பணக்கார ரயத்துகளிலொருவரான பட்டக்கார் என்பவர் வருஷாவருஷம் திருப்பூர் கால்நடைகளின் காட்சியில் சிறந்த பதக்கங்களையும் வெகுமதிகளையும் பெற்றுவருகிறார். அதேமாதிரி இந்த ஜில்லாவிலிருக்கும் தனவந்தரும் இந்த ஜில்லாவின் கால்நடைகளை விருத்திசெய்யும் காரியத்தைத் தங்களுடைய கடமையாக மேற்கொள்ளுவார்களென்று விரும்புகிறேன்.

கால்நடைக் குதவி பண்டு.

செங்கல்பட்டு ஜில்லா கூட்டுத்தொழில் சங்கத்தாரின் சென்ற வருஷத்து மகாசபை திருவள்ளூர் தாலூகாவிலிருக்கும் கீழச்சேரியில் கடந்த டிசெம்பர்மாதம் 20-ம் தேதியன்று கூடிற்று. அந்தக் கிராமத்து ரோமன் கத்தோலிக் கோவிலின் தோட்டத்தில் அமைக்கப்பட்ட ஒரு பந்தலில் சபை நடந்தது. அச்சபைக்கு ஜில்லாவி னிதரபாகங்களிலிருந்து முன்னூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

அன்று அக்கிராசனம் வகித்திருக்கவேண்டிய ஜில்லா கலெக்டரவர்கள் தற்செயலாய் வேறொரு வேலைக்குப் போகவேண்டிய அவசரம் நேரிட்டதால் வர முடியவில்லை. அவருக்குப் பதிலாக திருவள்ளூர் ரெவினியூ டிவிஷனல் ஆபீசராயிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ. எஸ், திருமலை ஐயங்கார் அவர்கள் அக்கிராசனாதிபதியா யிருந்தார். ராவ் பஹதூர் தர்மாங்கராஜு அவர்கள் சொன்னதாவது: கூட்டுத்தொழில் சபையார் கால்நடை இன்ஷியூரென்ஸ் பண்டு ஒன்று ஆரம்பிக்கவேண்டியது ஆவசியகம். மேனாடுகளில் கிருஷித்தொழில்களுக்கெல்லாம் யந்திரங்களை யுபயோகிக்கிறார்கள். அவ்வித யந்திரங்களில்லாததும், பெரும்பாலும் வேளாண்மையையே ஜீவனாதாரமாகக்கொண்ட பிரஜைகளையுடையதுமான இத்தேசத்தில் கிருஷித்தொழில்களுக் கின்றியமையாத கால்நடைகளைத்தான் திரவியமாகப் பாவிக்கவேண்டும். ஆகையால் வேளாளர் போதுமானவளவு கால்நடைகளைப் பாதுகாக்கவேண்டியது. ஆனால் எளியவர்கள் தங்களுடைய ஆடுமாடுகளில் ஒன்று இறந்துவிட்டால் அதற்குப் பதிலாக இன்னொன்றை உடனே வாங்கச் சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தக்ஷணம் பொருள் கிடைத்தால் அவர்களுடைய பயிர் முதலியவைகளுக்குச் சேதம் வராமற்படிக்கு உடனே வேறொரு பிராணியை வாங்கிக்கொள்ளுவார்கள். ஆகையா லித்தகையவர்களுக்கு அப்படிப்பட்ட பண்டு அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கும். குடியானவர்கள் தங்கள் ஏழ்மையால் கால்நடைகளைக் கிரமமாய்ச் சம்ரக்ஷணை செய்யாததினாலும், அவைகளைக்கொண்டு மிதமிஞ்சி வேலை வாங்குவதினாலும் அவைகள் சீக்கிரத்தில் பலங்குன்றி இறந்துவிடுகின்றன. கால்நடைகளைச் சரியாய்ப் போஷித்து மிதமாய் அவைகளிடம் வேலைவாங்குவதினால் குடியானவர்களுக்கு நீடித்தகாலத்தில் லாபகரமா யிருக்குமென்பதைப் போதிக்கவேண்டும். அப்படிச் செய்வதினால் அவைகளுக்கும் சுகமும் சந்தோஷமு முண்டாகி குடியானவர்களுக்கு புண்ணியமும் கிடைக்கும்.

பொன்மீன்.

வெளித்தோற்றத்திற்கு அதிக சந்தோஷமானதும் கவலையற்றதுமான வாழ்க்கையையுடையவர்கள்போல் காணப்பட்டு உண்மையாக அநேகவிதமான கஷ்டங்களுக் கிரையாயிருக்கிற மனிதர் அநேகர் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்குச் சமானமானது பொன்மீன் என்று சொல்லலாம். பொன்மீனுக்குப் பேசுந் திறமையிருந்தால், அதன் கஷ்டங்களையெல்லாம் நாமறியக்கூடும். அதனுடைய பளிங்குச் சிறைச்சாலையில் அது குறையில்லாத பிராணியைப்போல் காணப்படுகிறதேயொழிய அதன் நிலைமை பரிதபிக்கத் தக்கதுதான்.

பொன்மீனின் ஜன்மபூமி சீனாதேசமாகும். ஐரோப்பியருக்கு அதனிருப்பு தெரிகிறதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் சீனாதேசத்துப் பிரபுக்களின் வீட்டுத் தடாகங்களில் சுயேச்சையாய் நீந்திக்கொண்டு தானும் களிப்புடனிருந்து பார்ப்பவர்களையும் சந்தோஷிப்பித்துக்கொண் டிருந்தது. அங்கிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முன் பிராஞ்சுதேசத்து ஒரு சீமாட்டியின் விநோதார்த்தம் ஐரோப்பாவுக்குக் கொண்டுவரப்பட்டு பதினேழாவது நூற்றாண்டினிறுதியில் இங்கிலாந்து தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. முப்பதினாயிரம் மைல் தூரத்துக்கப்பாலிருந்து, சமுத்திரங்களைக் கடந்து கொண்டுபோகப்பட்ட இந்தப் பிராணி அவ்வூரில் எவ்விதமாய் நடத்தப்படுகிற தென்பதைச் சற்று விசாரிப்போம். அவை அநேக தனவான்கள் வீட்டுச் சாளரங்களில் கண்ணாடியாற் செய்யப்பட்ட பெரிய கிண்ணங்களில் தண்ணீரில் விடப்பட்டிருக்கின்றன. அச்சாளரத்தின் வழியாக சூரிய கிரணங்கள் கண்ணாடியின் வழியாகத் தண்ணீரில் பலவிதமான வர்ணங்களோடு வீசி, அதிலுள்ள பொன்மீனைத் தளதள பளபளவென்று பிரகாசிக்கும் ஒரு திவ்வியாபரணத்தைப்போல் காட்டுகிறது. அப்பொழுது இந்த அழகான பிராணி முன்னும் பின்னும் நீந்துவதற்காக அலைவதும் சுவாசிக்கும்பொழுது அதன் இரத்தக் குழாய்களில் இரத்தம் பூரிப்பதும் செவ்வையாய்ப் புலப்படுகிறது. இவ்வாறு நம்முடைய கண்ணுக்கு மிகவும் ரம்மியமான காட்சியைத் தருகிறதைப் பார்த்து அது சுகஜீவியென்று நினைப்பது சரியல்ல.

அதனுடைய இயற்கையான வாசஸ்தலங்களாகிய நதிகளிலும் வாய்க்கால்களிலும் தன்னிஷ்டப்படி நீந்தியோடி சுபாவமாய் வசிக்கிறதை விட்டு நாற்புறங்களிலும் மூடப்பட்ட சிறைச்சாலையில் சுற்றிச் சுற்றித் திரிந்தலைந்துகொண்டிருக்கிற வாழ்க்கை மிகவும் இச்சிக்கத்தக்கதல்லவா! வெளியில் அதன் ஆகாரம் சிறுபூண்டுகளின் துண்டுகளும் நீரின் ஓரத்தில் சிறிய ஈக்கள் முதலிய கிருமிகளின் முட்டைகளுமாகும். அவைகளில் இஷ்டமானதைத் தின்று சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் நிறைந்த தண்ணீரின் அடிப்புறத்திலோ நீரில் முளைக்கும் செடிகளின் நிழலிலோ தன்னிச்சானுசாரம் கிடந்து உறங்கிக் காலங்கழிக்கும்.

இந்த ஸ்திதியை அதற்காகச் செயற்கையாக நிர்மித்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். ஓட்டமுள்ள ஜலத்திற்குப் பதிலாகக் கிண்ணங்களில் அசைவற்ற நீரும், திறந்த வெளிக்குப் பதிலாகத் துறவிகளின் குகையைப்போன்ற அடைப்பான விடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே நாணல் முதலிய நீர்ச்செடிகளின் நிழல் கிடையாது. அதன் உரிமைகளிலெல்லாம் சூரிய வெளிச்ச மொன்றுமட்டும் ஏராளமாய்த் தரப்படுகிறது. அபரிமிதமான சூரிய வெப்பம் அதற்குத் தீங்கை விளைக்குமென்பதை அநேகர் தெரிந்துகொள்ளுகிறதில்லை.

ஒரு நகரத்தில் நடந்த ஒரு விருந்தில் மேஜையின்மேல் பொன்மீன்கள் விடப்பட்ட அநேக கிண்ணங்களை வைத்து அம்மீன்களின் அழகைச் சிறப்பிக்கும்பொருட்டு ஒவ்வொரு கிண்ணத்திலும் ஒவ்வொரு காந்த விளக்கை யேற்றி வைத்தார்களாம். அவ்வளவு பிரகாசமான வெளிச்சம் அவைகளின் கண்களை யூடுருவிச் செல்லாமலிருக்கும்படியான கண்ணிரப்பைகள் அவைகளுக்கு வாய்ந்திருந்தால் தோஷமில்லை. ஒரு மனிதனை ஒரு அறைக்குள் விட்டு அவனுடைய பரிமாணமவ்வளவு பெரிய காந்த விளக்கையு மேற்றி கதவை மூடிவிட்டால் அவனுக்கெப்படியிருக்கும். மனிதனாவது தன்னுடைய கண்களை மூடிக்கொள்ள முடியும். மீன் என்னசெய்யக் கூடும். அந்த மீன்களின் அதிர்ஷ்டவசத்தினால் அவ்விருந்துக்கு

ஒரு ஜந்து நேசர் வந்திருந்தாராம். அவர் இந்தக் காட்சியைப் பொறுக்காமல் உடனே வீட்டு எஜமானரிடத்திற்போய்ப் பேசவே அக்நாந்த விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டனவாம்.

இந்த விநோதமான விருத்தாந்தங்களையெல்லாம் விட்டு பொன்மீனை வளர்க்கிறவர்கள் அதற்குக் கூடியவரையில் சுகத்திலிருத்தி ,வைக்கவேண்டியதற்கு என்னசெய்யவேண்டுமென்பதைச் சற்று கவனிப்போம்.

முதலாவது நீர்ப்பெட்டிகள் விசாலமாயும் அடியில் மணலும் கூழாங்கற்களும் பரப்பப்பட்டு மிருக்கவேண்டும். அப்பெட்டிகளை அதிக உஷ்ணமான விடமுமில்லாமல் குளிர்ச்சியான விடமுமில்லாமல் நல்ல காற்றுள்ள விடங்களி லமைக்கவேண்டும். நீர் அதிக வெப்பமுமில்லாமல் குளிர்ச்சியுமில்லாமல் வெதவெதப்பாயிருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சின சூரிய வெப்பம் மீனுக்குச் சகிக்க முடியாம விருப்பதுடன் தண்ணீரை யதிகமாய்க் காய்ச்சி நோய்களுக்குக் காரணமாக்கிவிடும். நல்ல ஆற்றுநீரை நிரப்பிவைத்து அதில் அழுகுந்தன்மையுள்ள வஸ்துக்கள் சேராமல் கவனித்துக்கொண்டு வந்தால் அடிக்கடி தண்ணீரை மாற்றுவது அநாவசியம். பிரதிதினமும் குழாய்நீரை யூற்றிக்கொண்டு வருவது உசிதமல்லவென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். தண்ணீரை மாற்றிக்கொண்டு வரவேண்டுமென்பதற்குக் காரணம் என்னவென்றால், மீன் சுவாசிப்பதற்காகத் தண்ணீரிலிருந் துட்கொள்ளுகிற பிராணவாயுவு குறையக் குறைய நீரானது கெட்டுப்போகுமென்பதே. அவ்வாறு தண்ணீரில் பிராணவாயு சதா இருந்துகொண்டிருக்கும்பொருட்டு சிறிய நீர்ச்செடிகளை அதில் போட்டு வைக்கவேண்டும்.

மீனுக்கு நீரே போதுமான ஆகாரமென்று நினைக்கக்கூடாது. அப்போதைக்கப்போது தீனிபோட்டு வரவேண்டும். பச்சை மாமிசத்துண்டொன்றைக் கயிற்றிற் கட்டி நீரில் தொங்கவைக்கவேண்டும். இதை நாடோறும் மாற்றவேண்டும். நத்தைகளின் முட்டையின்மேல் பொன்மீனுக்கு அதிகப் பிரியமாகையால் நீரில் சில நத்தைகளையும் விட்டு வைப்பது நலமாயிருக்கும். நீர்ப்பெட்டிகளை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

நெருப்புக்கோழிகளை வளர்க்கும் விதம்.

தீக்குருவி முட்டையிலிருந்து வெளிப்பட்டதுமுதல் பெரியதாகிறவரையிலும் விநோதமான படிப்புக்கு இடங்கொடுக்கிற பட்சி. முட்டையிலிருந்து வெளிப்படுகிற குஞ்சுகள், தேய்ந்துபோன துடைப்பத்தைப் போன்ற சிறு இறகுகள் உடையனவாய்ப் பார்ப்பதற்கு அவலட்சணமாயிருக்கின்றன. அவைகளை முதலில் சிலமாதம்வரையில் ஜாக்கிரதையுடன் காக்கவேண்டும். பகலில் அவைகளைத் திரியவிட்டபோதிலும் இரவில் அடைத்துத்தான் வைக்கவேண்டும். பிறந்து நான்குநாள்பரியந்தம் அவை யுணவின்றியிருந்து, பிறகு மணலில் பச்சை நிறமுள்ள பூண்டுகளைப் பொறுக்கித் தின்ன வாரம்பிக்கின்றன. ஒரு மாதமானபிறகு அவை வளரத்தொடங்கி நாளொன்றுக்கு ஒரு அங்குலப் பிரமாணமாக எட்டு மாதங்களில் ஏழு அடி உயரமாக வளர்ந்து விடுகின்றன. பிறந்து ஒன்பது மாதமானவுடன் அவை சிறகு மாற்றுகின்றன. அதேமாதிரி ஒவ்வொரு ஒன்பது மாதத்தினிறுதியில் சிறகு மாறிக்கொண்டே வரும். நாலு வயதானபிறகு ஆண்பக்ஷி ஒரு பெட்டையை நாடி விசுவாசங் குறையாமலிருந்தால் அதனின்றும் பிரிகிறதேயில்லை.

அவை மணலில் ஒரு பெரிய வளையைத் தோண்டிக்கொள்ளும். அதில் பெட்டை ஒருநாள்விட்டு ஒருநாள் ஒரு முட்டையாக ஒருமாதம்வரையில் முட்டையிடும். அவை பகலில் முட்டை பொறிக்கும். முட்டை பொறிக்கிற தொழில் நாற்பதுநாள்வரையிலும் நடக்கும். ஒரு ஜதை தீக்குருவிகள் ஒரு வருஷத்தில் நாற்பது குஞ்சுகள் பொறித்ததாகச் சொல்லப்படுகிறது.

தீக்குருவிக்கு விநோதமான அப்பியாசங்களுண்டு. அதன் நீண்ட கழுத்தின் வழியாகச் சுலபமாய்ச் செல்லத்தக்க எப்பொருளையும் விழுங்கும். ஆணி, கல், குழாய் முதலிய வஸ்துக்களில் வெகு பிரியம். சாதாரணமாய்த் தீக்குருவிகள் நல்ல சுபாவமுள்ள தோற்றமுடையனவாய் அவைகளை விட்டு வைக்கும் அடைப்புகளில் அசட்டையாய்த் திரிகின்றன. (இன்னும் வரும்.)

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **கனிகிரியில் கால்நடைகளின் காட்சி.**- சென்ற மார்ச்சு மாதத்தில் கனிகிரியில் பல கனவான்கள் கூடி ஓர் காட்சிவைக்கும்படி ஏற்பாடுசெய்ய ஆரம்பித்தனர். அந்த தாலூக்காவில் மாடுகளும் ஆடுகளும் மிக அக்கரையுடன் பாதுகாக்கப்பட்டு வருகிறபடியால், அக்காட்சிக்குப் போகிறவர்கள் அவைகளைப் பார்த்து விசேஷ பயனடைவார்களென்பது நிச்சயம். இப்படியே பல ஜில்லாக்களிலும் தாலூக்காக்களிலும் கனவான்கள் சேர்ந்து காட்சிகள் வைக்கும்பக்ஷத்தில் பயிரிடும் குடிகளுக்கு மிக அநுகூலமுண்டாகும்.

---

2. **கோயம்புத்தூர் ஜீ. ஹி. நி. சங்கம்.**—இச்சங்கத்தார் சென்ற மார்ச்சு மாதத்தில் வருஷாந்த சபை கூடினார்கள். சென்ற வருஷத்தில் கோர்ட்டுகளில் 1,509 பேர்களின் மேல் ஜீவஹிம்சை செய்த குற்றங்கள் நியமிக்கப்பட்டன. அவற்றால் அச்சங்கத்துக்கு ரூபா 4,000க்குமேல் பணம் கிடைத்தது. ஜீவ ஜந்துக்களுக்கு ஓர் வைத்யசாலையை ஏற்படுத்தவும், அவர்கள் முயற்சி செய்கிறார்கள். இங்கிலீஷிலும் தமிஷிலும் ஜீவ ஜந்துக்களிடத்தில் பட்சம் பாராட்டவேண்டிய கடமையைப்பற்றி வியாசங்களெழுதும் பாலகர்களுக்குக் கீர்த்தி முத்திரைப் பதக்கங்கள் கொடுப்பதாகவும் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

---

3. **ஜந்துக்களுக்கு வைத்தியசாலை.**–ஜார்ஜ டவுன் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு 185-வது இலக்கமுள்ள வீட்டில் நோயுள்ள ஜீவ ஜந்துக்களுக்காக ஒரு வைத்தியசாலை **"பொம்பாய் வெடர்னெரி காலேஜில் உதவி ஆபீசராய் ரொம்பவும் பெயர் பெற்றவரால்"** நேமிக்கப்பட்டிருக்கிறது. தன்னால் கூடிய முயற்சி செய்து வைத்தியம் செய்வதுடன் சார்ஜும் ரொம்பவும் குறைவாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருதடவை ஆர்டர் கொடுத்து நன்மையடையும்படி கோருகிறோம்.

ஆபீசில் வைத்தியம் செய்யும் காலம்:

காலை: 7-மணி முதல் 9-30 வரை.
மாலை: 3-30 ,, 5 ,,

ஆபரேஷன் முதலான மற்ற எல்லா விஷயங்களுக்கும் ஆபீசில் தெரிந்துகொள்ளலாம்.

---

4. **குதிரைகளின் ஆசிரியம்.**—வடமேற்கு லந்தன் நகரத்தில் (Cricklewood) கிரிக்கில்வுட் மாகாணத்தில் (Westcroft) தோட்டத்தில் குதிரைகள் இளைப்பாறும் ஆசிரியமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏழை ஜனங்களின் குதிரைகள் இளைப்பாறும்படியாகவும், அவர்களின் குதிரைகள் இளைப்பாறும்போது அவர்களுக்கு வேறு குதிரைகளைக் கொடுத்து வைப்பதற்கும், நெடுநாள் வேலைசெய்து கிழமாய்ப்போன குதிரைகளை அவ்விடத்திலேயே விட்டுவிடுவதற்கும் இந்த ஆசிரியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப்போலொத்த பஞ்சாப்போலென்னும் ஆசிரியம் சென்னபட்டணத்திலும், பொம்பாயிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இதர பெரிய நகரங்களிலும் ஸ்தாபித்தால், சக்தியற்ற கிழக் குதிரைகளுக்கு எவ்வளவு நலமுண்டாகும்?

---

5. **ஜந்துக்களைக் கொல்லும் ஆயுதங்கள்.**–(Stroud) ஸ்டிரௌட் என்னும் பட்டணத்தில் கசாப்புக்காரர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து, ஜீ. ஹி. நி. ராஜசங்கத்தாரால் சிபார்சு செய்யப்பட்ட ஜந்துக்களை நோயின்றி கொல்லும் ஆயுதங்களாலேயே, தாம் ஜந்துக்களைக் கொல்லவேண்டுமென்று முதல் முதல் தீர்மானித்துக்கொண்டார்கள். பின்பு (Sidemouth) சிட்மவுத் பட்டணத்தாரும் அப்படியே செய்ய ஆரம்பித்தார்கள். இந்த நற்காரியம் எல்லாப் பட்டணங்களிலும் நாளாவட்டத்தில் பரவவேண்டுமென்று கோருகிறோம்.

---

6. **கல் (Gull) என்னும் நீர்க்கோழிகள்.**–இவை கடற்கரையில் கிடக்கும் ஜந்துக்களின் குடல் முதலான அசுத்தங்களைப் புசித்துச் சுத்தப்படுத்தும். உள்நாட்டில் பயிருக்குக் கெடுதிசெய்யும் பூச்சி புழுக்களையும் புசித்துப் பயிரிடுவோனுக்கு நன்மை புரியும். ஆகையால் அவைகளாலுண்டாகும் கெடுதியைவிட நன்மையே அதிகரித்திருக்கிறது,

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1914,

THE HORSE TO HIS MASTER

I am a horse, you are a man;
I have been your slave since I began,
And though I am strong enough to shake
My shackles off and make a break
For freedom that would lift the lid,
You've noticed that I never did.
By day and night I have worked for you
And done the best that I could do;
And though I may not always like
Your methods, yet I never strike;
In heat and cold, in wet and dry,
I'm always ready—glad to try
To do the very most I can
To satisfy my master, man.
Therefore, my master if you please
Considering such facts as these,
Say, don't you think it ought to be
Your pleasure to look out for me,
If for no other reason than
My greater usefulness to man?
Of course, you might be worse I know
You sometimes treat your own kind so,
But I am a horse and truer than
The man-slave to his master, man.
And further more, my nature is
Much more dependent than is his;
And as I trust you sir, you should
Do all you can to make it good.
Nor do I ask a lot, I guess,
To be a fairly fair success—
Good food, good shelter and good care,
I think is just about my share.
No other pay I ask—no touch
I make, but this! Is that too much?

W. J. LAMPTON,

In the New York Times.

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்சை நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்து வருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தியவர்களும் சக்ரவர்த்தினியாரும் பரிபாலகர்களாக விருப்பதன்றி, அவர்களின் ஜேஷ்ட புதல்வரான மஹிமையுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பிரபுஅவர்கள் அக்ராசனாதிபதியா யிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டு வரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயங்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷ முதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப் போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேக விதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுடனிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சரப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமா யதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடிப் பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்யவேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY. ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XIV.] **AUGUST, 1914-ளு ஆகஸ்ற்றுமீ.** [இலக்கம் 3.

மிருகங்களிடத்திலும் பட்சிகளிடத்திலும் மானிட குணங்கள்.

நாம் ஒருவரோ டொருவர் பேசி நம்முடைய கருத்துகளை தெரிந்துகொள்வதுபோல் மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் மானிட குணங்களைக் கற்பித்து, யாதாமோர் உபாயத்தால் வாயில்லா ஜந்துக்களுக்கும் நமக்குமுள்ள உறவை அதிகரிப்பதினாலேயே, சிறுவர் சிறுமிகள் அவைகளினிடத்தில் அதிக அன்பை பாராட்டுவார்களென்று, இப்போதிய பாடசாலைகளின் உபாத்தியாயர்களில் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கருத்து சரியானதாக தோன்றவில்லை. பிரகிருதியைப்பற்றி போதிக்கும்போது ருஜு செய்யக்கூடாத விஷயங்களைக் கற்பிப்பதினால், நாம் படும்பாடெல்லாம் வீணாகும். மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் மனிதருடைய நல்ல குணங்க ளுண்டென்று நம்பும் பக்ஷத்தில், அவருடைய கெட்ட குணங்களுங் கூட அவைகளுக் கிருக்கவேண்டுமென்று நாம் நம்பவேண்டியிருக்கிறது. சிறு குழந்தைகள் தம்முருவத்தைப்போன்ற உருவமுள்ள பொம்மைகளை மிகவும் அன்புடன் கொண்டாடுவார்கள். ஆனால் சில வேளைகளில் அப்பொம்மைகளைக் கெட்ட ஜந்துக்களென்றெண்ணி அதிக கோபத்தோடு அவைகளைக் கீழே போட்டுவிடுகிறார்கள். ஜந்துக்களிடத்தில் அன்பை பாராட்டவேண்டுமென்பதை சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்க சரியான மார்க்கமேதெனில், அவர்கள் சீராட்டும் ஜந்துக்களை நாமும் அன்புடன் போஷிப்பதுதான். மனிதருக்குத் தெரிகிறதுபோல் வாயில்லா ஜந்துக்களுக்கு அவை செய்யும் காரியங்கள் இப்பேர்ப்பட்டதென்று தெரியாதென்றும், அப்படிப்பட்ட காரியங்களுக்கு அவை உத்தரவாதிக ளல்லவென்றும் சிறுவர்களுக்கு நாம் கற்பிக்கவேண்டும்.

மானவ குணங்கள்; குதிரை, நாய், ஆனை முதலான ஜந்துக்களுக் குண்டென்று, அவற்றை அனேகர் மெச்சுக்கொள்வார்கள். ஆனால் இந்த ஜந்துக்கள் மனிதரைவிட கீழ்ப்பட்டவை, அவை மனிதருக்குச் சமானமானவையல்ல. இந்த வாயில்லா ஜந்துக்களை அப்படி எண்ணி, அவற்றை மெச்சுவதில் சில நன்மைகளுண்டு. நாய் நன்றியறிவுள்ளது, குதிரை அன்புள்ளது, ஆனை புத்திகூர்மையுள்ளது ஆனதால் இந்த ஜந்துக்களிடம் மானவ குணங்க ளுண்டென்று நாம் எண்ணுவதற்குக் கூடுமானால், ஆண் பன்றிக்குள்ள விசேஷ ஆசையாலும், நரியினிடமுள்ள தந்திரத்தாலும், கழுதைப்புலிக்குள்ள பயத்தினாலும், இம்மிருகங்களை ஏன் மானவகுணங்கள் பொருந்தியவைகளென்று சொல்லக் கூடாது?

சுருக்கமாய்ச் சொல்வதாவது, மனிதருடைய மனசும் மிருகங்களின் மனசும் பேதமானவை. மிருகங்களுக்கு ஏதாவது யோசிக்கும் திறமையுண்டெனில் அது நம்முடைய யோசனையைப்போன்றதல்ல. அவற்றின் குணங்கள் மனிதருடைய குணங்களுக்கு சில விஷயங்களில் கொஞ்சம் போலியுள்ளனவாயிருந்தாலும், அவற்றின் மனசும் ஆலோசனைகளும், நம்முடைய மனசுக்கும் ஆலோசனைகளுக்கும் வேறுபட்டனவாயிருக்கின்றன. ஆனால் நாகரீகமில்லாத மனிதருடைய குணங்களில் சில குணங்கள் மிருகங்

களின் குணங்களை யொத்திருக்கும். கிழக்கு கனடா தேசத்தில் ஓர் ஹிந்துபெண்ணானவள் ஓர் தடவையில் தன் குழந்தையினிடம் மிருகத்தைப்போலவே நடந்துகொண்டாள். அவ்விடம் நாங்கள் ஓர் குழந்தையோடு விளையாடிக்கொண்டிருக்கையில் அதை அதின் தாய் பார்த்தாள்; தாயானவள் புஷ்பங்களை அறுத்துக்கொண்டிருக்கையில், அக்குழந்தை தெய்வீகமாய் எங்கள் கூடாரத்துக்குத் தப்பி வந்து சேர்ந்தது. தாயாரான அப்பெண் ஏதோ ஒரு பயத்தினால் காட்டுமிருகத்தைப் போல் வெகு ஆசைகொண்டவளாய் எங்களிடத்துக்கு வராமலே தூரமாய் நின்றுகொண்டு எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் படும் வருத்தத்தை நீக்க எங்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. ஏனெனில் நாங்கள் அக்குழந்தையுடன் அல்லது குழந்தையைவிட்டுவிட்டாவது அவளிடம் நெருங்கப் பார்த்தபோது, அவள் அருகிலிருந்த தோட்டத்திற்குள் சென்று பதுங்க ஆரம்பித்தாள். பின்பு நாங்கள் குழந்தைக்குக் கொஞ்சம் கற்கண்டு கொடுத்து சிலதூரம் ஒதுங்கி நின்றோம். பின்னால் நடந்த சங்கதி நடக்குமென்று நாங்கள் நினைக்கவேயில்லை. அதாவது, அந்தப் பெண் மறுபடி தன் குழந்தை தனக்குக் கிடைத்ததென்று தைரியம்கொண்டு, அதினிடம் வந்து கொஞ்சமாவது கனிகரமின்றி அதை யடித்தாள். இப்படியே, மிருகராஜனாகிய சிங்கம் முதல் சிற்றெலிவரையில் தாம் குட்டிகளைப் பெற்ற சிலகாலம்வரையில் யாராவது அவற்றை சிரமப்படுத்தினால், தாம் அவைகளின்பேரில் கோபங்கொண்டு அவைகளை விழுங்கிவிடுவ துண்டென்னும் சங்கதி எங்கள் ஞாபகத்துக்கு வந்தது. ஆகையால் அந்த ஹிந்துபெண்ணின் செய்கையும் இம்மிருகங்களின் செய்கையும் சற்றேறக்குறைய ஒத்திருக்கின்றன.

நாகரீகமற்ற மனிதர் குணங்களில் சில காட்டுமிருகங்களிடம் காண்பதுபோல், நாகரீகமுள்ள மனிதருடைய குணங்களில் சில வீட்டில் வளர்க்கும் மிருகங்களிடம் காணப்படுமென்று நம்ப இடமுண்டு. மிருகங்களின் ஆசிரியங்களில் வசிப்பவருக்கு தம்மிடத்திலுள்ள மிருகங்களின் முகத்தைப்போன்ற முகங்களுண்டாகின்றனவென்று சிலர் சொல்லுகிறார்கள். இது உண்மையாகும் பக்ஷத்தில் எப்பொழுதும் நம்மிடமேயிருந்து நம்முடன் சகவாசம் செய்யும் குதிரைகளுக்கும் நாய்களுக்கும் கொஞ்சகாலத்துக்குப் பின் நம்முடைய முகங்களைப்போன்ற முகங்கள் ஏற்படவேண்டும். ஆடு, மாடு, பன்றி முதலானவைகளுக்கு இப்படி ஏற்படுமென்று நிச்சயமாய் சொல்வதற்கு சாத்தியமில்லை. ஏனெனில், அவ்வை புத்தியில் மந்தமாய் இருப்பதுடன், மேற்சொன்ன ஜந்துக்களைப்போல் இவை நம்முடன் அவ்வளவு சகவாசம் செய்கிறதில்லை. குதிரை, நாய் இவ்விரண்டு ஜந்துக்களிடத்திலேயே மனிதருடைய குணங்களில் சில தோன்றுகின்றனவெனச் சொல்லலாம். இதராளுக்கு மரியாதை செய்யவேண்டும், அவருடைய மனசு நோகும்படி செய்யக்கூடாதென்னும் விஷயத்தில் சில குதிரைகள் மனிதரைப்போல் நடந்துகொள்ளும். பிரெஞ்சுதேச யுத்தங்களில் வலதுகையை இழந்துவிட்ட சர் ஜியார்ஜ் நேபியர் துரையின் சிநேகிதரிலொருவரிடம் ஓர் குதிரை இருந்தது. யார் என்ன கொடுத்தாலும் வலதுகையால் கொடுத்தாலன்றி அதைவாங்கிக்கொள்ளாதே என்று அக்குதிரைக்குக் கற்றுக்கொடுத்திருந்தார்கள். ஆனால் நேபியர் துரைக்கு வலதுகை போயிருந்த சங்கதி அறிந்துகொண்டு அவர்மாத்திரம் எதையாவது இடதுகையால் கொடுக்க அதை அக்குதிரை பெற்றுக்கொள்ளும். மற்றயார் இடதுகையால் கொடுத்தாலும் வாங்குகிறதில்லை. இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு.

ஒவ்வொரு நல்ல குணமும் மனிதனிடத்திலேயே உண்டென்று நினைப்பது சரியான அபிப்பிராயமன்று. நெபோலியனென்பவர் பெரிய போர்வீரர். ஆனால் அவர் தாவரஜங்கம சாஸ்திரத்தில் தேறினவரல்ல. பெஸானோ யுத்தம் நடந்தானபிறகு இறந்துகிடந்த போர்வீரர்களிலொருவாருகில் அவருடைய நாய் நின்றுகொண்டு அப்பிணத்தைக் காத்துக்கொண்டிருந்தது. அதைப்பார்த்த நெபோலியனானவர் தன் சேவகரைக் கூப்பிட்டு, "இதோ! மனித குணங்களுக்கு இதொரு திருஷ்டாந்தம்பார்" என்றார். அவர் அதை ஏன் மனித குணமென்று சொன்னார்? கஷ்டதசையில் சில மனிதரைப்போல் அந்த நாய் தன் எஜமானருடைய பிரேதத்தைக் காத்து நின்றது. ஆகையால் அதைப்பார்த்து சில மனிதரும் அக்குணத்தைக் கற்கவேண்டுமென்று நெபோலியன் கருத்துகொண்டு அப்படிச் சொன்னார்.

நெருப்புக்கோழிகளை வளர்க்கும் விதம்.

(தொடர்ச்சி.)

சில சமயங்களில் அவைகளின் பாகன் கிச்சிலிப்பழம் முதலிய தின்பண்டங்களைக் கொண்டுவரும்போது, அவைகளின் மிருகத்தன்மை பிரபலமாய்த் தோன்றி, அவை கும்பலாகக் கூடி கூத்தாடிக்கொண்டு வருகின்றனவாம். அவைகளுக்குக் கோபம் வந்தால் அவை பலமாய் உதைக்குமாகையால் சிறிது ஜாக்கிரதையாயிருப்பது நலம்.

சிறகுகளைப் பிடுங்குவதென்பது பெரிய சிறகுகளை ஒரு அங்குலம் விட்டுக் கத்திரித்து சிறியவைகளை மெதுவாய்ப் பிடுங்குவதுதான். அவை சிறகுமாற்றுகிற பருவங்களில் கத்திரித்தால் வெட்டுப்பட்ட கட்டைகள் சீக்கிரத்தி லுதிர்ந்து புது சிறகுகள் முளைக்கும். சிறகரிப்பது தீக்குருவிக்கு வருத்தத்தை யுண்டாக்குகிறதில்லையென்றெண்ணப்படுகிறது. ஆயினும் அவை பலமாய்த் தடுப்பதினால் அவைகளின் கண்களைக் கட்டிவிட்டு சிறகு வெட்டுகிறார்கள். அப்பொழுது அவை யாதொரு தடையும் செய்கிறதில்லை. சுமார் 130 சதுரஅடி விஸ்தீரணமுள்ள அடைப்புகளில் தீக்குருவிகளை விட்டு அவைகளின் கண்களைக் கட்டிவிட்டு சிறகுகளைச், சேகரிப்பதற்காகக் கொண்டுபோகப்பட்ட பெட்டிகளுக்கருகில் அவைகளை நிறுத்தி, ஒருகையால் சிறகைப்பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் வெட்டுகிறார்கள். ஒரு நாளில் ஆறுபேர் வேலைசெய்தால் 150 தீக்குருவிகளின் சிறகுகளை வெட்டலாம். சிறகரிக்கிற வேலை முடிந்தபிறகு அவைகளை மறுபடியும் அவைகளின் வளர்ப்புக்காக வமைக்கப்பட்டுள்ள விசாலமான நிலங்களுக்குக் கொண்டுபோகிறார்கள். மூன்று மாதங்களுக்கெல்லாம் மறுபடியும் வெட்டக் கூடியவளவுக்கு சிறகு வளர்ந்துவிடுமாம்.

தீக்குருவிகளை வளர்ப்பதற்கு ஜூன் மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையில் தக்க பருவம். நன்றாய்ப் போஷிக்கப்பட்டு திடமாயுள்ள பட்சிகள் வருஷமுழுதும் குஞ்சு பொரித்துக்கொண்டேயிருக்கும். ஆயினும் ஆகஸ்ற்று, செப்டெம்பர் மாதங்களில் பிறக்கிற குஞ்சுகள்தான் மேலானவை. முட்டையிடுகிற பருவங்களில் ஆண்பக்ஷிகள் ஒன்றோடொன்று சண்டைபோடாமலிருக்கும்படி அடைப்புகளுக்கிடையில் பலமான வேலிகள் போடப்படவேண்டும். நாளொன்றுக்கு ஒரு ஜதைப்பக்ஷிகள் 8½ பவுன் கோதுமையை யுட்கொள்ளும். பச்சையிலைகளையும் பூண்டுகளையுங் கொடுக்கலாம். அவைகளுக் கிஷ்டம்வரும்போது தின்னும்படியாகப் பொடிசெய்த கோழிமுட்டைகளை வைத்துவைப்பது நலம்.

வளைக்குள் மழைச்சலம் வந்து முட்டைகளை யழிக்காமலிருக்கும்படி வளையைச் சுற்றி சிறிய மேடையைப் பெட்டைப்பக்ஷி கட்டிக்கொள்ளும். அடைகாக்கிற வேலை நாற்பத்திரண்டுநாள் செல்லும். குஞ்சுபொரிக்கிற காலத்தில் முட்டைகளைச் சாக்கிரதையாய்ச்சோதனைசெய்து, அவைகளில் அதுவாகவே உடையக்கூடாத முட்டை யேதாவதிருக்கிறதாவென்று பரீக்ஷிக்கவேண்டும். அப்படி யேதாவதிருக்கும்பட்சத்தில் அந்த முட்டைகளை மெதுவாய்த் தட்டியுடைக்க குஞ்சுகள் கஷ்டமின்றி வெளியேவரும்.

குஞ்சுபொரித்த இரண்டு தினங்களுக்கெல்லாம் குஞ்சுகளைத் தாய்ப்பறவையினின்றும் பிரித்து மந்தையாக புல் பூண்டுகளை மேய்ந்து தின்னுவதற்காகக் கொண்டுபோய்ப் பழக்கவேண்டும். குஞ்சுகளைப் பழக்குகிறவனுடைய குரலை அவை சீக்கிரத்தில் உணர்ந்துகொண்டு, அவன் கூப்பிட்டவுடன் அவைகளின் தாய்ப்பறவைகளின் பின் செல்வதுபோலவே அவனைத் தொடர்ந்து போகின்றன. மேற்கூறியவாறு குஞ்சுகளை யிழந்த பெரிய குருவிகள் பதினைந்துநாள் கடந்தபிறகு மறுபடியும் புதியதோர் வளை தோண்டிக்கொண்டு மறுபடியும் முட்டையிடத் தலைப்படும். தீக்குருவிக் குஞ்சுகளை இராக்காலங்களில் ஒரு பெரிய பெட்டியில் விட்டுவைக்கவேண்டும். அந்தப் பெட்டியில் சுத்தமான மணலைப் போட்டு வைப்பதுடன் அதைத் துணியால்மூடியும்வைக்கவேண்டும்.

குஞ்சுகள் மிகச் சிறியவையா யிருக்கும்பொழுது அவைகளை அதிகநேரம் பெட்டியில் போட்டுவைக்கக் கூடாது. அதிக உஷ்ணமாயிருக்கும் சமயங்களில் பெட்டி

யைக் காற்றுமுகமாய் வைத்திருக்கவேண்டும். மூன்றுமாத மானபிறகு குஞ்சுகளைத் தரையில் கிடந்து தூங்கவிடலாம். ஆறுமாத மாய்விட்டால் அவை பெரிய பக்ஷிகளைப்போல் பலமுள்ளவையும் சுறுசுறுப்புள்ளவையு மாகிவிடும். பிறந்து ஏழுமாதமாவது ஆனபிறகுதான் அவைகளின் சிறகுகள் வெட்டக்கூடிய தன்மையையடையும். முதல்தடவை சிறகுகள் அதிகமாய்க் கிடைக்கிறதில்லை யாகையால் ஒரு குஞ்சின் முதற் சிறகுகள் பன்னிரண்டு ஷில்லிங்குக்குமேல் விற்பனையாவதில்லையாம்.

திருப்பூரில் கால்நடைகளின், மட்டக் குதிரைகளின் காட்சி.

கோயம்புத்தூர் ஜில்லா விவசாய சங்கத்தாரின் ஏற்பாடுகளின்பேரில் திருப்பூரில் கால்நடைகளின் மட்டக்குதிரைகளின் வருஷாந்தக் காட்சி சென்ற ஜூன்மாதம் 8-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. அதிக நேர்த்தியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ரிவினியூ போர்ட் மெம்பராகிய கனம்பொருந்திய பக்லீ துரையவர்கள் முக்கியமாய் இந்தக் காட்சியைத்திறக்கவந்திருந்தார்கள். ஜில்லா கலெக்டராகிய ஹெமிங்குவே துரையானவர் பக்லீ துரையை இக்காட்சியைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டபோது, அடியில் வருமாறு கூறினர்.

"இவ்வேழாவதான திருப்பூர் காட்சியைப்பற்றி கனம்பொருந்திய பக்லீ துரையவர்கள் அபிப்பிராய மெப்படியோ எனக்குத் தெரியாதாகிலும், இப்படிப்பட்ட காட்சிகளையும் பயிர்வழி கருவிகள் தானியங்கள் முதலானவற்றின் காட்சிகளையும் அடிக்கடி ஏற்படுத்துவதால் தேசத்துக்கு நன்மையுண்டாகுமென்று நான் உறுதியாய் நம்புகிறேன். இக்காட்சிகளை வைப்பதில் நம்முடைய கருத்து மூவ்வகையுள்ளது. முதலாவது நம்முடைய குடியானவர்கள் ஆடு, மாடு, குதிரைகளை நன்றாய்ப் போஷித்து அவைகளுக்கு அதிக விலைகள் பெறவேண்டுமென்பது. வெளிதேசத்தார் வந்து அதிக விலையைக் கொடுத்து மாடு குதிரை முதலானவைகளைக் கொண்டுபோவதினால் நம் தேசத்து தனம் அதிகமாகும். இதைவிட முக்கியமான கருத்தாவது இவ்விடத்திய மாடுகளை ஜனங்கள் சீர்ப்படுத்தி அவைகளின் சௌக்கியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்பது. மூன்றாவது கருத்து, விவசாயத்தைப் பற்றியும் கால்நடைகளின் ஜாதியை விருத்திசெய்வதைப் பற்றியும் ஜனங்களுக்குப் போதிப்பது. ஆதியில் இக்காட்சி 1896-ம் வருஷத்தில் மட்டக்குதிரைகளின் காட்சியாக ஆரம்பிக்கப்பட்டு யாவோ சில காரணங்களால் 1903-ம் வருஷத்தில் நின்றுவிட்டது. 1906-ம் வருஷத்தில் ஜில்லா விவசாய சங்கங்கள் ஏற்பட்டன. இதர ஜில்லாவில் அநேக ஜனங்களைப்போல் இந்த ஜில்லா ஜனங்களும்விவசாயத்தைவிருத்திசெய்யவேண்டுமென மிக ஆவல்கொண்டிருந்தார்கள்; ஆனால் எப்படி விருத்தி செய்கிறதென்று அறியாமலிருந்தார்கள். பிறகு ஆதியில் நடந்து வந்த காட்சியை யநுசரித்து காட்சிகளை ஏற்படுத்த முதலிட்டு இதுவரையிலும் நடத்தி வருகிறார்கள். நம்முடைய ஜில்லாவில் நல்ல மாடுகளுளவென்பதற்குச் சந்தேகமில்லை. மேலும், சமீபத்திலேயே பாளையங்கோட்டை மாடுகளை வளர்க்கும் சாலை இருக்கின்றது. ஆனதால், நேர்த்தியான ஜாதி மாடுகளை இந்த ஜில்லாவில் சுலபமாய் வளர்க்கக்கூடும். விவசாயத்தைக் குறித்தும், மாடுகளின் விருத்தியைக் குறித்தும், சுதேச கைத்தொழில்களைக் குறித்தும் அடிக்கடி குடியானவர்களுக்குப் பிரசங்கம்செய்து அவர்களுடைய புத்தியை அதிகரிப்பது நம்முடைய கடமை."

ஹெமிங்குவே துரை மேற்கண்டபடி சொன்னபிறகு, கனம்பொருந்திய பக்லீ துரையவர்கள் இக்காட்சியைத் திறக்கும்போது சொன்னதாவது: "திருப்பூர் காட்சி தென்னிந்தியா முழுமையும் பிரசித்தியடைந்திருக்கிறது. அநேக வருஷங்களாய் இக்காட்சியை நான் காணவேண்டுமென்கிற ஆவல்கொண்டிருந்தேன். இப்பொழுது இந்தக் காட்சியைக் கண்டு அதிக சந்தோஷமடைகிறேன். ரிவினியூ போர்ட்டு மெம்பர் உத்தியோகத்தில் நான் பிரவேசித்தபிறகு நான் பார்த்த முதல் விவசாயக்காட்சி இதுதான். இதுமுதல் திருப்பூர் காட்சியை நான் கிரமமாக காண வருவேனென்று கோருகிறேன். ஜில்லா விவசாய சங்கத்தார் இக்காட்சியை என்னைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு நான் அவர்களுக்கு அநேக வந்தனம் செலுத்த வேண்டியவனாக இருக்கிறேன். அதினால் அவர்கள் என்னை மிகக் கௌரவிப்பதாக நான் மதிக்கின்றேன். பல ஜில்லாக்களில் ஆரம்பித்திருந்த சங்கங்கள் விருத்தியடையாமல்போன காரணமாவது அவைகளை முதலில் ஏற்படுத்தினவர்களுக்கு விவசாய விஷயத்தில் போதுமான சிரத்தையும் ஊக்கமும் இல்லாமையே. அப்படிக்கன்றி இந்த ஜில்லாவில் ஆதியிலேயே காட்சி சங்கங்க ளேற்பட்டு செய்யவேண்டியிருந்த வேலைக ளநேகமிருந்தமையால், இவ்விடத்தில் இச்சங்கம் விருத்தியடைய இடமுண்டாகியிருந்தது. கவர்ன்மெண்டில் ஏற்பட்டிருக்கும் விவசாய டிபார்ட்மெண்டாருக்கு இச்சங்கத்தார் தம்மாலியன்ற உதவி செய்வார்களென்று கோருகிறேன்."

பக்லீ துரையவர்கள் பேசினபிறகு, டி. ஏ. இராமலிங்க செட்டியாரென்பவர் அவருக்கு வந்தனம் செலுத்தி, மாட்டுக்காட்சிகளை வைப்பதினாலுள்ள அநுகூலங்களைப் பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார். இவ்வூரில் ரதவுத்சவமொன்று அப்போது நடந்ததினாலும் சுற்றுப்பக்கத்து ஜனங்கள் அநேகர் வந்திருந்தார்கள்.

மாம்ஸ பக்ஷணம்; அதின் கேடுகள்.

சென்ற மார்ச்சு மாதத்தில் இங்கிலாந்து சதாரோக்கிய சங்கத்தார் கல்கத்தாவில் காலேஜ் ஸ்குபரென்னுமிடத்தில் ஆரோக்கியத்தைப்பற்றி பிரசங்கித்தார்கள். அப்பொழுது பி. ஸி. போலே என்பவர் இறைச்சி புசிப்பதைப்பற்றி அடியில் வருமாறு கூறி இருக்கின்றனர்.

"நல்ல ஆரோக்கியத்தை அனுபவித்து பலமுள்ளவர்களாயிருந்த சமூகங்களெத்தனையோ இறைச்சித்தின்ன ஆரம்பித்து தங்கள் பலத்தையும் ஆரோக்கியத்தையும் இழந்தனவென்பதற்குச் சந்தேகமேயில்லை. மரக்கறி பதார்த்தங்களைப் புசித்து எத்தனையோ ஜாதி ஜனங்கள் சீர்ப்பட்டனர். பிரான்சு, இதலி, சுவிட்ஜர்லாண்டு தேசங்களில் பாடுபடுகிறவர்கள் விசேஷமாய் இறைச்சி உபயோகிக்கமாட்டார்கள். ஆனாலுமவர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாயும் பலமுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். மேலும் அயர்லாண்டிலும், ஸ்காத்லாண்டு வடபாகத்திலும் மரக்கறிகளே முக்கியமான ஆகாரம். அவ்விடங்களில் உருளைக்கிழங்கும், பாலும், வெண்ணெயும்தான் விசேஷமாய் உபயோகிப்பார்கள்.

நான் என் வாழ்நாட்களி லதிகபாகத்தைக் கழித்த பிராந்தியத்தில், உலகத்தில் பால் ஏடு முதலியவற்றை சப்ளைசெய்யும் எல்லா கிருகங்களிலும் சிரேஷ்டமானவைகளுள. அவைகள் டெயிரீகள் என்னப்படும். விண்சர் டெயிரீகளிருக்கும் தேசமெல்லாம் தெம்ஸ்நதி ஜலம் பாயப்பட்டு, பயிரிடப்பட்டு, புல்லினால் மூடப்பட்டிருக்கும். அவ்விடத்திய பசுக்கள் அதிக சிரத்தையுடன் போஷிக்கப்படுகின்றன. அவ்வளவு அக்கறையுடன் வேறெவ்விடத்திலும் பசுமாடுகளைக் காப்பது காணுதலரிது. அப்படியிருந்தும் அம்மாடுகளுக் கெப்பொழுதும் நோய்தான். ஆனதால் இறைச்சியுண்பது எப்பொழுதும் அபாயமென்று ஐந்து தத்துவ சாஸ்திரிகள் ரூபித்திருக்கிறார்கள்.

ஜந்துக்களைக் கொன்றபோது, அவைகளின் மூச்சுவிடும் பைகளிலும், மூத்திர பிண்டங்களிலும், தோலிலும் உள்ள கெட்ட காற்று கெட்ட வஸ்துக்கள் போகும் நாடிகள் முதலான கால்கள் தூன்றிப்போகும். இரத்தக்கால்கள் கெட்ட வஸ்துக்களைக் கொண்டு போவது நின்றுவிடும். இதுமுதலான காரணங்களினால் இறைச்சி அவ்வளவு சுத்தமாயிருக்காது. ஆகையால் அதெப்படி மனிதனுக்குத் தகுந்த ஆகாரமாகும்? கடைகளில் தொங்கப்போட்டிருக்கும் இறைச்சியைப் பார்க்க மனதுக் கெவ்வளவு கஷ்டமாயிருக்கும்? அதுவே மரக்கறிகள் கனிகள் விற்கும் கடைகளைப் பார்க்க அதிக சந்தோஷமாயிருக்குமல்லவா? அவைகளைப் புசித்தால் நமக்கு மிக ஆரோக்கியமுண்டாகும். சூரிய பகவான் அவைகளை நமக்காக பூதேவி மூலமாய் அநுக்கிரயித்து அவைகளால் நம் மனதை அபகரிக்க, அவைகளுக்கு அழகான உருவமும் நிறமும் அளித்திருக்கிறார் போலும். இச்சமயத்தில் பைபிலிலிருக்கும் வாக்கியமொன்று எனக்கு ஞாபகம் வருகின்றது. "கடவுள் புல்லை ஜந்துக்களுக்காகவும், மரங்களை மானிடருக்காகவும் சிருஷ்டித்தார்.

இப்படி பூமியினிடமே ஆகாரத்தை மனிதனுக்கு அமைத்திருக்கிறார்." உலகத்தில் மனிதனுடைய ஆகாரத்துக்கு பூமியிலிருக்கும் வஸ்துக்களே முக்கியமான ஆதாரமாம். மரங்கள் நமக்கு எப்படி உபயோகமாகின்றனவோ அதை யோசிக்க மிக ஆச்சரியமாயிருக்கும். வேர்களால் ஆகாரவஸ்துக்களையும், இலைகளால் பிராணவாயுவையும் உட்கொண்டு, அவை நமக்கு வேண்டிய ஆகாரத்தை தயார்செய்கின்றன. இதுதான் நிஜமாய் மனிதன் புசிக்கவேண்டிய சுபாவசித்தமான அன்னம். அவன் ஜீவித்திருக்கவேண்டிய பதார்த்தங்களெல்லாம் மரக்கறிகளிலிருக்கின்றன. இவைகளைவிட உசிதமானவை இறைச்சியிலுமில்லை. மரக்கறி புசிப்பவர் எதின் உயிரையும் தம் ஆகாரத்துக்காக அபகரிக்கிறதில்லை. அவைகளில் ஜீவனிருக்கும்போதே அவைகளைப் புசிப்பார். நெல்லையாகிலும் விதைகளையாகிலும் நிலத்தில் புதைத்தால் முளையுண்டாகும். ஆனதால் அவைகளில் பிராணனுண்டு, மனிதன் அவைகளைப் பிராணனுடன் புசிப்பான். இறைச்சி புசிப்பவ ரப்படியன்று. கெட்ட ஆகாரத்தைப் புசிப்பதினால் மனது சுவாதீனம் தப்பிப்போய் கெட்ட கோரிக்கைகள் விருத்தியாய் ஞான உருப்புகள் நாளுக்குநாள் தம் பலத்தை இழந்துவிடுமென சாஸ்திரத்தால் தெரியவருகின்றது. ஆகையால் நாம் மேலான பரிசுத்தமான ஆகாரத்தையே புசிக்கவேண்டும்."

கிருஷ்ணா பத்திரிகை.

ஜந்துக்களின் ஆத்ம தத்துவம்.

ஜந்துக்களின் சுபாவமும் ஆத்ம தத்துவமும் அறியாமையினாலேயே உலகத்தில் அநேகர் ஜந்துக்களைக் கொடுமையுடன் நடத்திவருகிறார்கள். தம் இஷ்டம்போல் ஜந்துக்கள் நடவாதபோதெல்லாம், அவை ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு அல்லது தம் எஜமானர்களுக்கு இணங்கி நடக்கக்கூடாதென்று கருதி அப்படி நடப்பதாக பிசகான அபிப்பிராயத்தை ஜனங்கள் கொண்டு அவைகளுக்குக் கடினசிக்ஷை விதிக்கிறார்கள். ஆனதால் ஜந்துக்களின் சுபாவமும் தத்துவமும் ஜனங்களுக்குப் போதித்தால், அவர்கள் ஜந்துக்களின் சுகதுக்கங்களையும் அவற்றின் காரணங்களையுமறிந்து அவைகளைப்பச்சாதாபத்துடன் நன்றாய் நடத்துவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

பிரான்ஸ் தேசத்தில் பாரிஸ் நகரத்தினருகில் ஜந்துக்களின் ஆத்ம தத்துவத்தை அறியும்பொருட்டு ஏற்படுத்திய ஓர் விசித்திரமான பாடசாலையுண்டு. இந்த பாடசாலையைச்சேர்ந்த எத்தனையோ தோட்டங்களும், மைதானங்களும், மச்சங்கள் நிறைந்திருக்கும் தடாகங்களும் இருக்கின்றன. இன்னும் அநேக கட்டடங்களும், குதிரைசாலைகளும், அச்வவித்தை கலாசாலைகளும் பசுசாலைகளும், புறாக்களின் கூடுகளுமுண்டு.

ஜீவஜந்துக்களின் சுபாவத்தைக் கண்டறிய பிரெஞ்சுக்காரர்களுக்கு மிக ஆவல். ஆனதால் அவர்கள் அந்த பாடசாலையில் நீரில் முழுகி பல மணிநேரம் இருப்பதற்குக் கூடிய யந்திரமொன்றை அவர்கள் அவ்விடத்தில் நிலைநிறுத்தியிருக்கிறார்கள். இந்த யந்திரத்தின் சகாயத்தால் அந்த சாஸ்திரத்தில் ஆவலுள்ளவர்கள் தடாகத்தினுள்ளிறங்கி மச்சங்களுடன் நெடுநேரம் ஆடிக்கொண்டிருந்து அவற்றின் நிஜமான குணங்களைக் கண்டுபிடித்துவருகிறார்கள். இன்னொரு விசித்திரமுண்டு. மரக்கிளைகளின் மத்தியில் நிற்கவிடங்கள் ஏற்படுத்திக்கொண்டு, இராத்திரி காலங்களில் விளக்குகளை வைத்துக்கொண்டு அவ்விடங்களிலுட்கார்ந்து சிலர் ஆந்தைகள், துரிஞ்சல்கள் முதலான இரவில் நடமாடும் பக்ஷிகளின் சுபாவகுணங்களைக் கவனித்துவருகிறார்கள்.

சில ஜந்துக்கள் நீரை நேரில் பார்க்காவிட்டாலும், நீர் எவ்விடத்திலிருக்கிறதும் எவ்வளவு தூரத்திலிருக்கிறதும் கண்டறியக்கூடுமென்று மேற்சொல்லிய பாடசாலை மாணுக்கர் அறிந்திருக்கிறார்களென எட்வின டாரிஸ்துரை சொல்லுகிறார். பசுக்கள் ஆடுகள் இவற்றின் நடத்தையைக் கவனித்துவந்த ஓர் ஆஸ்திரேலியா தேசத்தவர் இதனடியில் கூறும் விசித்திரத்தைக் கண்டறிந்தனர். ஜலமற்ற பூமியில் பிரயாணம் போய்க்கொண்டிருந்த சில ஜந்துக்கள் திடீரென தம்மூக்குகளைத் தூக்கிக்கொண்டு வழக்கமான வழியைவிட்டு பக்கவழியாய் இரண்டொரு மைல் தூரமாய் தம் எஜமானருக்கடங்காமல் ஓடிப்போய் ஓர் ஜலமிருக்கும் குளத்தினருகில் நின்றன.

பிரான்ஸ் தேசத்திலோர்காலத்தில் ஒருவர் நீரெலி ஒன்றை கண்களைக்கட்டி நெடுநேரம் சுழற்றிச் சுற்றி, நன்றாய் அதின் பிரஞ்ஞை தப்பிப்போயிருக்குமென நிச்சயித்துக்கொண்டபிறகு அதை விட்டுவிட்டார். அப்பொழுது அவ்வெலி பலநூறு கஜங்கள் தூரத்திலுள்ள குளத்துக்கு ஒரு நிமிஷத்தில் போய்ச் சேர்ந்தது. தவளைகள் முதலியவற்றைப் பிடித்து செய்திருக்கும் பரிக்ஷைகள் மிக ஆச்சரியமானவைகளாயிருக்கின்றன. இவைகளை 3, 4 மைல் தூரத்தில் கொண்டுபோய் விட்டாலும், சில விநாடிகளில் அவை தாம் பிறந்து வளர்ந்த ஜலத்தைப் போய்ச் சேர்ந்தன. கண்களில்லாத தவளைகளும் அப்படிப்பட்ட குணமுள்ளனவாகவே இருக்கின்றன.

மேற்கண்ட பாடசாலையில் பக்ஷிகளின் பார்வையைப்பற்றியும் பரிசீலனை நடந்துவருகிறது. பறவைகள் எவ்வளவு உயரம் வரையில் பறக்கக்கூடுமென்பதையும், அப்படி ஆகாயத்தில் பறக்கும்பொழுது எவ்வளவு தூரவரையில் அவை பார்க்கக்கூடுமென்பதையும் அந்தப் பாடசாலை மாணுக்கர் ஆராய்ந்து கணக்கிட்டு நிச்சயிக்கிறார்கள். 800 கஜம் உயரம் பறக்கக்கூடிய பறவை 60 மைல் தூரவரையில் பார்க்கக்கூடுமென்றும் அத்தூரத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாய்க் காணுமென்றும் சொல்லுகிறார்கள். ஓர் ஆட்டுக்குட்டியின் உடலை ஒரு கொம்பில் மாட்டிவைத்தாலும், கூளிப்பறவை அதைக் கண்டுகொண்டு எடுத்துக்கொண்டு போய்விடும். ஒவ்வொரு ஜந்துவின் குணாதிசயங்களை நாம் கவனித்துக் கண்டுகொண்டால், அவைகளிடத்தில் நாம் பட்சமுடன் நடந்துகொள்ள அநுகூலமாயிருக்கும்.

கிருஷ்ணா பத்திரிகை.

குதிரைகளின் ஆயுசு.

குதிரைகளைச் சரியாகப் பாதுகாத்து வளர்ப்போமாகில் அவை இருபது வருடங்களுக்கு அதிகமாகவே ஜீவித்திருக்கும். சரியாகப் பாதுகாவாமல் அநாதரணை செய்வதால் அநேகம் குதிரைகள் அதிசீக்கிரத்தில் உடல் தளர்ந்து உபயோகமில்லாதவைகளாகின்றன. மேற்கில் காரன்வால் என்னும் தேசத்தில் ஜீவகாருண்யமுள்ள ஒரு பாக்கியசாலி ஒரு குதிரையை வளர்த்துவந்தார். அதற்கு வயது இருபத்து மூன்று வருடமானாலும் இன்னும் அதிக இளங்குதிரைகளோடு கூட வண்டிகளில் பூட்டி ஓட்டப்பட்டு மலையைப்போல் மேடாகவிருக்கும் வழிகளிலும், பத்து மைல் தூரத்திலிருக்கும் பட்டணத்திற்குக் கொஞ்சமேனும் களைப்பில்லாமல் போகவரச் சக்தியுண்டாயிருக்கிறது.

இப்பாக்கியசாலி இதற்குமுன் ஒரு குதிரையை வளர்த்துவந்தார். அது சாகும்பொழுது அதற்கு வயது பதின்மூன்று வருடம். அது மரணமடைய ஒரு வருடத்திற்கு முன்பும் அது கஷ்டப்படுவதற்குச் சக்தியுள்ளதாயிருந்தது. சாகிறதற்குச் சில நாட்களுக்கு முன் அதை வண்டியில் போடுவதை நிறுத்திவிட்டுச் சுகமான ஓரிடத்தில் விடப்பட்டு அவ்விடத்தில் பச்சையாக வளர்ந்திருக்கும் புல்லை மேய்ந்துகொண்டு விநோதமாகத் திரிந்துகொண்டு காலத்தைக் கழித்துவந்தது. பின்பு அதிகமான கஷ்டமொன்றுமில்லாமல் சுகமாகத் தன் ஜீவிதகாலத்தை முடிவுசெய்துகொண்டது.

அருட்செல்வம்.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம், பூரியார் கண்ணு முள.
அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொரு
ளில்லார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு.
அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை
யிருள்சேர்ந்த, வின்னா வுலகம் புகல்.

(திருவள்ளுவநாயனார் குறள்.)

அருளாவது:—தொடர்பு பற்றாமல் இயல்பாக எல்லா உயிர்களின்மேலும் செலுத்துவதாகிய கருணையேயாம். பொருளால் வருஞ் செல்வங்கள் கீழ்மக்களிடத்தும் உண்டாயிருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது நாம் ஜீவராசிகளிடம் செலுத்தும் அருளேயாம். மேலும் பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லாதமைப்போல உயிர்கள்மேல் அருளில்லாதவர்க்கு முத்தியுலகத்தின்பம் கிடைத்தலில்லை. அருளாலுருகுகின்ற நெஞ்சினையுடையவர் இருள் நிறைந்த நரகத்தில் புகுதலில்லை.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **குதிரைகளையும் மாடுகளையும் காப்பாற்றும் கம்பனி.**—இதில் சேர்ந்தவர்களின் குதிரைகளையும் மாடுகளையும் கொலையினின்றும் ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றி, அவர்களுக்கு இதர கஷ்டங்களில் உதவிபுரிய, 'புரோவின்ஷியல் லைப்ஹார்ஸ் அண்டு கியாட்டில் இன்ஷியூரன்ஸ் லிமிடெட் கம்பனி' என்று கல்கத்தா பௌ பஜார் 191—வது நெம்பர் கட்டடத்தில் ஓர் பண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதினால் குடியானவர்களுக்கு விசேஷ அநுகூல முண்டாகும். இப்படிப்பட்ட பண்டுகள் அநேகம் ஏற்பட வேண்டுமென்று கோருகிறோம்.

2. **பொன் மீன்.**—ஐரோப்பா கண்டத்தில் பாத் என்னும் நகரத்தில் 'உரோமன் பாத்ஸ்' என்னும் ஸ்நானகட்டடங்களிலிருக்கும் பொன்மீன்கள் தமக்கு ஆகாரம்வேண்டுமென்று தெரிவிக்க ஒரு மணியை யாட்டுகின்றனவாம். கரையிலிருந்து கம்பிகளைக் கட்டி மணியொன்றை நீரில் மிதக்க விட்டிருக்கிறது. அம்மீன் தமக்கு ஆகாரம் வேண்டியபோது அக்கம்பிகளையசைக்கமணியடிக்கிறது. அதைக்கேட்டு அங்குள்ளவர்கள் எரும்பின் முட்டைகளை நீரில் போடுவார்கள். இதென்ன ஆச்சரியம்!

3. **விநோதமான ஓர் விவகாரம்.**—இங்கிலாந்து டாட்டன்ஹாம் போலீஸ் கோர்ட்டில் ஆலிஸ் எவென்ஸ் என்னும் துரைசானி பிட்டன் என்னும் துரையின்மீது ஓர் கிளிப்பிள்ளைக்காக வழக்கிட்டாள். எவென்ஸ் துரைசானி வளர்த்துவந்த பாப்பி என்னு மோர் கிளி அதின் சிறகுகளை வெட்டிவிட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்த சம்பாஷணையைக்கேட்டு தன் கூண்டிலிருந்து ஓடிப்போய் மறைந்துவிட்டது. எட்டுமாதமான பிறகு எவென்ஸ் துரைசானியின் சிறுமகன் ஓர்நாள் ஓடிவந்து பாப்பியை பிட்டன்துரையின் கடை சாளரத்தில் தான் பார்த்ததாகத் தன் தாய்தந்தையருடன் சொல்லி, அவர்களை அக்கடைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவ்விடமிருந்த கிளிப்பிள்ளையை அவர்களுக்குக் காட்டினான். எவென்ஸ்துரை அதைப் பாப்பி என்று கூப்பிட்டவுடன் அது கீச்செனக் கூவி அவரை முத்தமிட்டது. பிட்டன் துரையோ அப்பறவையை கேவலமான ஸ்திதியிலோர் பையனிடத்தில் தான் வாங்கி வெகு ஆசையுடன் வளர்த்து வந்ததாகச் சொன்னார். போலீஸ் கோர்ட்டிலும் எவென்ஸ்துரை அக்கிளியை பேரிட்டுக்கூப்பிட்டபொழுது அது கீச்செனக்கூவி அவரை முத்தமிட்டதாம். ஆகையால், அக்கோர்ட்டு நியாயாதிபதி பிட்டன்துரை அக்கிளியை எவென்ஸ் துரையினிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும், பிட்டன்துரை அதை ஜாக்கிரதையாய் வளர்த்துவந்ததற்காக அவருக்கு எவென்ஸ் துரை 15 ஷில்லிங்கு தரவேண்டுமென்றும் தீர்ப்புசெய்தார்.

4. **நீர்க்கோழிகள்.** — இங்கிலாந்தில் கம்பர்லண்டு கவுண்டிசபையார் இவ்விஷயத்தில் செய்த ஆராய்ச்சியில் விசேஷமாய்ப் பயிரிடும் குடித்தனக்காரர்களுக்கும், மச்ச வர்த்தகர்களுக்கும் நீர்க்கோழிகளால் அநுகூலமே தவிர கெடுதியில்லை என்று பல தத்துவசாஸ்திரிகளால் அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கிறது.

5. **மாட்டுக்களவு.** — சில நாட்களுக்கு முன் சைதாப்பேட்டையிலும் பரங்கிமலையிலும் களவுபோன மாடுகளின் விஷயமாய் போலீஸார் ஒருவரைப் பிடித்தபோது, அவர் தோட்டத்தில் சுமார் இருபது மாடுகளின் களேபரங்கள் புதைத்திருந்தவை வெளிப்பட்டனவென்றும், அவர் தோல்களுக்காகவே மாடுகளைக் களவுசெய்து கொன்றுவந்ததாகவும் தெரியவருகிறது. தவிர ஜோலார்பேட்டை சுற்றுபக்கத்தில் மாட்டின் தோல்களுக்காகவே, மாடுகளை உயிருடன் இருக்கும் பொழுதே தோலை யுரித்துவிடுகிறார்களாம். பூனைகாஞ்சொறி என்னும் பூண்டை மாட்டினுடம்புக்குத் தடவ அதின் தோல் உரியும் பொழுது அது அசையாது நிற்கிறதாம். காலையில் வெயிலேற தோலில்லாத மாடு செத்து விழுந்துவிடும். இப்படிச் செய்யும் பாவிகளை என்னதான் செய்யலாம்!

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1914.

A CALL TO HORSE-OWNERS

Ten years ago I was a colt
Unbridled at my mother's side
A blithesome creature, free as air,
A thing of beauty, grace and pride.

Three years sped by, no longer free,
I laboured for a master's gain;
A willing drudge I drew the plough
And sighed for distant joys in vain.

Yet three years more, and now I spent
My days upon a stony road,
Ill-used, unkempt, but strong to bear
The bitter burden of my load.

Three years again, with flagging steps
I paced the towpath's dreary length,
My shoulders chafed, my withers wrung,
A weary brute with failing strength.

To-day upon a foreign shore,
I close the chapter of my life,
Worn out, diseased, yet still to feel
The last keen torment of the knife.

H. O.

Hail England! Those about to die
Salute thee! Though we wonder why
A country rich, humane and great
Condemns its slaves to such a fate.
No other nation can provide
This sight, which surely hurts thy pride:

Watch the exiles hobble past,
Uncomplaining to the last—
Racer, Cab-horse, spent, unclean
Mare and stallion, grey and roan,
Shire and Suffolk, skin and bone,
Feeble, footsore—on we crawl,
Helpless, friendless, one and all,
Starving, toil worn, scant of breath,
Joyless life to painful death.

O Masters, what a cavalcade!
O, England, what a sorry trade!
Land of Horse-lovers and Fair Play,
Hail and farewell! We die to-day.

W. K. C.

[*Reprinted from 'The Animal World.'*]

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
5 - NOV 1914
MADRAS

TIT-BITS OF ANIMAL LIFE.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பத்திராதிபரின் விஞ்ஞாபனம்.

1824-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்து லண்டன் நகரத்தில் ஜீவ ஹிம்சை நிவாரண ராஜ சங்க மொன்று ஸ்தாபிக்கப்பட்டு வாயில்லா ஜந்துக்களுக்கு அதிக உபகாரமா யிருந்துவருகிறது. அச்சங்கத்துக்கு மஹா மஹிமையுள்ள நம் சக்ரவர்த்தி யவர்களும், அவருடைய மாதாவும், அவருடைய தேவியும் பரிபாலகர்களாக விருக்கிறார்கள். மேன்மைதங்கிய டியூக் ஆவ் டெக்கு பிரபு அவர்கள் அக்ராசனாதிபதியா யிருக்கிறார். அச்சங்கத்து நிபந்தனைகளை யனுசரித்து, அநேக தேசங்களில் அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டு, சென்னபட்டணத்திலும் 1877-ம் வருஷத்தில் இந்த ஜீவ ஹிம்சை நிவாரண சங்க மேற்பட்டது. 1900-ம் ஆண்டுவரையில் இச்சங்கத்துக்குச் சம்பந்தமான காரியமெல்லாம் வாயில்லா ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களை சிக்ஷைக்குட்படுத்துவது மாத்திரமேயென் றெல்லோரும் நினைத்திருந்தார்கள். அவ்வருஷ முடிவில், இச்சங்கத்துக் காரிய நிர்வாஹகர்கள் ஜீவகாருண்யத்தை எல்லோருக்கும் பத்திரிகைகள் மூலமாகவும் போதிக்கவேண்டுமென் றபிப்பிராயம்கொண்டு அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தனர்.

2. அந்த அபிப்பிராயத்தை யனுசரித்து ஜீவ ஹிம்சை செய்பவர்க்கு விவேகமும், ஜீவகாருண்யமும் உண்டாக்கும் சமாசாரங்க ளடங்கிய **"ஜந்து வர்த்தமான ஸாரம்"** என்னும் ஒரு பத்திரிகையை, 1900-ம் வருஷமுதல் தமிழிலும், 1903-ம் வருஷந் தொடங்கித் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு பாஷைகளிலும், வருஷத்துக்கு நான்கு முறை பிரசுரஞ்செய்து வருகின்றனர். பலவிதமாயுள்ள ஜீவராசிகளும் நம்மைப் போலவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை, அவைகளால் நமக்கு அநேகவிதமான உபயோகங்க ளுண்டு, ஆகையால் நாம் அவைகளினிடத்தில் பட்சமுட னிருக்கவேண்டும், அவைகளுக் கெல்லாவிதத்திலும் சௌக்கியத்தை யுண்டாக்கவேண்டும் என்பதையும், இன்னும் அநேக நீதிகளையும்பற்றி ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்பதே இந்தப் பத்திராதிபரின் கருத்து.

3. இப்படி ஜனங்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்பதற்காகப் பிரதி வருஷமும் ஜந்து விநோதக் காட்சியொன்று நடத்தப்படுகிறது. மேலும், இச்சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டு, வாயில்லா ஜந்துக்களின் வைத்தியசாலையும், நாய்களுக்கோர் ஆசிரயமும், பஞ்சரப்போல் என்னும் சக்தியற்ற கிழ ஜந்துக்களின் ஆசிரயமொன்றும் ஏற்பட்டுப் பரிபாலித்து வரப்படுகின்றன. சங்கத்துக் காரியங்களும் அவற்றிற் குண்டான செலவுகளும் வருஷத்துக்கு வருஷம் தர்மசாலைகள் விருத்தியடைவதால் விசேஷமா யதிகரித்து வருகின்றன. இவற்றிற்காகத் தர்மாத்மாக்களான தனவான்க ளநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடி பணம் முதலிய உதவிகளைப் புரிந்துவந்தும், அவை போதாமல் செலவுகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் அத்தரும காரியங்கள் யாதொரு குறைவின்றி நடப்பதற்காக எல்லோரும் அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி உதவி செய்யவேண்டுமென்று இதன் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறது.

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XIV.] **November, 1914**-௵ நவம்பர்௴. [இலக்கம் 4.

News and Notes

THE MADRAS S.P.C.A.

1. *The Committee.*—The Hon'ble Mr. P. S. Sivaswami Iyer, C.S.I., C.I.E., B.A., B.L., and the Hon'ble Mr. R. C. C. Carr, I.C.S., have consented to become the Vice-Presidents of the Society. Sir L. C. Miller, Kt., I.C.S., who was one of the Vice-Presidents of the Society for a long time has resigned the office of Vice-President on account of his having accepted the post of Chief Judge of Mysore. Messrs. Mahomed Sadulla Badsha Sahib, Colla Venkataraghava Chetty and Badridoss Brijarathandoss Daga have consented to be members of the Committee of the Society.

2. *Young healthy animals in the Pinjrapole.*—Mr. L. M. Wynch, C.I.E., I.C.S., who was the Chairman of the Pinjrapole Sub-Committee, suggested to that Committee that healthy young animals which are sent to the Pinjrapole may be given to respectable people with or without payment, on condition of their returning them to the Pinjrapole when they grow too old to be of any use, as he is of opinion that such animals should be used in the natural way instead of being subjected to a wretched existence which means cruelty to them. This was discussed at a meeting of the Committee of the Society and it was resolved to ascertain the practice adopted in Bombay and Calcutta Pinjrapoles in respect of this subject and also to request the Pinjrapole Sub-Committee to see their way to give effect to the suggestion of Mr. L. M. Wynch. On a reference made to the Pinjrapoles of Calcutta and Bombay, it is learnt that the former never give away any animals when once they are admitted into the Pinjrapole and that generally healthy young animals are never sent to the Pinjrapole, and that the latter give away such animals to any applicant on his undertaking to feed the animal and its progeny well or to return the same or its progency back to the Pinjrapole. This subject has to be decided finally at a meeting of the Committee.

3. *The Free Dispensary.*—On the suggestion of the Honorary Secretary of the Society to start a Free Dispensary for animals the Committee resolved to start a Free Dispensary for six months as an experiment at a meeting of the Committee, dated August 1, 1913. A Free Dispensary called the 'S.P.C.A. Free Dispensary' was accordingly opened at 'Janaki Vilas', Harris Road, Komaleeswaranpet, on February 1, 1914. Mr. S. A. Padmanabha Pillay, G.B.V.C., has been appointed to be the Surgeon in charge.

The following rules have been framed for the Dispensary:—

(i) The Dispensary shall be known as the S.P.C.A. Free Dispensary.

(ii) It will be open from 7 to 10 a.m., and 3 to 5 p.m. on all days except Sunday evenings. Urgent cases will be attended to at all hours by the resident Veterinary Surgeon in charge.

(iii) All animals belonging to poor people will be treated free of charge at the Dispensary, but they must as far as possible produce a certificate either from a member of the Committee of the S.P.C.A. or the Superintendent and in case they are not able to produce such a certificate, the Veterinary Surgeon in charge will use his discretion in treating them free of charge or otherwise

(iv) Cattle belonging to all cases of people will be treated free of charge if brought to the Dispensary.

(v) In all cases, except those mentioned above, the Surgeon in charge will

make his own arrangements with the owners of the animals.

During the experimental period of six months which came to an end by July last, a number of animals were treated in the Dispensary and the Dispensary was proposed to be continued by the Committee of the Society and is working.

4. *Donations from the minor Zemindars.*—On a special appeal sent by the Honorary Secretary to the Hon'ble Mr. R. C. C. Carr, I.C.S, President of the Court of Wards, requesting him to ascertain from the wards is his charge if they would be pleased to make any contribution to the Society, certain Zemindars subscribed in all a sum of Rs. 945 to the Society which has been received. The thanks of the Committee were duly communicated to the Court and the Zemindars.

5. *Magic Lantern slides.*—The Royal S.P.C.A., London, has been doing a great deal of educational work in London and elsewhere by the exhibition of Magic Lantern slides on subjects connected with the kind treatment of animals and the Committee of the Society wish to do similar work here. Mr. Colla Venkataraghava Chetty, a member of the Committee of the Society, was kind enough to send a donation of Rs. 375 towards the cost of sixty-one Magic Lantern slides. The Chief Secretary of the R.S.P.C.A., London, has been requested to send the slides.

6. *Cruelty to a Pony.*—Mrs. G. W. Black sent a communication to the Honorary Secretary, stating that a pony belonging to Messrs. W. E. Smith & Co. was being worked in a carriage laden with heavy articles in the heat of the day while it was quite unfit for use as it had several cuts all over its body and its two knees were badly bruised and as it looked starved also. She asked for the Inspector of the Society to be sent to her to examine the animal which was purposely detained by her in her compound. The Superintendent of the Society who examined the animal was satisfied that it was a fit case for prosecution. Thereupon the driver of the animal was put up before the Egmore Bench Court and fined Rs. 10.

7. *Ill-treating a horse.*—Mr. F. L. Coles of Messrs. Beardsell & Co., brought to the notice of the Honorary Secretary, that one Mr. C. Boyton, Carriage Proprietor, Perambore, was using one of his horses without feeding him properly and that the animal was too old to be used. The owner of the animal was warned not to use the same until it was in condition again.

8. *A dog ill-treated.*—Mrs. Mark Hunter sent a communication to the Honorary Secretary stating that a dog was ill-treated in Pudupet *maidan* by being harnessed to a small cart and cruelly beaten with a heavy stick by its owner and that she handed over the man with the dog and cart to a constable who put up a case against him. When the case came on for hearing before the Egmore Bench Court Mrs. Mark Hunter appeared before the Court and gave evidence. The man was fined Rs. 5.

She further pointed out in her letter that the man was awarded a prize of Rs. 5 at the Society's previous Animal Show for his performance of dogs and monkeys and that such a thing should not be encouraged by the Society. Her letter was placed before the Committee at one of its meetings when it was resolved to bear in mind the question of giving a prize to such performers at the time of the next Animal Show.

9. *The Society's Tit-bits.*—The Honorary Secretary, S. P. C. A., Coimbatore, sent a letter stating that they were anxious to circulate literature in the schools of their district bearing on the subject of cruelty to animals, and that they found the Tit-bits sent to them very useful, and asking if this Society would be pleased to send 200 copies of the Tit-bits every time it was published and he promised to send a contribution towards the cost of printing the same. The Honorary Secretary thereupon ordered the copies to be sent and the Committee has approved of the same.

10. *Japanese Women in Public Service.*—Prevention of Cruelty to Animals Society has been newly formed in Tokyo, which is to be presided over and managed by ladies. The Japanese, as a nation are kind, but it is well-known that the lower working classes manifest the same thoughtless treatment to animals as in India. The educated Japanese are very considerate and even sentimental about pets; it is reported that they have a special cemetery for the dumb animals, and it is but natural that ladies of education and refinement should come forward to assist in the battle against cruelty to animals. We wish our Indian ladies also will be enthusiastic enough to come out in public and participate in the helpful work. There are enough educated ladies among us, and it is high time that some of them display the zeal for public weal and engage themselves in public work.

The R.S.P.C.A., London

CHAINED AND STARVED

How persons can keep dogs and wilfully neglect to supply them with food is a source of wonder to humane people, but thousands of dogs are shamefully neglected annually. Some the R.S.P.C.A. is able to assist, but its officers are not ubiquitous, and for one case brought to light a dozen pass unnoticed.

At Acton Police Court recently, a carman was summoned at the instance of the Society for having caused suffering to his dog by neglect. The animal, an Irish terrier, was chained to a box, and was, according to witnesses, 'a living skeleton.' Its owner admitted that, though he had kept the dog for years, it was only released from the chain "now and then." Its nails showed that it had been given scarcely any exercise. A fine of £5 was imposed, including costs.

At Wealdstone Petty Sessions a milkman was summoned for a similar offence.

An inspector of the R.S.P.C.A. stated that the dog, a Great Dane, was kept chained in a small shed only three feet wide by two-and-a-half feet deep. There was no bedding and no sign of food or water, and the woodwork of the door had been gnawed away in places. In the opinion of a veterinary surgeon, the animal had been cruelly starved and neglected.

The defendant was ordered to pay 15*s.* and £2-3*s.* costs.

THE OLD HORSE TRAFFIC

Threat to Shoot an R.S.P.C.A. Inspector

At the Thames Police Court, a defendant was charged before Mr. Leycester, with travelling a horse while in an unfit state, and intended for shipment abroad.

An inspector of the Royal Society for the Prevention of Cruelty to Animals stated he was on duty on Tower Hill when he saw defendant leading a bay gelding. Noting the animal was lame, he stopped the accused and examined the horse, which he found to be aged, in fair condition, very lame on the off fore-leg from an enlarged knee, also lame on the off hind-leg from a strained hip. The animal was evidently in pain, and was quite unfit to travel. He said to defendant, 'This horse is very lame,' and the latter replied, 'I am taking it over the water to go abroad.' Witness had the animal conveyed in a float to the court.

Mr Kirk, Veterinary Surgeon, corroborated the evidence of the Inspector as to the condition of the horse.

Mr. Wills, Veterinary Surgeon, gave evidence for the defence, and Mr. Leycester having inspected the horse in the Courtyard, fined defendant £5, and 22*s.* costs, or, in default, a month's imprisonment. The horse was also ordered to be destroyed, and that was done.

At West Ham Police Court, a horse dealer of Stratford was charged by an Inspector of the R.S.P.C.A. with travelling a horse whilst in an unfit state.

The officer stated that he stopped the prisoner at 7 a.m. that morning in Stratford, and on examining the animal, a bay gelding, found it was aged, in fair condition, very lame on the off fore-limb from a quitter discharging pus, and was quite unfit to travel. In reply to questions the accused said, 'I bought it to sell; to send over the water dead.'

Mr. Gillespie, the presiding Magistrate, after seeing the horse in the Courtyard, fined the prisoner £5, including costs, or one month. The fine was paid.

In connexion with the first case above, the defendant was summoned at the Thames Police Court for using threatening words towards Chief Inspector W. Rogers, the officer who had the case in hand.

As above stated, defendant was fined £5, and £1 2*s.* costs, for walking a horse whilst unfit to travel, and the animal was ordered to be destroyed. After the case was over, and when in the Courtyard, the defendant said to Inspector Rogers, 'I will blow your brains out the first chance I get,' and when outside the Court he said, 'I will get a revolver and shoot you stone dead, you——,' at the same time shaking his first in the complainant's face.

The defendant having consented to be bound over to keep the peace, Mr. Leycester told him he was a very excitable man. He would have to enter into his recognisance to keep the peace, and if he again threatened Inspector Rogers he would forfeit £20, the amount of his recognisance.

The solicitor for the defence said his client would not offend again.

கிழக் குதிரைகளின் வியாபாரம்.

இங்கிலாந்து தேசத்தில் இவ்வியாபாரத்தை நிறுத்த அநேகவிதமான முயற்சிகள் செய்தும் இது நிற்கிறவிதம் இன்னும் காணோம். இந்த வர்த்தகத்தினால் பிழைக்கும் தரகிகள் குதிரைகளின் சொந்தக்காரர்களை மோசம்செய்து, வேலைசெய்ய திறமையில்லாத கிழக்குதிரைகளை யுடனே கொன்றுவிடுவதாகச் சொல்லி சொற்ப துகைக்கு அப்படிப்பட்ட குதிரைகளை வாங்கிக்கொண்டு அவைகளை பிரான்சு முதலான ஐரோப்பா தேசங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அக்குதிரைகளை இங்கிலாந்திலேயே கொல்லும் பக்ஷத்தில் குதிரை ஒன்றுக்கு 30 ஷிலிங்கு அல்லது ரூபாய் 22–8–0 கிடைக்கும். அக்குதிரைகள் ஒவ்வொன்றுக்கு தரகிகள் 5 முதல் 10 பவுன் வரையில் அதாவது 75 முதல் 150 ரூபாய்வரையில் கொடுத்து வாங்குவார்கள். குதிரைகளின் சொந்தக்காரர்கள் அக்குதிரைகளுக்குப் பின்பு நேரிடும் கஷ்டமும் துன்பமும் அறியாமல் அவைகளை கொஞ்சம் அதிக லாபத்துக்கு அப்படி விற்றுப்போடுகிறார்கள். அக்குதிரைகளை விற்றபின்பு அவைகளைக் கஷ்டப்படுத்திக் கப்பலேற்றி வெளிதேசங்களுக் கனுப்பி அத்தேசங்களில் நெடுநாள் அவைகளை நடத்திக்கொண்டுபோய் கடைசியில் பெல்ஜியம் தேசத்துக் கசாப்புகாரரிடத்தில் கடூரமான மரணமடைய ஒப்புவைக்கும் காட்சி படங்கள் எழுதி, பார்லியமெண்டு அங்கத்தார் முன்பும், வர்த்தமான பத்திரிகைகளின் அங்கத்தார் முன்பும் வெகு பரிதாபமாய் அப்படிப்பட்ட படங்கள் காண்பிக்கப்பட்டன. கூடிய சீக்கிரத்தில் படங்களை அச்சிட்டு தேசமுழுமையும் காண்பிக்கப்பட்ட விநோத படக்காட்சி இடங்களிலெல்லாம் அவைகளைக் காட்டுவார்கள். அக்குதிரைகள் கடல் யாத்திரையிலும் பின்பு நடந்துபோவதிலும் படும் கஷ்ட துன்பங்களும் கடைசியில் கொஞ்சமாகிலும் தயவில்லாத கசாப்புகாரர்களின் முரட்டுத்தனமான கத்தி வெட்டினால் மரணமடையும் பரிதாபமும் அக்குதிரைகளின் சொந்தக்காரருக்குத் தெரியுமானால், அவர்கள் தம் சக்தியற்ற கிழக்குதிரைகளைக் கொஞ்ச அதிக லாபத்துக்காகவென்று விற்கமாட்டார்களென்று தோன்றுகிறது.

நெடுநாள் விசுவாசத்துடனுழைத்தக் குதிரைகளைக் கிழத்தனத்தில்தயையுடன்கொன்றுவிடச் சொந்தக்காரர்கள் ஏற்பாடுசெய்தும், அக்குதிரைகளைச் சொற்ப பணத்தாசையால் நடுநின்றவர்கள் துன்பப் படுத்துவதற்குத் திருஷ்டாந்தமாக இரண்டு சம்பவங்களை இதனடியில் கூறுகின்றனம். இங்கிலாந்தில் பெர்க்ஷையரென்னும் மாகாணத்தில் ஓர் மதகுருவானவர் தன்னுடைய வேலைக்குபயோகப்படாத கிழக்குதிரையின்மேல் தயவுகொண்டு அதை சுலபமாய் சுட்டுவிடும்படி தன் வண்டிக்காரனுக்குக் கட்டளையிட்டார். அக்குதிரையைச் சுடும் காட்சி தானிருந்து பார்க்கப் பயப்பட்டுத் தன்னிடத்தில் அநேக வருஷங்களாய் வேலை செய்துவந்த வண்டிக்காரனை நம்பித் தான் தூரமாயிருந்துவிட்டார். சிலநாட்களுக்குப் பின் தன்னுத்தரவுபடி குதிரையைச் சுட்டுப் புதைத்துவிட்டதாக அவ்வண்டிக்காரன் தன் எஜமானருக்குத் தெரிவித்துவிட்டான். சற்றேறக்குறைய ஒருவருஷம் கிடந்தபின்னர் ஒருநாள் அக்குருவின் மகன் தன் தோட்டத்திலுலாவிக்கொண்டிருக்கையில் தோட்ட வாசப்படியண்டைக் குதிரையொன்றை யாரோ கடூரமாய் சவுக்கால் அடித்துக்கொண்டிருக்கும் ஓசையைக் கேட்டு அவ்விடத்துக்கோடிப் பார்க்கையில், ஒருவன் கிழக்குதிரையொன்றை கொஞ்சமாகிலும் தயவின்றி சவுக்கால் முரட்டுத்தனமாய் அடிப்பதை அத்துரைமகன் கண்டு கோபங்கொண்டு, அப்படியடிக்கவேண்டிய காரணத்தை விசாரித்தான். அப்பொழுது அக்குதிரைக்காரன் குதிரையந்ததோட்டவாசப்படிவிட்டுப் போகமாட்டேனென்று முரட்டுத்தனம் பண்ணுகிறதென்றான். அத்துரைமகன் நிதானித்துக் குதிரையைப் பார்க்கும்போது அது தன் தகப்பனாருடைய கிழக்குதிரை என்றும், அக்குதிரை அத்தோட்டத்தில் சுகமாய் நெடுநாள் இருந்து வந்த தன் லாயத்தின் ஞாபகங்கொண்டு அத்தோட்டத்தைத் தாண்டிப் போவதற்கு இஷ்டமில்லாமல் அங்கேயே நின்றதென்றும் அறிந்தான். அவன் பிதாவை யழைத்துக் காட்ட, அவர் அக்குதிரையை மறுபடி தன் வசப்படுத்திக்கொண்டு அதற்குப் பின்பு ஹிம்சை இல்லாமலிருக்கும்படி ஏற்பாடு செய்தனர்.

மிட்லண்ட்ஸ் என்னும் மாகாணத்தில் ஓர் துரைசானி தனக்கு வெகுநாளாய் வேலை செய்துவந்த கிழக்குதிரை இனிமேல் சுகமாய்ப் பிழைத்திருக்கச் சாத்தியப்படாதென்று கருதி, அதை இனிமேல் உயிருடன் வைத்திருப்பதைவிட அதைச் சுட்டுப்போடுவது அதற்குச் சுகமென்று தன்னிஷ்டத்துக்கு விரோதமாய் தீர்மானித்தாள். முன் மதகுருவு செய்ததுபோல் இந்த அம்மையும் தன் வண்டிக்காரனை யழைத்து அக்குதிரையைச் சுட்டுப்போட்டுப் புதைத்துவிடும்படி யுத்தரவு செய்தாள். அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தபோது அக்குதிரை சுகமாய் உலாவித் திரிந்துக்கொண்டிருந்த ஓர் புலத்திலேயே யதைப் புதைக்க பெரிய பள்ளமொன்றும் தோண்டப்பட்டது. குதிரையைத் தூரமாய்க் கொண்டுபோய் சுட்ட ஓசையையும் அத்துரைசானி காதினால் கேட்டபோது அவள் வியசனமடைந்தாலும், அக்குதிரையின் கஷ்டம் நீங்கிவிட்டதென்னும் அபிப்பிராயத்தால் அவள் திருப்தியடைந்திருந்தாள். சிலநாட்களுக்குப் பின்பு அக்குதிரையைச் சுட்டதைத் தான் கூட இருந்து பார்க்காமற்போனேமே என்கிற நினைவினால் அவள் வருந்தினாள். அக்குதிரையைச் சுட்டுப் புதைத்த துண்மைதானாவென்பதை பரிக்ஷைப்பார்க்கக் கொஞ்சம் பயந்தாலும், தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு இன்னொருவேலைக்காரனையழைத்து, குதிரையைப் புதைத்ததாகச் சொன்ன சமாதியைத் தோண்டும்படி கட்டளையிட்டாள். தோண்டிப் பார்த்தபோது குதிரையின் சபம் அக்குழியி லில்லாமையால் அத்துரைசானி விசாரிக்கத் தொடங்கினாள். குதிரைத் தரகரி யொருவன் அக்குதிரையைச் சுட்டுப் போடுவதைப்பார்க்கிலும் தனக்குச் சொற்ப பணத்துக்கு விற்றுப்போட்டால், தான் அதைக் காப்பாற்றிக்கொள்வதாயும், அப்படிச் செய்வதினால் அக்குதிரைக்கு தயவு காண்பித்த லாகுமென்றும் அத்துரைசானியின் வண்டிக்காரனுக்குப் போதித்து அக்குதிரையையவனிடமிருந்து வாங்கிக்கொண்டதாய் அத்துரைசானிக்குத் தெரியவந்தது.

இச்சம்பவங்களால் சொந்தக்காரர்கள் குதிரைகளின் விஷயத்தில் தம் வேலைக்காரர்களை எவ்வளவும் நம்பக்கூடாதென்று தெளிவாகின்றது. ஒருநாள் லந்தன் நகரத்து வீதியில் ஓர் குதிரைக்கு அடிப்பட்டு அது விழுந்தவுடனே யதை சொற்ப விலைக்குக் கொடுத்துவிட்டால் அதை உடனே ஆன்ட்வெர்ப் என்னும் பட்டணத்துக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறதாக மூன்றுபேர் கேட்டார்களாம். இப்படிப்பட்ட தயவற்ற செய்கைகளை நிறுத்த லந்தன் நகரத்திலுள்ள ஜீ. ஹி. நி. இராஜ சங்கத்தார் “குதிரைகளிடத்தில் இரக்கமுள்ள சொந்தக்காரர்களின் கூட்டம்” என்னுமோர் சபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச்சபையைச் சேர கையொப்பப் பணமொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை. கடூரமாய்க் குதிரைகளை கொஞ்ச பணத்துக்கு விற்றுப்போடுகிறவர்களையாவது, அவைகளை ஹிம்சை செய்கிறவர்களையாவது கண்டபோது அச்சங்கதியை மேற்கண்ட இராஜ சங்கத்தாருக்குத் தெரியப்படுத்தவேண்டிய கடமையொன்றே இச்சபையைச் சேருகிறவர்களைப் பொருத்தது. இப்படிச் செய்யுமுதவியினால் நாமெல்லோரும் ஜீவ ஹிம்சை நிவாரணை விஷயமாய் முயன்று வாயில்லா ஜந்துக்களின் நன்றியறிவுக்குப் பாத்திரங்களாவோம்.

ஜந்துக்களுக்கு விகடம்பண்ண கற்பித்தல்.

ஜந்துக்களுக்கு விகடம்பண்ணக் கற்பிப்பதற்குக் கற்பிப்போரிடம் இரண்டு குணங்கள் அவசியம்; பொறுமையும், அன்பும். அவைகளைக் கடினமாய் நடத்துவதினால் நம்முடைய எண்ணம் சுத்தமாய் நிறைவேறாது. ஆனால் அவைகளை அன்புடன் நடத்தினால் அவை நாம் கற்பிக்கிற விகடங்களை அதி சீக்கிரத்தில் கற்றுக்கொண்டு நமக்குச் செய்துக்காட்டும். ஒவ்வொரு ஜந்துக்கும் யாதாமொரு தின்பண்டத்தினிடம் அதிக ஆசை இருப்பதுண்டு. நாம் செய்யச்சொல்லும் விகடத்தை அது செய்ய முயன்றபோது அப்படிப்பட்ட பண்டத்தைக் கொஞ்சம் அதற்குக் கொடுத்துவந்தால், அது வெகு சீக்கிரத்தில் நாம் உத்தேசிக்கும் விகடத்தைச் செய்யக் கற்றுக்கொள்ளும். முக்கியமாய், நாம் சொல்லும் விகடத்தைத் தடையின்றி செய்தால், அதனால் தனக்கு லாபமுண்டென்கிற சங்கதி அவைகள் கவனித்து மனதில் ஞாபகம் வைத்துக்கொள்ளும்படி நல்வழிகளால்

நாம் கற்பிக்கவேண்டும். அப்படிக்கன்றி அவைகளைக் கடினமாய் நடத்தி அடிக்கடி சிக்ஷித்துவந்தால் அவை நம்முடைய கருத்துக் கிணங்கி நடப்பது மிகவும் கஷ்டமாகும், பலதரம் அசாத்தியமுமாகும்.

விகடங்களை ஜந்துக்களுக்குக் கற்பிக்க தகுதியான காலம் அவைகள் தம் பாலிய சேஷ்டைகளை விட்டு பருவத்தை அடையுமுன்னாகும். அப்படிப்பட்ட காலத்தில் கற்பிக்கும் விகடங்களை அவை சீக்கிரத்தில் கற்றுக்கொள்வதுடன், அவ்விகடங்களைத் தம் முழுகாலமும்ஞாபகத்தில்வைத்துக்கொண்டு அப்படிச் செய்துவரும். ஓர் பத்திரிகையில் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார். "டெரியர் ஜாதி நாய் குட்டியொன்று என்னிடமிருந்தது. அதற்குத் தன் குண்டியின்மேலுட்கார்ந்து முன் வலதுகாலைத் தூக்கித் தன் நெற்றியில் வைத்து சலாம்செய்ய நான் அரைமணி நேரத்தில் சுலபமாய்க் கற்பித்தேன். முதலில் தன் பின்துடைகளின்மீது அதை உட்காரவைத்து பலதரம் அதின் முன் வலது காலை அதின் நெற்றியில் வைத்தேன், பின்பு நான் சலாம் செய்யும்படி அதற்குச் சொல்ல அது அப்படி முயன்ற ஒவ்வொருதடவையும் அதற்கு மிக ஆசையுள்ள ஓர் சிறு சர்க்கரைக் கட்டியை அதற்குக் கொடுத்துவந்ததினால் அது அவ்விகடத்தைச் செய்ய அவ்வளவு சீக்கிரத்தில் கற்றுக்கொண்டது. அந்த நாய் இப்படிச் சொன்னபோதெல்லாம் செய்துவர அதிக சந்தோஷமடைந்து, பின்பு சில நாளுக்கெல்லாம் தனக்குத்தானே என்னைக் கண்டபோது சலாம் செய்ய ஆரம்பித்தது. முக்கியமாய் தனக்கு ஆகாரம் கொண்டு வரும்போது அது குதித்துக் கூத்தாடி அதிவினயத்தோடு நெடுநேரம் சலாம் செய்து வந்தது."

நாய்கள் விசேஷ புத்தியுள்ளனவாயும் நமக்குக் கீழ்ப்படிந்து நடப்பனவாயுமிருக்கின்றனவாகையால், அவைகளுக்கு நம்முடைய எண்ணங்களைச் சீக்கிரமாய் அறிவிக்கக்கூடும். பூனைகள் சுபாவத்தில் தம்மிஷ்டம்போல் மிகவும் சுயேச்சையாய் நடக்கும் ஜந்துக்களாகையால், அவைகளுக்கு விகடங்கள் செய்யக் கற்பிப்பது கொஞ்சம் கஷ்டமாகும். ஏதாவது சிறிது பலவந்தம் செய்தோமானால் அவை நமக்கடங்காமல் ஓடியேப்போய்விடும். ஆகையால் பூனைகள் விஷயத்தில் நாம் ஜாக்கிர்தையாயிருக்கவேண்டும். இல்லாவிடில் அவை நாம் சொன்னபடியொன்றும் செய்யா. அவைகளுக்குயாதொரு கஷ்டமும் காட்டாமல் அவைகளுக்கு விசேஷ ஆசையுள்ள பால், தயிர், வெண்ணெய் முதலிய தின்பண்டங்களைச் சமீபத்தில் வைத்துக்கொண்டு அன்புடன், அவைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இப்படியே நம் வீட்டில் பழகிவரும் ஒவ்வொரு ஜந்துவின் இஷ்டத்தையும் அபிஷ்டத்தையும் நாம் ஆராய்ந்து அறிந்து அவைகளுக்கேற்றபடி நடந்து வருவோமானால், அவையெல்லாம் நம் சொற்போல் நடந்து அநேக விகடமான காரியங்களைச் செய்யக் கற்றுக்கொள்ளும். ஜந்துக்கள் ஒருதரம் ஓர் விகடத்தைக் கற்றால் அதை மறவாது தன் ஆயுசுவரையில் கவனத்தில் வைத்து செய்துவரும்.

வெண்ணெய் செய்யும் தொழில்.

பங்காள கவர்ன்மெண்டாருடைய விவசாய பண்டங்களை பரிசோதிப்பவராகிய எச். இ. ஆன்னெட் என்பவர் டென்மார்க்கு தேசத்துக்குப் போய், அந்த தேசத்து இராஜாங்கத்தின் ஆதரணையின்பேரில் அவ்விடத்திய கைத்தொழில் சாலைகளைப் பார்வையிட்டு, அத்தேசத்தவர் செய்துவரும் பற்பல தொழில்களின் விதங்களை யறிந்து, தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்து, அதை ஏற்றுமதி செய்தல் முதலான முக்கியமான விஷயங்களைப்பற்றி அடியில் வருமாறு கூறுகின்றனர். டென்மார்க்கு தேசத்தாராகிய டேன்ஸ் என்பவர்கள் அநேகவிதமான கஷ்டங்களை வென்று சுகமடைந்திருக்கிறார்கள். இதற்காக அவர்களை யாரும் புகழாமலிருக்கமாட்டார்கள். 1860-ம் ஆண்டில் பிரஷ்யா ஆஸ்டிரியா தேசத்தாருக்கும் இவர்களுக்கும் நேரிட்ட சண்டையினால், இவர்களின் செழிப்பான மாகாணங்களில் முக்கியமானதாகிய ஸ்லெச்சுவக் ஹோல்டீன் என்பதை இவர்கள் இழந்துவிட்டார்கள். இவர்களின் மிகுந்த மாகாணங்களில் அதிகபாகம் பெருமணல்தரையும், சதுப்புநிலமுமாகவிருந்தது. மேற்கண்ட மாகாணத்தை இவர்கள் இழந்த பின்பு, அதற்குமுன் இவர்களுக்கு முக்கியமான தொழிலாயிருந்த விவசாயத்தின் பலன் மிகவும் குறைந்துபோனபடியால், டேன்ஸ்

கள் அக்காலத்தில் ஜீவனத்துக்கு அதிக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததாக தெரியவருகிறது. அதனால் அவர்கள் நின்ற நிலங்களையே வளமானவைகளாக செய்துகொள்ள ஆரம்பித்தார்கள். கர்னல் டால்க்சன் என்பவரே இதற்கு முன்மையாயிருந்தவர். இவ்விஷயமாக மாடுகளை சம்ரக்ஷிக்கும் சில விதிகளை ஏற்பாடுசெய்த ஐ. பிஜோர்ட்டு என்பவரை மறக்கவேகூடாது.

மேற்கூறிய வேலைகளால் மாடுகள் மிகச் சுகமடைந்து வெண்ணெய் வர்த்தகம் விசேஷித்து, அதனால் தேசத்துக்கு சௌக்கியமுண்டாயிற்று. அத்தேசத்தார் 1907-ம் ஆண்டில் 100 லக்ஷ பவுன்களுக்கதிகமான விலையுள்ள வெண்ணெயை ஏற்றுமதி செய்தனரென்பதினாலேயே அத்தொழில் அத்தேசத்தில் எவ்வளவு முக்கியமாய் செய்து வரப்படுகிறதென்பது தெளிவாகிறது. இதில் அதிகபாகம் பிரிடிஷ் தீவுகளுக்கே யனுப்பப்பட்டது. இப்படி ஏற்றுமதி செய்யும் சரக்கு மேலானதாயிருக்கும்படி சில ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அரசாட்சியாரின் உதவியினாலும் பார்வையினாலும் இந்தத் தொழில் இவ்வளவு விருத்தியடைந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. க்ஷயம் முதலிய நோய்கள் அசுத்தமான பால், தயிர், வெண்ணெயினால் உண்டாகின்றனவென்னும் பயம் டேன்ஸ்களுக்குண்டு. ஜர்மனி, இங்கிலாந்து தேசங்களைவிட டென்மார்க்கில் இப்படிப்பட்ட வியாதிகள் குறைவுதான். ஆனபோதிலும் டேன்ஸ்கள் பால் முதலானவைகளில் அசுத்தம் கொஞ்சமாகிலுமிருக்கக்கூடாதென்னும் ஆவல்கொண்டவர்களாயிருக்கிறார்கள். இக்காரணத்தால் டென்மார்க்கு தேசத்தில் ஜந்து சம்ரக்ஷணத்துக்காக சங்கங்கள் விசேஷமாய் ஏற்பட்டிருக்கின்றன. ஜந்துக்களால் நாம் அடையும் உபகாரம் விசேஷமென்னும் நன்றியறிவினால் அவைகளை நாம் ஆதரிக்காமல் போனபோதிலும், அவைகளை ஆதரித்துச் சுத்தமாய் வைக்காவிட்டால் அவைகளால் நமக்கு என்ன தீங்கு உண்டாகுமோ என்கிற பயத்தினாலாவது ஜந்துக்களுக்குப் போதுமான ஆகாரமளித்து அவைகளை சுத்தமான விடங்களில் கட்டி, மழை, வெயில், பனி முதலியவற்றால் அவைகள் நோயடையாதிருக்கும்படி பார்க்க வேண்டுமென்பது நமது கடமையல்லவா? அநேகர் யோசனைக் குறைவினால் அல்லது அக்கரைக் குறைவினால் ஜந்துக்களின் சுகதுக்கங்களைப்பற்றி கொஞ்சமாகிலும் கவலை கொள்ளாமலிருப்பது என்ன ஆச்சரியம்!

நைடிங்கேல் பக்ஷி.

இங்கிலாந்து தேசத்தில் வசந்தகாலம் ஆரம்பித்தவுடன் இந்த பக்ஷி வெகு சந்தோஷமாய் காடுகளிலும் வேலிகளிலும் இறங்கிப் பாடிக்கொண்டிருக்கும். இப்படி இருந்தும் அநேகம்பேர் இதின் ஸ்வரத்தைக் கேட்டதே இல்லை. இன்னும் பலபேர் இப்பக்ஷியைப் பார்க்காமலே அதின் மதுரமான பாட்டை மட்டும் கேட்டு ஆநந்திப்பார்கள். இச்சிறு பக்ஷி இலையுதிர்காலத்தில் சுமார் இங்கிலாந்துக்கு இரண்டாயிரம் மைல் தூரமிருக்கிற வடஆப்பிரிக்கா காடுகளுக்குப் பிரயாணமாய்ப் போகும். மறுபடி தவறாமல் வசந்த காலத்தில் இங்கிலாந்துக்கு வந்து சேரும்; முட்டையிடும் தருணத்தில் ஐரோப்பா உள்தேசங்களுக்குத் தான் வழக்கமாய்ப் போகுமிடத்துக்கே போகும். இதின் ஸ்வரம் மிக இனிதாகவும் வியசனத்துடன் கூடியதாகவுமிருக்குமென்று சாதாரண ஜனங்களேயல்லாமல் அநேக கவிகளும் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாய் இது இரவில் எல்லோரும் தூங்கிவிட்ட பின்புதான் பாடுமென்று ஜனங்கள் நினைப்பார்கள். இந்த அபிப்பிராயம் மிகவும் பிசகானது. சிலகாலத்தில் இராக்காலத்தில் நிலவில் பாடிக்கொண்டிருந்தாலும், பகலிலும் பாடுமென்பதற்குச் சந்தேகமில்லை. மற்ற பக்ஷிகள் தம் பாட்டை நிறுத்திப்போட்டபின்பும் நைடிங்கேல்மட்டும் பாடிக்கொண்டிருக்குமாகையால் இதற்கு இரவில் பாடும் பக்ஷி என்னும் பெயரை பிசகாயிட்டிருக்கிறார்கள். வெகுபேர் இதின் ஸ்வரத்தைக் கேட்டுத் தம்முடைய நித்திய கஷ்ட நிஷ்டூரங்களையும் வியசனங்களையும் முழுமையும் மறந்துவிட்டு ஆநந்தக்கடலில் தற்காலம் முழுகிவிடுகிறார்கள். நமக்கு இவ்வளவு சுகத்தைத்தருகிற இப்பக்ஷியைப்போன்ற பக்ஷிகளிடத்தில் நாம் எவ்வளவு அன்புடனும் கனிகரத்துடனும் இருக்கவேண்டும்! அப்படிக்கன்றிச் சிறு பிள்ளைகள் சிலர் பக்ஷிகளையும் குருவிகளையும்

கண்டபோது அறியாமையினுல் அவைகளை அடிப்பதும் பிடிக்கப்போகிறதும், அவைகளின் சிறகுகளைத்துண்டிப்பதும்அவைகளின் குஞ்சுகளையும் முட்டைகளையும் கூண்டிலிருந்து அப்புறப்படுத்துவதுமான காரியங்கள் செய்வதில் சந்தோஷிப்பார்கள். அவர்கள் அப்படிப்பட்ட கெட்ட செய்கைகளை விட்டு, மற்றவர்களையும் அப்படிச் செய்யாமல் தடுத்து, பக்ஷிகள், குருவிகள், அவைகளின் குஞ்சுகள் முட்டைகள் விஷயத்தில் தயவுடன் நடந்து, அவைகளைப் பாதுகாத்து அன்போடு இரக்ஷிக்கவேண்டுமெனக் கோருகிறோம்.

வர்த்தமானக் குறிப்புகள்.

சென்னை ஜீ. ஹி. நி. சங்கம்.

1. **விசாரணைக் கமிட்டி.**—கனம்பொருந்திய பி.எஸ். சிவசுவாமி ஐயரவர்களும், ஆர். சி. சி. கார்துரையவர்களும் இச்சங்கத்துக்கு உப அக்கிராசனுதிபதிகளாகவிருக்க அங்கீகரித்திருக்கிறார்கள். ஸர். எல். சி. மில்லர் துரையவர்கள் மைசூரில் பிரதான நியாயாதிபதி உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டபடியினுல், அவர் இச்சங்கத்து உப அக்கிராசனுதிபத்தியத்தை இராஜிஞமா கொடுத்துவிட்டார். மஹம்மத் சாதுல்லா சாஹேப்பு அவர்களும், கொல்லா வெங்கடராகவ செட்டியாரவர்களும், பதரிதாஸ் பிரஜரத்னதாஸ் தாகா அவர்களும் இச்சங்கத்து மெம்பர்களாகவிருக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

2. **பஞ்சரப்போலில் இளைய தேகசவுக்கியமுள்ள ஜந்துக்கள்.** — பஞ்சரப்போல் சப்கமிட்டிக்கு உப அக்கிராசனுதிபதியாயிருந்த மேஸ்தர் எல். எம். உஞ்சு துரையவர்கள், இளைய தேகசவுக்கியமுள்ள ஜந்துக்களை அவை நியாயமாய் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் பஞ்சரப்போலில் நிர்ப்பந்தப்படுத்தி வைப்பது கடூரமென்று அபிப்பிராயப்பட்டதினுல், அவர் அப்படிப்பட்ட ஜந்துக்களைப் பணம்பெற்றுக்கொண்டாவது பெற்றுக்கொள்ளாமலாவது கனவான்களுக்குக் கொடுத்து, பின்னிட்டு அவை வேலைக்குதவாமல் போகிறபோது அவர்கள் அவைகளைப் பஞ்சரப்போலுக்குத் திருப்பி யனுப்பிவிடவேண்டுமென்னும் நிபந்தனை ஏற்படுத்தலாமென்று சப் கமிட்டியாருக்கு எடுத்துக்காட்டினர். அந்த சப்கமிட்டியார் இதை அங்கீகரிக்காததினுல், இச்சங்கதி ஜீ. ஹி. நி. சங்கத்து கமிட்டி கூட்டத்தில் பிரஸ்தாபத்துக்கு வந்தது. அப்பொழுது இச்சங்கத்து கமிட்டியார் பொம்பாய், கல்கத்தா பஞ்சரப்போல்களில் இவ்விஷயத்தில் நடக்கும் ஆசாரத்தை எழுதி தெரிந்துகொள்ளும்படியும், பஞ்சரப்போல் சப்கமிட்டியாரை உஞ்சு துரையவர்களின் அபிப்பிராயத்தை அனுசரிக்க மறு ஆலோசனை செய்யக் கேட்டுக்கொள்ளும்படியும் தீர்மானித்தார்கள். கல்கத்தா பஞ்சரப்போலுக் கெழுதியதில், சாதாரணமாய் இளைய தேக சவுக்கியமுள்ள ஜந்துக்களை ஜனங்கள் பஞ்சரப்போலுக் கனுப்புகிறதில்லை என்றும், பஞ்சரப்போலுக் கனுப்பிய ஜந்துக்களை மறுபடி வெளியாருக்குக் கொடுக்கிறதில்லை என்றும் பதில் கிடைத்தது. பொம்பாய் பஞ்சரப்போலுக் கெழுதியதற்கு, தங்கள் பஞ்சரப்போலுக்கனுப்பிய நல்ல ஸ்திதியிலிருக்கிற ஜந்துக்களை, அவை வேலைக்குதவாதபோது திருப்பி யனுப்பிவிட வேண்டுமென்கிற நிபந்தனையுடன், கனவான்களுக்குக் கொடுத்து வைப்பதுண்டென்று தெரியவருகிறது. ஆகையால் இவ்விஷயத்தில் கமிட்டியார் மறுபடி ஆலோசித்து ஒரு விதமாய் தீர்மானிக்கவேண்டியதாயிருக்கிறது.

3. **சங்கத்து தர்ம வைத்தியசாலை.**-1913-ஞ ஆகஸ்ட்டுமீ 1-ம் தேதியில் நடந்த கமிட்டி கூட்டத்தில் காரியதரிசி சொன்னபடி ஆறு மாசகாலம் ஜந்துக்களுக்காக ஓர் தர்ம வைத்தியசாலையை வைத்துப் பார்க்கும்படி தீர்மானிக்கலாயிற்று. அந்தத் தீர்மானத்தை யனுசரித்து 1914-ஞ பெப்ருவரிமீ 1ல்பில் கோமலீஸ்வரன்பேட்டை ஹாரிஸ்ரோட்டு 'ஜானகி விலாஸ்' என்னுமிடத்தில் தர்மவைத்தியசாலையை வைத்து, அதில் மேஸ்தர் எஸ். ஏ. பத்மனுபப்பிள்ளை ஜீ. பி. வி. சி. என்பவரை சிகிச்சைக்காக வைத்தியராக நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வைத்தியசாலைக்கு அடியிற்கண்ட நிபந்தனைகள் செய்யப்பட்டன:-

(i) இவ்வைத்தியசாலை ஜீ. ஹி. நி. சங்கத்து தர்ம வைத்தியசாலை எனப்படும்.

(ii) ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் தவிர எல்லா தினங்களிலும் காலை 7 முதல் 10 மணி வரையிலும், மாலை 3 முதல் 5 மணி வரையிலும் வைத்தியசாலை திறந்திருக்கும். அவசரமான காரியங்களை அவ்விடத்திலேயே குடியிருக்கும் ஜந்து வைத்தியர் எந்த நேரத்திலும் பார்த்துவருவார்.

(iii) ஏழைகளுடைய எல்லா ஜந்துக்களுக்கும் வைத்தியசாலையில் தர்மத்துக்கு வைத்தியம்செய்யப்படும்; ஆனுல் அவர்கள் ஜீ. ஹி. நி. சங்கத்தின் ஓர் கமிட்டி மெம்பரிடத்திலிருந்தாவது அல்லது சூபரின்டென்டெண்டினிடத்திலிருந்தாவது சாத்தியமானவரையில் ஓர் சர்ட்டிபிகேட்டைக் கொண்டுவர வேண்டும்; அப்படி அவர்கள் சர்ட்டிபிகேட்டு கொண்டுவர முடியாதபக்ஷத்தில், அவ்விடத்திய ஜந்து வைத்தியர் அவைகளுக்கு தர்மத்துக்கோ அல்லது வேறுவிதமாகவோ தனக்கு யுக்தமாய் தோன்றுகிறபடி வைத்தியம் செய்வார்.

(iv) வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தால், எல்லா வகுப்பு ஜனங்களின் கால்நடைகளுக்கும் செலவில்லாமல் வைத்தியம் செய்யப்படும்.

(v) மேற்சொன்னவைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும், அவ்விடத்திலிருக்கும் ரண வைத்தியர் ஜந்துக்களின் சொந்தக்காரரிடத்தில் தன்னிஷ்டம்போல் ஏற்பாடுகளைச் செய்துகொள்வார்.

சென்ற ஜுலைமாசத்துடன் முடிந்த பரிசைபார்த்த ஆறுமாசகாலத்தில் பல ஜந்துக்களுக்கு இவ்வைத்தியசாலையில் வைத்தியம் செய்து. அவைகள் அநுகூலமடைந்தபடியினுல், இதை முன்னிட்டும் நடத்திவரும்படி கமிட்டியார் தீர்மானித்து இவ்வைத்தியசாலை நடந்துவருகிறது.

4. **மைனர் ஜமீந்தார்களின் நன்கொடை.**-கோர்ட் ஆப் வார்ட்ஸ் விசாரணையிலிருக்கப்பட்ட பாலிய ஜமீந்தார்களிடமிருந்து இச்சங்கத்துக்கு ஏதேனும் தொகைகளை நன்கொடையாய் கொடுப்பிக்கக் கூடுமோவென்று கோர்ட் ஆப் வார்ட்ஸ் சபையின் பிரசிடென்டாகிய கனம்பொருந்திய மேஸ்தர் ஆர். சி. சி. கார்துரை யவர்களுக்கு இச்சங்கத்து கௌரவ காரியதரிசி எழுதியதில், சில ஜமீந்தார்கள் ரூபாய் 945 வரையில் நன்கொடையாய் இச்சங்கத்துக் கனுப்பினார்கள். இவ்வுதவிக்காக கமிட்டியார் மேற்கண்ட ஜமீந்தார்களுக்கும் கோர்ட் ஆப் வார்ட்ஸுக்கும் வந்தனங்களைச் செலுத்துகிறார்கள்.

(iii) ஏழைகளுடைய எல்லா ஜந்துக்களுக்கும் வைத்தியசாலையில் தர்மத்துக்கு வைத்தியம்செய்யப்படும்; ஆனுல் அவர்கள் ஜீ. ஹி. நி. சங்கத்தின் ஓர் கமிட்டி மெம்பரிடத்திலிருந்தாவது அல்லது சூபரின்டென்டெண்டினிடத்திலிருந்தாவது சாத்தியமானவரையில் ஓர் சர்ட்டிபிகேட்டைக் கொண்டுவர வேண்டும்; அப்படி அவர்கள் சர்ட்டிபிகேட்டு கொண்டுவர முடியாதபக்ஷத்தில், அவ்விடத்திய ஜந்து வைத்தியர் அவைகளுக்கு தர்மத்துக்கோ அல்லது வேறுவிதமாகவோ தனக்கு யுக்தமாய் தோன்றுகிறபடி வைத்தியம் செய்வார்.

(iv) வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தால், எல்லா வகுப்பு ஜனங்களின் கால்நடைகளுக்கும் செலவில்லாமல் வைத்தியம் செய்யப்படும்.

(v) மேற்சொன்னவைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும், அவ்விடத்திலிருக்கும் ரண வைத்தியர் ஜந்துக்களின் சொந்தக்காரரிடத்தில் தன்னிஷ்டம்போல் ஏற்பாடுகளைச் செய்துகொள்வார்.

சென்ற ஜுலைமாசத்துடன் முடிந்த பரிசைபார்த்த ஆறுமாசகாலத்தில் பல ஜந்துக்களுக்கு இவ்வைத்தியசாலையில் வைத்தியம் செய்து. அவைகள் அநுகூலமடைந்தபடியினுல், இதை முன்னிட்டும் நடத்திவரும்படி கமிட்டியார் தீர்மானித்து இவ்வைத்தியசாலை நடந்துவருகிறது.

4. மைனர் ஜமீந்தார்களின் நன்கொடை.-கோர்ட் ஆப் வார்ட்ஸ் விசாரணையிலிருக்கப்பட்ட பாலிய ஜமீந்தார்களிடமிருந்து இச்சங்கத்துக்கு ஏதேனும் தொகைகளை நன்கொடையாய் கொடுப்பிக்கக் கூடுமோவென்று கோர்ட் ஆப் வார்ட்ஸ் சபையின் பிரசிடென்டாகிய கனம்பொருந்திய மேஸ்தர் ஆர். சி. சி. கார்துரை யவர்களுக்கு இச்சங்கத்து கௌரவ காரியதரிசி எழுதியதில், சில ஜமீந்தார்

ஜீவிக்கும் சி. பாய்டன் என்னும் துரை வேலைசெய்ய முடியாத கிழக்குதிரை யொன்றை அதற்குப் போதுமான ஆகாரம் கொடுக்காமல் வண்டியில் பூட்டி யோட்டிவந்தாக மெஸர்ஸ் பியர்ட்செல் கம்பெனியைச்சேர்ந்த ஏப். எல். கோல்ஸ்துரை இச்சங்கத்து காரியதரிசிக்குத் தெரியப்படுத்தினர். அக்குதிரைத் தேறுகிறவரையில் அதை உபயோகிக்கக் கூடாதென்று அத்துரைக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

8. **நாயைக் கரேமாய் நடத்தியது.**—புதுப்பேட்டை மைதானத்தில் ஓர் நாயை சிறிய வண்டியில் பூட்டி, அந்த வண்டிக்காரன் அதை பெரிய தடியால் அடித்துக்கொண்டிருந்ததை மார்க் ஹண்டர் துரைசானிப் பார்த்து அவனையும் அந்த வண்டியையும் நாயையும் ஓர்போலீஸ்சேருவனிடம் ஒப்பிவித்துப் போட்டார்கள். அச் சேருவன் அவனை எழும்பூர் பெஞ்சு கோர்ட்டுக்குக் கொண்டு போய் விட்டபோது, துரைசானியும் சாக்ஷியாய்ப் போய் தான் பார்த்ததைச் சொல்ல, அக்கோர்ட்டார் அவ்வண்டிக்காரனுக்கு ரூபாய் 5 அபராதம் விதித்தார்கள்.

சென்ற ஜந்துக்காட்சி நடந்தபோது இவ்வண்டிக்காரன் நாய்கள் குரங்குகள் வேடிக்கை காட்டியதற்கு அவனுக்கு ரூபா 5 இனாம் கொடுத்திருந்ததாகவும் அத்துரைசானி எழுதிய கடிதத்தில் கண்டிருந்தார்கள். இச்சங்கதி கமிட்டி கூட்டத்தில் பிரஸ்தாபத்துக்கு வந்தபொழுது, ஜந்துகாட்சியில் இப்படிப்பட்டவர்களுக்கு வெகுமதி அளிக்கும் விஷயம் யோசிக்கவேண்டியதென்று கமிட்டியார் தீர்மானித்தார்கள்.

9. **[illegible] ஜீவ வர்த்தமான ஸாரம்.**—கோயம்புத்தூர் ஜில்லாவிலிருக்கிறபாடசாலைகளில் ஜந்துக்களை [illegible] மென்கிறதைப்பற்றிய புத்திமதிகளை [illegible] வேண்டுமென்றும், அப்படிச் செய்வதற்கு இச்சங்கத்தார் அனுப்பிவிருக்கும் [illegible] வர்த்தமான ஸாரம் என்னும் பத்திரிகை மிகவும் உபயோகமாயிருப்பதாகவும், அப்பத்திரிகை [illegible]காம் செய்யும் ஒவ்வொரு கடமையாருக்கு தமக்கு 200 பிரதிகளை அனுப்பவேண்டுமென்றும் கோரி கோயம்புத்தூர் ஜீ. ஹி. ரி. சங்கத்தின் காரியதரிசி எழுதியிருந்தார். இப்பத்திரிகை அச்சிடுவதற்காகும் செலவுக்காக தாமும் பணமுதவி செய்வதாய் வாக்களித்ததின்பேரில், இச்சங்கத்து காரியதரிசி அப்படியே கோயம்புத்தூருக்குப் பிரதிகளையனுப்பவுத்தரவு கொடுத்த சங்கதியை கமிட்டியார் அங்கீகரித்தார்கள்.

10. டோகியோ சங்கம்.—ஜபான் தேசத்தில் டோகியோ என்னும் பட்டணத்தில் ஜீ. ஹி. ரி. சங்கமொன்று நூதனமாய் ஏற்பட்டிருக்கிறது. அதை அத்தேசத்து ஸ்திரீகளே நடத்திவருகிறார்கள். ஜபான் தேசத்தார் சாதாரணமாய் பட்சமுள்ளவர்கள்தான். ஆனால் தொழிலாளிகளாகிய கீழ்மக்கள் இந்தியாவில் செய்வதுபோலவே அத்தேசத்திலும் ஜந்துக்களை யோசனையின்றி உபத்திரவம் செய்கிறார்கள். கல்வியடைந்தவர்கள் செல்வமாய் வளர்க்கும் ஜந்துக்களை அன்பு விசுவாசத்துடன் நடத்திவருகிறார்கள். வாயில்லா ஜந்துக்களுக்காகவென்று அத்தேசத்தார் ஓர் சமாதி இடமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனதால் கல்வி பயிற்சியடைந்த ஸ்திரீகள் ஜீவ ஹிம்சை நிவாரணம் செய்யும் காரியங்களில் உதவிபுரிதல் சகஜந்தான். அப்படியே இந்தியாவிலும் மேன்மக்களாகிய ஸ்திரீகள் சேர்ந்து இப்புகழத்தக்க காரியத்தில் ஊக்கத்துடன் வேலைசெய்து வருவார்களெனக் கோருகின்றோம்.

162038

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—1914.